விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 85 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 07, வெள்ளிக்கிழமை 19.02.2016

www.nlb.lk
மஹஜன சம்பத
இன்றைய அதிர்ஷ்டம் உங்கள் கையிலா?
NLB
வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசிர்வாதம்

## திடீரெனத் திசை மாறுகின்றது வடக்கு-கிழக்கு வீட்டுத் திட்டம்

### அநுராதபுரம், பொலநறுவை, புத்தளம் மாவட்டங்களும் இதில் உள்ளடக்கம்

யாழ்ப்பாணம், பெப். 19

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில், தற்போது அநுராத புரம் – பொலநறுவை – புத்தளம் ஆகிய மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியேற்ற அமைச்சினால், வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2.1 மில்லியன் ரூபா செலவில் ஒவ்வொரு வீடுகளும் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களுக்கே இந்த வீட்டுத் திட்டம் முழுமையாக வழங்கப்படும்என்றும்தெரிவிக்கப் பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் பக். 23

முச்சந்தி முரளி



சுட்டுப் பழகின கை சும்மா கிடக்குதில்லை பாருங்கோ...



சாவகச்சேரி ஈழவாரியம்பதி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் நேற்றைய ஆறாம் திருவிழாவின் போது, மீனாட்சி அம்மன் தமிழீழ அலங்காரத்துடன் எழுந்தருளிய காட்சி.

## தீர்வு குறித்து ஆராய தமிழ்க் கூட்டமைப்பில் 10 பேர் கொண்ட குழு

### பங்காளிக் கட்சிகளில் இருந்து தலா இருவர் நியமிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 19

இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் ஆராய்வதற்காக, 10 பேர் கொண்ட குழு ஒன்றைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டத்தின்போது நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிலிருந்து தலா இருவர் என்ற அடிப்படையில் இதில் நியமிக்கப்படவுள்ளதாக, நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் திடீரென, நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு, எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட் பக். 23

## போர்ப் பயிற்சிக்காகவே மிகைஒலி விமானப் பறப்பு

யாழ்ப்பாணம், பெப். 19

கடற்படையினரும் – விமானப் படையினரும் இணைந்து பருத்தித்துறைக் கடற் பரப்பில் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். இதன் காரணமாகவே, யாழ்.குடாநாட்டு பக். 25

## வன்புணர்வின் பின் மாணவி படுகொலை

### உடற்கூற்றுப் பரிசோதனையில் உறுதி

வவுனியா, பெப். 19

வவுனியாவில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட பின்னர் கொல்லப்பட்டுள்ளார் என்று நேற்றைய உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

கொழும்பிலிருந்து வந்திருந்த சட்ட மருத்துவ நிபுணர் ஜே.சி.சமரவீர, பக். 25

## ஆசிரியர் விடுதிக் கதவுகளை நள்ளிரவில் தட்டும் ராணுவம்

கிளிநொச்சி, பெப். 19

முழங்காவில் மகாவித்தியாலய ஆசிரியர்கள் தங்கியுள்ள விடுதிக்கு நள்ளிரவில் செல்லும் படையினர் விடுதிக் கதவுளைத் தட்டுவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் இடம்பெற்றது என்பதைப் பாடசாலை அதிபர் உறுதிப்படுத்தினார்.

இது குறித்து முகாம் பொறுப்பதிகாரிக்கு முறையிட்டுள்ளதாகவும், குறித்த படையினரை இடம் மாற்ற நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளதாகவும் பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(விரிவு 4ஆம் பக்கத்தில்)

## வலி.வடக்கு மீள்குடியமர்வே இப்போது முதன்மையானது

### அதன் பின்னர் பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு குறித்து மக்கள் முடிவெடுக்கவேண்டும் என ஏகமனதாகத் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 19

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயரச் செய்யப்பட்ட வலி.வடக்கு மக்கள் அனைவரும் அவர்களது சொந்த மண்ணில் மீளக் குடியமர்த்தப்படவேண்டும். அதன் பின்னரே, பலாலி விமான நிலையத்தை விஸ்தரிப்பதா இல்லையா என்பது தொடர்பில் அந்த மக்கள் முடிவெடுக்கவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் மற்றும் மயிலிட்டி மக்கள் இணைந்து ஏகமன தாகத் தீர்மானத்தை பக். 25

## குற்றச்சாட்டை அடுத்து கூட்டம் நடத்தும் அமைச்சர் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், பெப். 19

வடக்கு மாகாண விவசாய அமைச்சர், அமைச்சு மட்ட ஆலோசனைக் குழுக் கூட்டங்களை நடத்துவதில்லை என்று வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வில் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டிருந்த நிலையில், எதிர்வரும் 23 ஆம் திகதி அமைச்சு மட்ட ஆலோசனைக் குழுக் கூட்டம் நடத்தப்படும் என்று விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் உறுப்பினர்களுக்கு அறிவித்திருக்கின்றார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்றிருந்தது.

இந்த அமர்வில் பக். 25

## மகிந்தவிடம் மீண்டும் விசாரணை

கொழும்பு, பெப்.19

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீண்டும் நேற்று பெரியளவிலான மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவினால் விசாரணைக்கு பக். 24

## குடிதண்ணீர் வழங்கும் பொறுப்பு இல்லையெனில் ஐங்கரநேசன் அறிக்கைகள் வெளியிடுவது எதற்காக?

### தண்ணீரில் எண்ணெய் கலந்த விடயம் தொடர்பில் மன்றில் முன்னிலையாகித் தெளிவுபடுத்துமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், பெப். 19

தண்ணீரில் எண்ணெய் கலந்த இடங்களைச் சேர்ந்த மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டிய பொறுப்பு வடக்கு மாகாண சபைக்கு இல்லை என்று மாகாண அமைச்சர் ஐங்கர நேசன் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படியாயின் அது பற்றி நிபுணர் குழுக்களை அமைத்து ஆய்வு செய்ததுடன், அது குறித்து அறிக்கைகளை வெளியிட்டு வருவது எதற்காக என்றும் கேள்வி எழுப்பியுள்ள நீதிமன்று, அதனை நீதிமன்றுக்கு வந்து தெளிவு படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளது.

சுன்னாகம் உள் ளிட்ட பல பகுதி பக். 23

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'ஈகோ' வுடனான முடிவையே எடுக்கிறார் இரா. சம்பந்தன்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், பெப். 19
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், 'ஈகோ' வுடனான நிலைப்பாட்டைத்தான் எடுக்கின்றார். தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையின் அடிப் படைகளை விளங்கிக் கொண்டு கதைப்பதாகத் தெரியவில்லை.- இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப் பின் செயலாளரும் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினருமான க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கட்டைப்பிராயிலுள்ள அவரது இல் லத்தில் நேற்று நண்பகல் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழ் மக்கள் பேரவையுடன் பேசப் போவதில்லை என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையின் முக்கியஸ்தர் என்ற அடிப்படையில் உங்களின் நிலைப் பாடு என்ன என்று ஊடகவி யலாளர் ஒருவரினால் எழுப்பப்பட்ட கேள்விக் குப் பதிலளிக்கையிலேயே சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவை தீர்வுத் திட் டத்தை வெளியிட்டுள்ளது. அது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினதும் அதன் பங்காளிக் கட்சிகளினதும் நிலைப்பாடு தெளிவு படுத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் பேரவை தீர்வுத் திட் டத்தைத் தயாரிக்க உப குழுவை நிய மித்தது. இதில் நிபுணர்கள், கட்சி களின் பிரதிநிதிகள் இருந்தனர். இரா.சம்பந்தன், இதிலே தோற்றுப் போனவர்கள் என்று யாரைக் குறிப் பிடுகின்றார் என்று தெரியவில்லை. இது வெறுமனே ஈகோ சம்பந்தமான - கர்வம் சம்பந்தமான ஒரு நிலைப் பாடாகத் தெரிகின்றது. தமிழ் மக் களின் தேசியப் பிரச்சினையின் அடிப்படைகளை விளங்கிக் கொண்டு கதைப்பதாகத் தெரிய வில்லை. - என்று சுரேஷ்பிரேமச் சந்திரன் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்வுத் திட்டத்தை முன்வைக்காமையா லேயே தமிழ் மக்கள் பேரவை தீர்வுத் திட்டத்தை முன்வைத்துள்ளது. தோற்றுப் போனவர்கள் உருவாக்கிய தீர்வுத் திட்டம் என்று சொல்வது அர்த் தமற்ற, ஒரு பொறுப்புணர்வு அற்ற கருத்தாகவே நான் பார்க்கின்றேன். தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். அதனை யார் முன்வைத்தாலும் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது அது பற்றி விவாதிக்க வேண்டும் - என் றும் சுரேஷ் குறிப்பிட்டார்.

தோற்றுப் போனவர்கள் என்ற அடை யாளத்தில் நானும் அடங்கக் கூடும். தோற்றுப்போனவர்கள் என்ற விடயம் எவ்வாறானது என்பது கேள் விக்குரிய ஒன்று.

இதேவேளை, இந்தக் கால கட்டத்தை விட்டால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கடினம் என்று இரா.சம் பந்தனே சொல்லுகின்றார். ஒரு பக் கம் சர்வதேச அழுத்தம் - தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு இருக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. இவை உண்மையாக இருந்தால், நிச்சய மாக சம்பந்தன் 'நான்தான்' என் பதை விடுத்து இதனை எல்லோரும் இணைந்து செய்ய முன்வர வேண் டும்- என்றும் சுரேஷ்பிரேமசந்திரன் தெரிவித்தார்.

(ற-5)



## ஆரோக்கியக் கண்காட்சி மருத்துவபீட வளாகத்தில்

யாழ்ப்பாணம், பெப்.19
வடக்கு மாகாண சுகாதார அமைச்சும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறை யும் இணைந்து 35 ஆம் அணி மருத்துவ மாண வர்களின் பங்களிப்புடன் நடத்தும் ''மாகாண ஆரோக்கிய விழா-2016" எனும் மாகாண ஆரோக் கிய விழாவும், கண்காட்சி யும் நேற்று வியாழக் கிழமை யாழ்ப்பாணப் பல் கலைக்கழக மருத்துவபீட வளாகத்தில் ஆரம்பமா கின.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசுந்தி அரசரட்ணம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். இந்தக் கண்காட்சி நிகழ் வுகள் இன்று வெள்ளிக் கிழமையும், நாளை சனிக் கிழமையும் மு.ப. 10 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை இடம்பெறவுள்ளன. சிறுவர் முதல் வயோதிபர் வரை அனைத்துத் தரப் பினருக்கும் ஏற்ற பலதரப் பட்ட ஆரோக்கிய வாழ்க்கை முறைகளைப் பிரதிபலிக் கும் விதமாக 6 தனித் தனி பிரிவான காட்சிக் கூடங்கள் அமைக்கப் பட்டுள்ளன.



ஆரோக்கிய உண வுகள், சிற்றுண்டி கள் மற்றும் பானங்களின் தயாரிப்பு முறை கள், சிறுவர்க ளுக்கானஉணவு தயாரிக்கும்முறை களும் பாரம் பரிய உணவு தாயாரிக்கும் முறைகளும், தொற்றா நோய்த் தடுப் பில் அவற்றின் பங்கு தொடர்பாகவும் தயாரிக் கப்பட்ட உணவு வகை களின் காட்சிப்படுத்தல் களும் அதில் இடம் பெற்றி ருந்தன.

குறித்த உணவு வகை களை ருசித்துப் பார்ப் பதற்கான சந்தர்ப்பமும், சேதன முறையிலான வீட்டுத் தோட்டம் அமைத் தல் பற்றிய செயன்முறை, உடற் பயிற்சி மற்றும் வாழ்க்கைமுறை சீர மைப்புப் பயிற்சிகளும், இலவச பரிசோதனை களைப் பெற்றுக் கொள் ளும் சந்தர்ப்பமும் கண் காட்சியில் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

இந்தக்கண்காட்சிக்கூடத்தை

ஆரோக்கிய உணவு தயா ரித்தல் மற்றும் வாழ்க்கை முறை மறுசீரமைப்புத் தொடர்பான குறிப்புகள் அடங்கிய கையேடுகள் மற் றும் இறு வட்டுக்களும் பார் வையாளர்களுக்கு வழங் கப்படுகின்றன.

ஆரம்பநாள் நிகழ்வுகளில் யாழ். பல்கலைக்கலக மருத்துவ பீட பீடாதிபதி ஆர். ரவிராஜ், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், பீடா திபதிகள், விரிவுரையாளர் கள், மருத்துவ மாணவர் கள், பாடசாலை மாணவர் கள், முன்பள்ளிச் சிறார் கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(ற- ஐ-ரி2-106)

### இ.போ.ச. பஸ் கட்டணம் குறைப்பு

யாழ்ப்பாணம், பெப்.19
கச்சதீவுத் திருவிழாவை முன்னிட்டு நாளை சனிக் கிழமை அங்கு செல்லும் அடியவர்களின் நலன் கருதி யாழ் குறிகட்டுவான் சேவைக்கான பஸ் கட் டணம் ஒரு வழிக்கட்டண மாக ரூபா 70 அறவிடு வதற்கு இ.போ.ச. தலை மைக் காரியாலயம் அனு மதி வழங்கியுள்ளது என்று யாழ். சாலை முகா மையாளர் செ.குலபா லசெல்வம் தெரிவித் துள்ளார். (ற-ஐ-ரி2)

### யாழ்.பல்கலை. சட்டத்துறையின் தச விழா

யாழ்ப்பாணப் பல்கலை கழக சட்டத்துறையின் 10 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு தசவிழா நாளை மறுதினம் காலை 9 மணிக்குபல்கலைக்கழக கைலாசபதி கலையரங் கில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தி னராக பிரதம நீதியரசர் க.ஸ்ரீபவன் கலந்து கொள் ளவுள்ளார். கௌரவ விருந்தினராக பல்கலை கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித் தவிசாளர் பேராசிரியர் பி.எஸ்.எம்.குணரத்தி னவும், யாழ்.பல்கலைக ழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்ளவுள்ள னர். இந்த நிகழ்வில் தச விழாவின் ஞாபகார்த்த மலர் வெளியிடப்படவுள் ளது. அத்துடன் சட்ட மாண வர் சங்கத்தின் வருடாந்தச் செயற்பாடான நீதம் மலர் வெயியீடும் இடம்பெற வுள்ளது. (ற-ஐ-ரி4)



## மாங்குளத்தில் விபத்து; 6 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப்.19
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த வங்கி ஊழியர்களது ஹையஸ் வாகனம் நேற்று அதிகாலை ஏ-9 வீதியில் மாங்குளம் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது. அதில் பயணித்த 6 பேர் படுகாயமடைந்துள்ள னர்.

குறித்த வாகனம் வீதியில் பயணித்த போது விலங்கு ஒன்று வீதிக்குக் குறுக் காகச் சென்றது என்றும், அதை மோதாது தவிர்க்க முற்பட்டபோது கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியோர மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது என்று கூறப்படுகின்றது. விபத்தில் சாரதி உட்பட 6 பேர் படுகாயமடைந்து மாங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவு னியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பில் மாங்குளம் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

(ற-ஐ-101)

## ஐயாயிரம் புசல் விதை நெல் யாழ். விவசாயிகளிடம் கொள்வனவு

யாழ்ப்பாணம், பெப்.19
யாழ். குடாநாட்டு விதை உற்பத் திக் கூட்டுறவுச் சங்கம் இம்முறை ஐயாயிரம் புசல் விதை நெல்லை விவசாயிகளிடம் இருந்து கொள் வனவு செய்யவுள்ளது என்று சங் கத்தின் பொதுமுகாமையாளர் ரி.ரவி மயூரன் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு மூவாயிரம் புசல் விதை நெல்லை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்து பின் னர் அது பெரும்போக நெற் செய்கைக்கு என விநியோகிக்கப் பட்டது.

> கடந்த போகத்தின் போது விவசாயிகள் கூடு தலான விதை நெல்லைப் பெற்றதால் சங்கத்தில் அவற்றுக்குப் பற்றாக் குறையும் ஏற்பட்டது. அதை யடுத்து இம்முறை அதிக அளவு நெல் கொள்வனவு செய் யப்படவுள்ளது.

கடந்த போகத்தின் போது விவசாயி கள் கூடுதலான விதை நெல்லைப் பெற்றதால் சங்கத்தில் அவற்றுக் குப் பற்றாக்குறையும் ஏற்பட்டது. கடந்த வாரம் யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட் டத்தில் இந்த முறை ஐயாயிரம் புசல் விதை நெல்லைப் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்து பெறுவதற்கான அனும தியை யாழ். அரச அதிபர் வழங் கினார்.

அரச அதிபரின் அனுமதியை அடுத்து குறித்த சங்கம் விவசாயி களிடம் இருந்து நெல் லைக் கொள்வனவு செய்ய வுள்ளது.

கொள்வனவு செய்யப்படும் இந்த நெல்லைப் பாது காப்பாக வைப்பதற்கான களஞ்சிய வசதிகளைச் சங்கம் ஏற்படுத்தி வரு கின்றது.

விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் இந்த நெல் உரிய முறையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு சேமித்து வைக் கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டது.

(ற-ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக் கிணற்றினுள் பாய்ந்து மாணவி தற்கொலை முயற்சி

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, பெப்.19

கிளிநொச்சி, ஆனந்தபுரத்தில் தனது வீட்டுக் கிணற்றில் குதித்து மாணவி ஒருவர் தற்கொலை முயற்சி மேற்கொண்டுள்ளார்.

கிளிநொச்சி பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 15 வயதுடைய குறித்த மாணவி நேற்று மாலை தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று வந்த நிலையில் கிணற்றில் குதித்து தற்கொலை செய்ய முயன்றுள்ளார்.

எனினும் கிணற்றில் மாணவி பாய்ந்த சத்தத்தை அறிந்த அயலவர்கள் அவரைக் காப்பாற்றியுள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கிளிநொச்சி பாடசாலை ஒன்றில் கல்விகற்கும் குறித்த மாணவி, கடந்த சனிக்கிழமை காலையில் பாடசாலை விடுமுறை தினத்தில் மேலதிக வகுப்பிற்குச் சென்றுள்ளார்.

இதன்போது, மேலதிக வகுப்பு நிறைவுற்றதும் ஏனைய மாணவர்களை அனுப்பிவிட்டு குறித்த மாணவியை வகுப்பறையில் இருக்குமாறு தெரிவித்து ஆசிரியர் துஷ்பிரயோகம் மேற்கொள்ள முயன்றுள்ளார்.

இதனால் பதற்றமடைந்த மாணவி, அங்கிருந்து வெளியேறி வீட்டுக்குச் சென்றுள்ளார். இதனைக் குறித்த மாணவி தனது பெற்றோரிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பெற்றோர் பாடசாலை அதிபர், கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் கவனத்துக்குக் கொண்டு சென்றபோதும் மாணவியின் எதிர்காலம் கருதி பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை. இது தொடர்பில் கல்வித் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் மாணவி தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்ற வேளையில் அங்கு சில மாணவிகள் கதைத்ததாக அறிந்து மனமுடைந்த நிலையில் வீடுதிரும்பியுள்ளார். அதன்பின் சிறிது நேரத்தில் கிணற்றில் பாய்ந்து தற்கொலைக்கும் முயன்றுள்ளார்.

இருப்பினும் அயலவர்களின் உதவியுடன் மாணவி காப்பாற்றப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதனால் குறித்த மாணவியின் தற்கொலை முயற்சிக்கு ஆசிரியரின் செயலே காரணம் என சந்தேகிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-வ-21,101)

# தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் மீது பிரான்ஸில் சூடு

பரிஸ், பெப்.19

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் பரமலிங்கம் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் அவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் பிரான்ஸ் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பரமலிங்கம் தனது வர்த்தக நிலையத்தை நேற்று முன்தினம் இரவு மூடிவிட்டு வீடு செல்வதற்கு ஆயத்தமானபோதே காரில் வந்த இனந்தெரியாத நபர்கள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவத்தில் கையில் காயமடைந்த நிலையில், பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் பரமலிங்கம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி பரமலிங்கம் கத்திக்குத்துக்கு இலக்காகிப் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அது மாத்திரமன்றி, கடந்த 2012ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் வைத்து அப்போதைய பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளரான பரிதி என்று அழைக்கப்பட்ட நடராஜா மதிதரன் ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார் என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது. (த-சி)

**காணி விற்பனை**

திருநெல்வேலி, கலாசாலை வீதியில்
3 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு. (89406)(05.17)
தொடர்புக்கு: 076 5589 752 (S.தர்மராஜா)
077 6557 086

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 463
சீட்டிழுப்பு திகதி 2016.02.18
வெற்றி இலக்கங்கள்
08 30 53 64 Z
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 43,593,740/=
Web: www.dlb.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1238
சீட்டிழுப்பு திகதி 2016.02.18
வெற்றி இலக்கங்கள்
04 06 29 46 Z
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,290,720/=
Web: www.dlb.lk

# வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் இந்திரராஜா மீது நேற்றிரவு தாக்குதல்

## வவுனியாவில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.இந்திரராஜா மீது இனந்தெரியாதோர் நேற்று இரவு 8 மணியளவில் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலினால் காயமடைந்த அவர், வவுனியா வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா–உக்குளாங்குளத்தில் சாவு வீட்டுக்குச் சென்றுவிட்டு, சக மாகாண சபை உறுப்பினர் எம்.பி.நடராஜாவுடன் மோட்டார் சைக்கிளில் திரும்பிக்கொண்டிருந்த போதே, அவர் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

உக்கிளாங்குளப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் இரண்டு மாகாண சபை உறுப்பினர்களும் வந்து கொண்டிருந்த போது, மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பொல்லு அல்லது இரும்புக் கம்பி போன்ற ஒன்றைப் பயன்படுத்தியே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக, எம்.பி.நடராஜ் தெரிவித்துள்ளார்.

இதே வீதியில் பின்னால் வந்து கொண்டிருந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், இந்திரராஜாவை வவுனியா தேசிய வைத்திய சாலைக்குக் கொண்டு சென்று சேர்ப்பித்துள்ளார். (வ-5)

**மணி விழா வாழ்த்துக்கள்**



கடந்த 18 வருடங்களாக எமது பாடசாலையில் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் - அளப்பரிய சேவையாற்றி 21.02.2016 அன்று சேவையிலிருந்து ஓய்வு பெறும் நல்லாசிரியர் - கணித ஆசான்

உயர்திரு
செல்லையா சிவபாதசுந்தரம்

அவர்களை வாழ்த்தி வணங்கி அவரது ஓய்வு காலம் சிறப்புறவும் சமூக, சமய சேவைகள் தொடரவும் இறையருள் வேண்டி மணிவிழா நாயகரை மனமார உவந்து பாராட்டுகின்றோம்.

சேவைக் கால விவரம்
முதல் நியமனம் 02.05.1983
வ/பாவற்குளம் படிவம் III இல.9 அ.த.க. பாடசாலை 02.05.1983 - 18.03.1984
வ/பாவற்குளம் கருணஸ்வரா மகா வித்தியாலயம் 19.03.1984-08.03.1998
யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் 09.03.1998-18.09.2001 (ஆசிரியர்)
யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் 19.09.2001-21.02.2016 (பிரதிஅதிபர்)

பணியுவந்து வாழ்த்துவோர்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் - மீசாலை.
(60744)(10.17.20)

# யாழ்.பொலிஸ் பொறுப்பதிகாரியை கைது செய்து மன்றில் முற்படுத்துக

## பொலிஸ் அத்தியட்சகருக்கு மல்லாகம் நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்.பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவை யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதிமன்றம் விடுத்துள்ளது.

மல்லாகம் நீதிமன்றிலுள்ள வழக்கு ஒன்றுடன் தொடர்புபடும் சந்தேக நபர் ஒருவர் யாழ்.பிராந்திய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அந்த நபரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்துமாறு யாழ்.பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் பரிசோதகருக்கு உத்தரவிட்ட மல்லாகம் நீதிமன்று, தவறின் அது பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டிருந்தது.

ஆனால் யாழ்.பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் பரிசோதகர் குறித்த சந்தேக நபரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தவும் இல்லை. அது பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்கவுமில்லை. இந்த நிலையில் குறித்த உத்தரவை மல் லாகம் நீதிமன்று நேற்றுமுன்தினம் பிறப்பித்துள்ளது. அந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த-4)

### கைதடி நவீல்ட்டில் கண்காட்சியும் ஆண்டு விழாவும்

கைதடி நவீல்ட் பாடசாலையின் 60 ஆவது ஆண்டு விழாவும் கண்காட்சியும் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது என்று பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். இன்று முற்பகல் 9 மணிக்கு கண்காட்சி இடம்பெறுகிறது. நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு நற்கருணை ஆராதனையுடன் நிகழ்வு ஆரம்பித்து முற்பகல் 10 மணிக்கு பொதுக்கூட்டத்துடன் நிறைவடையும். (த-4)

# மாணவனை மோதிவிட்டு தப்பியது மோ. சைக்கிள்

பாடசாலை முடிந்து வீட்டுக்குச் செல்லப் புறப்பட்ட பாடசாலை மாணவனை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதிவிட்டுத் தலை மறைவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் வடமராட்சி – கொற்றாவத்தை தாமோ தரம்பிள்ளை வித்தியாலயத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்றது.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்ற இந் தச் சம்பவத்தில் குறித்த பாடசாலையைச் சேர்ந்த தரம் 2 இல் கல்வி கற்கும் ரூபானந்தம் அபிசன் (வயது–7) என்ற மாணவனே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த நபர் நேற்று மாலை வரை கைது செய்யப்படவில்லை என்றபோதும், தலைமறைவானவரைத் தாம் தேடிவருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-ரி-109)

### வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை

பிளவத்தை அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை பி.ப.2 மணிக்கு இளைய நட்சத்திர விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் திருமதி கு.லோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி றூபா உதயரத்தினம் பிரதம விருந்தினராகவும், யாழ்.உலக தரிசனம் திட்டமுகாமையாளர் இ.ஜெயபாலு அன்ரனி சிறப்பு விருந்தினராகவும், சங்கானை மக்கள் வங்கி உதவி முகாமையாளர் த.சிவகுமார் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (த)

**வெளி நாட்டில் உயர் கல்வி**
CERTIFICATE & DEGREE LEVEL
U.S.A / அமெரிக்கா
CANADA / கனடா
LATVIA / லத்தியா
IELTS - தேவையில்லை
மிகக் குறைந்த கட்டணங்கள்
மூன்று கிழமைக்குள் விசா
MARUTHI EDUCATIONAL CONSULTANT'S
உங்களின் அனுமதிக்கும் ஆலோசனைகளுக்கும்
யாழிலே எமது பிரதிநிதிகளை
23.02.16 - 26.02.16 நேரில் சந்திக்கவும்
Time : 9.00am to 4.30 pm
British College of Higher Studies
No.15 2/1, Sirambiyady Lane, (Off Stanley Road)
(Above Sathosa Super Market & Near Ariyakulam Junction)
Jaffna. Tel :0777585913/ 0212224550

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் விடுதிக் கதவுகளை நள்ளிரவில் தட்டும் ராணுவம்

கிளிநொச்சி, பெப் 19

முழங்காவில் மகாவித்தியாலய ஆசிரியர் விடுதிகளின் கதவுளை நள்ளிரவில் படையினர் தட்டுவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதனால் ஆசிரியர்கள் அச்சம் காரணமாக விடுதிகளை விட்டு வெளியேறியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரண்டு தேசிய பாடசாலைகளில் ஒன்றான முழங்காவில் மகாவித்தியாலய ஆசிரியர் தங்கியுள்ள விடுதிகளுக்கு நள்ளிரவில் செல்லும் படையினர், கதவுகளைத் தட்டுவதால் ஆசிரியர்கள் அச்சம் காரணமாக அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

முழங்காவில் மகாவித்தியாலயத்துக்கு அருகில் 65 ஆவது பிரிகேட் படையணியின் இராணுவ முகாம் ஒன்று உள்ளது.

இதில் உள்ள இராணுவத்தினர் பாடசாலையில் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் ஆசிரியர்கள் தங்கியுள்ள விடுதிக்குச் சென்று கதவுகளைத் தட்டியதால் பீதியடைந்த ஆசிரியர்கள் இது குறித்து உரிய தரப்புக்களுக்கு முறைப்பாடு செய்துள்ளதுடன் விடுதியை விட்டு வெளியேறியுள்ளனர்.

இது தொடர்பாகப் பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, அவ்வாறான சம்பவம் இடம்பெற்றதாகவும், இது தொடர்பாக அருகில் உள்ள இராணுவ முகாம் அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு சென்றபோது அவர் வருகை தந்து பார்வையிட்டுத் தமது இராணுவத்தினரின் சப்பாத்து அடையாளம் எனத் தெரிவித்ததுடன், அவர்களை இடமாற்றம் செய்வதாகவும் தெரிவித்துச் சென்றார் எனவும், எனினும் இதுவரை அவர்கள் இடமாற்றப்படவில்லை எனவும், ஆசிரியர்கள் அங்கு தங்குவதற்குத் தயங்குவதால் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படையும் எனவும் தெரிவித்தார்.

இது குறித்துப் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, மேற்படி சம்பவம் இடம்பெற்றதாகவும், இது தொடர்பாக இராணுவ அதிகாரி குறித்த படையினரை இடம்மாற்றியுள்ளதாகவும், விடுதியின் வேலியை அடைத்துத் தருவதாக கூறியுள்ளதாகவும் தெரிவித்தார். (த-ரி3-10)

# பொருளாதார வாய்ப்புக்களை பயன்படுத்துவதற்கு வாருங்கள்

*ஜேர்மன் முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி மைத்திரி அழைப்பு*

யாழ்ப்பாணம், பெப்.19

இலங்கையில் தற்போது அதிகரித்துவரும் பொருளாதார வாய்ப்புகளைப்பயன்படுத்திக் கொள்ள ஜேர்மன் முதலீட்டாளர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கிறோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜேர்மன் சுற்றுப் பயணத்தின்போது தெரிவித்தார்.

இது குறித்து அவர் அறிக்கையில் தெரிவித்ததாவது:-

கடந்த 5 தசாப்பதங்களுக்கு மேலாக இலங்கையின் அபிவி ருத்திக்கான உதவிகளை வழங்கி வரும் ஜேர்மன் அரசுக்கு நான் கூறுகிறேன். அத்துடன், எதிர்காலத்திலும் தொடர்ந்து இந்த உதவிகளை ஜேர்மனி வழங்கவேண்டும். இலங்கை அரசு புதியதுறைகளில்பன்முகப் படுத்தப்பட்ட ஒத்துழைப்புடன் கூடிய நீண்டகால அடிப்படையிலான புதிய வாய்ப்புகளைத் தேடும் முயற்சியில் உறுதி பூண்டுள்ளது.

இலங்கையில் ஜேர்மன் அரசின் ஒத்துழைப்புடன், தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனத்தை அமைத்து, அதனூடாகத் திறன் வளர்ச்சியை மேம்படுத்த ஜேர்மன் அரசு மேற்கொண்டுவரும் பங்களிப்பானது ஒரு சிறந்த முன்மாதிரியாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் நாம் நன்றிகளை ஜேர்மன் அரசுக்கும், ஜேர்மன் மக்களுக்கும் தெரிவிக்கிறேன்.

இலங்கையின் பொருளாதார வாய்ப்புகள், சாத்தியமான திறன்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை எற்படுத்த ஒழுங்குபடுத்தப்பட்ட விசேட மாநாட்டில் பங்கு பெறவுள்ளோம். இலங்கை வணிகத் தூதுக் குழுவினர் ஜேர்மன் முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடிக் கூட்டு முயற்சி வாய்ப்புகளை அடையாளம் காணவுள்ளனர்.

சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு மட்டுமல்லாமல், எமது கூட்டுறவானது அறிவியல், தொழில்நுட்பம், நிலையான வளர்ச்சியில் அமைந்த எரிசக்தித்துறை மற்றும் உயர்கல்வி ஆகியவற்றைப் பரந்துபட்ட ரீதியில் உள்ளடக்கியதாக அமையும் -என்றார். (த-ரி4)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கல்வி அமைச்சின் முகாமைத்துவப் பண்புத்தர உறுதிப்பாட்டு அலகினால் மேற்கொள்ளப்பட்ட பாடசாலையில் அதிசிறந்த செயற்பாட்டுக்கான விருது வழங்கும் நிகழ்வு - 2015 இல் விருதினைப் பெற்றுக்கொண்ட

**யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்** மென்மேலும் பல விருதுகளைப் பெற்று தரத்தில் உயர்ந்து சிறந்து விளங்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம் சார்பாக
க.நடராசா.

(69390)(11.17,18,20)



குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும்
சிறப்பு யோகா பயிற்சிகள்

| | |
|---|---|
| இடம் | : வண்ணார்பண்ணை, தவமையம் |
| காலம் | : 20.02.2016 - 26.02.2016 வரை. |
| நேரம் | : தினமும் மாலை 5.00 மணி |
| பயிற்சிகள் | : காயகல்ப பயிற்சி - உடற்பயிற்சிகள், தியானப்பயிற்சிகள் - அகத்தாய்வுப்பயிற்சிகள் |

அகத்தாய்வுப் பயிற்சி
20.02.2016, 21.02.2016, 22.02.2016 சனி, ஞாயிறு, திங்கள் 3 தினங்களிலும் காலை 9.00 - 1.00 மணிவரை.

நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| இறைவணக்கம் | : குருவணக்கம் |
| தலைமையுரை | : மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் (தலைவர் - யாழ்ப்பாண மனவள கலை மன்ற அறக்கட்டளை) |
| வரவேற்புரை | : மனவளக்கலை துணைப்பேராசிரியர் அருள்நிதி நந்தகுமாரன் அவர்கள் |

பயிற்சிகளை வழங்குபவர்
மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி எஸ். இந்திரா அம்மா அவர்கள்
(தமிழ்நாடு - இந்தியா)

மேற்படி பயிற்சிகளை முறையே பயின்று பயன்பெற்றுக் கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் மீளப்பயிற்சியைப் பெற்றுக்கொள்ள மனவளக்கலை அன்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

வாழ்க வளமுடன்
யாழ்ப்பாண மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
கோவில் ரின்வையார் வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 123 5646/ 077 772 6732 / 077 736 8745



## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கணினி இயக்குநர், கணக்காளர் தேவை.

(பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

**தகைமைகள்:**

**கணக்காளர் (உதவியாளர்)**

*க.பொ.த.(உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
*ஆங்கிலம் எழுத, பேசத் தெரிந்திருத்தல் வேண்டும்.
*முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
*கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
*வயதெல்லை 23-35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**கணினி இயக்குநர்**

*க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
*MS Office நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.
*MS Excel முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
*வயதெல்லை 21-30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோ பிரதி ஆகியவற்றை இணைத்து 28.02.2016 இற்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம் - 5094,
மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## வீடு வாடகைக்கு உண்டு

சுண்டுக்குளி பாடசாலை அருகில் வீடு வாடகைக்கு உண்டு. அத்துடன் அறையும் வாடகைக்கு உண்டு.

077 741 2713, 077 724 2427

## மணமகள் தேவை

இந்து குடும்பம், 1983, நட்சத்திரம் - உத்தரம் 3ஆம் பாதம், கிரகபாவம் 15¼, லண்டன் PR உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.

(69384)(11.18,20) 077 051 8019, 077 051 8009

## வேலையாள்கள் தேவை

மீசாலை புத்தூர்ச் சந்தியில் இயங்கி வரும் நிமல் வெல்டிங் கடைக்கு மோட்டார் சைக்கிள் திருத்தல் வேலை தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை. (துங்குமிட வசதிகள் கொடுக்கப்படும்)

தொடர்பு: 077 345 6552 (60742)(11.18)

## மணமகள் தேவை

யாழ்.இந்து, 28.03.1982, கி.பா.16, 5'6" ரேவதி, அரச உத்தியோகம் பார்க்கும் சிவப்பு நிற மணமகனுக்கு வலிகாமம் அல்லது தென்மராட்சியைச் சேர்ந்த அழகான மணமகள் தேவை.

077 879 3563 (68453)(11.19)

## கிணற்றுடன் காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம்.மாம்பழச்சந்தி.அரியாலை நடுத்தெரு ஒழுங்கையில், தெங்கு பனம் பொருள் சங்கம் அருகில் கிணற்று டன் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (69277)(11.18)

077 066 1999, 077 324 6448

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும்
**ஸ்ரீ பேப்பர் மார்ட்**
வர்த்தக நிலையத்துக்கு
1. கணக்காளர்
2. உதவியாளர்
3. சிட்டை எழுதுநர்

ஆண், பெண் இருபாலாரும் தேவை.

தொடர்பு: 077 310 7035 - செ.நிமலன்



Majestic Cineplex Jaffna
கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




Ceylon Theatres
www.ceylontheatres.lk



## விற்பனைக்கு

சில நாள்கள் பாவித்த சாம்சங் மொபைல் (Samsung Grand Prime 4G) A/Cக்களுக்கு உரிய வெளியிணைப்பு இயந்திரங்கள், உடன் விற்பனைக்கு.

077 007 8802

## வாடகைக்கு

நல்லூர்ப் பகுதியில் தனியறை, இணைந்த குளியலறை, சமையலறை என்பன பணிபுரியும் பெண்களுக்கு வாடகைக்கு உண்டு. இருவர் வசிக்கலாம்.

077 007 8802

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு திகதி மாற்றம்

புனித யாகப்பர் ஆலயம் (வயாவிளான்)

கடந்த 25.12.2015 அன்று நடைபெறவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. இந்த சீட்டிழுப்பு எமது ஆலய திருவிழா தினத்தன்று 25.07.2016 அன்று நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

பங்குத் தந்தையும்,
ஆலய நிர்வாகமும்.

(69392)(11.18,20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் .பல்கலை. ஊழியர் சங்கம் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்



யாழ்ப்பாணம்,பெப்.19
சகல அரச நிறுவனங்களிலும் ஒரேயளவான சேவைக் காலத்தைக் கொண்ட ஊழியர்களுக்கு அவர்களின் சேவையின் இறுதிக் காலத்தில் பெற்ற அடிப்படைச் சம்பளத்தின் - குறிப்பாக வாழ்க்கைச் செலவுப் படி உள்ளடங்கலாக குறிப்பிட்ட சதவீதமே ஓய்வூதியமாக வழங்கப்படும். ஆனால் பல்கலைக் கழகங்களில் மட்டும் வேறுபாடு காட்டப்படுகின்றது. இது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் நேற்று வியாழக்கிழமை யாழ். பல்கலைக் கழக வாயிலில் கூடிய பல்கலை. ஊழியர் சங்கத்தினர் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

உள்ளக சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படாமை, தர உயர்வு நேர்முகத்தேர்வுகளில் தாமதம், 2013 ஆம் ஆண்டு அரசியல் தலையீட்டால் நியமனம் மறுக்கப்பட்ட தொழிலாளர் நிலை, 25 வருட சேவைக்கால கொடுப்பனவு சில ஊழியருக்கு வழங்கப்படாமை, பரீட்சைக் கடமைக் கொடுப்பனவுகளில் குளறுபடி, கணினிப் பிரயோக உதவியாளர் நியமனக் கடிதங்களை பல்கலைக்கழக மேன்முறையீட்டு சேவைகள் சபை தீர்மானத்துக்கு ஏற்ப மாற்றியமைக்காமை, புதிதாக அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்ட ஊழியர்களின் பொதுப்பரீட்சை பேறுபேறுகளை பரீட்சைத் திணைக்களத்தில் உறுதிப்படுத்தாமல் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றமை, வருடாவருடம் தொடரும் சீருடை பாதணிப் பிரச்சினைகள், ஓய்வு பெற்ற ஊழியர்களின் ரயில் ஆணைச்சீட்டு வழங்கலில் குளறுபடி மற்றும் ஓய்வு பெற்றோருக்கான நிலுவைக் கொடுப்பனவின் வட்டி இதுவரை வழங்கப்படாமை போன்ற விடயங்களை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்வைத்தனர்.

யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்துக்குக் கடந்த சில மாதங்களாக எம்மால் வழங்கப்பட்ட கடிதங்களுக்கு உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

போராட்டம் குறித்து யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் தெரிவித்ததாவது:-

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் தொழிற்சங்க கூட்டமைப்பும் அனைத்து சம்மேளனமும் சேர்ந்து அனைத்துப் பல்கலைக்கழகங்களை உள்ளடக்கியதாக இன்று கவனவீர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்கின்றன.

அதே போன்று பல்கலைக் கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலே நாங்களும் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம்.

கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் விடுக்கப்பட்ட எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்திலேயே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்றோம். இவற்றுக்குத் தீர்வை முன்வைக்காத பட்சத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்பாக போராட்டத்தை முன்னெடுக்க இருக்கின்றோம்.

அதேபோன்று அந்தக் குறிப்பிட்ட போராட்டத்துக்கும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு மற்றும் கல்வி அமைச்சு தீர்வைத் தராத பட்சத்தில் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்பதற்கான சூழ்நிலைகள் உருவாகும்.

பல காலமாக நாம் முன்வைத்து வருகின்ற கோரிக்கைகளுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் கல்வி அமைச்சும் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் - என்றார்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் பல்கலைக்கழக ஊழியர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ற-ஐ-ரி2)

## மகளிர் தினத்தை முன்னிட்டு விளையாட்டு நிகழ்வுகள்

சாவகச்சேரி,பெப்.19
சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கிடையிலான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மைதானத்தில் நடத்தப்படவுள்ளன.


சங்க அங்கத்தவர்களில் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் கீழ் பிரிவாகவும், 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் மேற்பிரிவாகவும் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் பாரம்பரிய விளையாட்டுக்களான கிடுகு பின்னுதல், தேங்காய் துருவுதல், பூமாலை கட்டுதல், குழு நிலைப் போட்டிகள், பலூன் உடைத்தல், முட்டி உடைத்தல், குறுந்தூர ஓட்டம், கயிறிழுத்தல், சங்கீதக் கதிரை உட்பட பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி சங்கத்தால் நடத்தப்படவுள்ள மகளிர் தின விழாவில் வழங்கப்படும் என்று சங்க விளையாட்டுப் பொறுப்பாளர் திருமதி ரூ.இராசரத்தினம் அறிவித்துள்ளார்.(ற-ஐ-9)



காரைநகர், வலந்தலை, மடத்துக்கரை
திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்
தேர் வெள்ளோட்டம்



2016.02.20
சனிக்கிழமை
காலை 9.00 மணி

அம்பாள் துதி
திருச்சிற்றம்பலம்
பொன்னாரும் காரைநகர் மடத்துக் கரையிற் புத்தமுதே
என்னாருங் கண்ணில் இருக்கும் மணியே இலங்கிளியே
கொன்னாரும் இந்திரர், வானவர், போற்றும் குணம்மலையே
பொன்னாம் பாதாம் புயத்தாளே உன்னை என்றும் போற்றுவேனே
திருச்சிற்றம்பலம்

அம்பிகை அடியார்களே!
எமது ஊரின் நுழைவாயிலில் ஆலமரத்தைத் தலவிருட்சமாகக் கோயில் கொண்டு எழுந்தருளி, தன்னை நாடி வரும் அடியவர்களுக்கு கருணை மழை பொழிந்து,வழித்துணையாகவும் இருந்து அருளாட்சி புரிந்து கொண்டு விளங்கும் முத்துமாரி அம்பாளுக்கு நிகழும் மன்மத வருடம் மாசித் திங்கள் 08 ஆம் நாள் (20.02.2016) சனிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி 108 சங்காபிஷேகம் நடைபெற்று விஷேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து காலை 9.00 மணிக்கு பல இலட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்ட அழகிய தேர் வெள்ளோட்டம் ஆஸ்த்தான வித்துவான், ஈழத்தின் தலைசிறந்த தவில், நாதஸ்வர கலைஞர்களின் மங்கல வாத்தியம் முழங்க, அடியார்களின் அரோகராக கோஷம் ஒலிக்க சிறப்புற நடைபெற அம்பிகையின் திருவருள் கிடைத்துள்ளது. அத்தருணம் அம்பிகை அடியார்கள் ஆலயத்தில் குறித்த நேரத்திற்கு வருகை தந்து வெள்ளோட்ட விழாவில் கலந்து கொண்டு அம்பிகையின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(C/28460)(10.17.18.20)

தேர்த்திருவிழா
நாளை மறுதினம் (21.02.2016) ஞாயிற்றுக்கிழமை
காலை 6.00 மணி விநாயகர் வழிபாடு
காலை 8.30 மணிக்கு வசந்த மண்டப பூசை
முற்பகல் 10.00 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளல்

அனைவரும் வருக !
அன்னையின்
அருள் பெறுக.

தர்மகர்த்தா திரு. கு. விக்னேஸ்வரன் (லண்டன்)
வலந்தலை, காரைநகர்.

பிரம்மஸ்ரீ கு. சரவணபவானந்த சர்மாவும்
(ஆதீனகுரு, நம்பிகைப் பொறுப்பாளரும்)
077 171 0748, 021 373 5123
வெள்ளோட்ட விழா உபயகாரரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 20.01.2016 புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்
**ஐயங்கன் சாமுவேல்**
அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள்
இன்று (19.02.2016) வெள்ளிக்கிழமை
நண்பகல் 12.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்களும் தங்கள்
குடும்பசகிதம் வருகை தந்து
அங்கு நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்,
அதனைத்தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம் .

புதிய சந்தை வீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் கண்ணீர்த் துளிகள்

அன்னையின் மடியில்
18 . 07 . 2011



ஆண்டவன் அடியினில்
20 . 01 . 2016

**அமரர் வ.ஹரிஸ்மிதுஷன்**
(அஸ்ரன் சர்வதேசக் கல்லூரி 4+ மாணவன்)

நிலையற்ற இவ்வுலகில் நிலையில்லா இவ் வாழ்வில்
நீ வாழ்ந்த நாள்கள் கொஞ்சம் நம் வாழ்வில் உன் நினைவே தஞ்சம்

நிய வாழ்க்கை நினைவாக நினைவே எம் கனவாக
கண்ணீரில் கரைகிறது காலங்கள் காலம் எல்லாம் உன் நினைவுகள்

எமது குட்டிச் செல்லம் அமரர் வ.ஹரிஸ்மிதுஷன் இறைபதம் எய்திய போது நாம் துன்பக் கடலில் தத்தளித்த வேளையில் எமது துயரில் பங்கு கொண்ட அபான்ஸ் குழுமத்தினர், உடுவில் பிரதேச செயலகத்தினர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் உத்தியோகத்தர்கள், அஸ்ரன் சர்வ தேசக் கல்லூரியினர், ஆசிரியர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைக் காணிக்கையாக்குவதுடன் எம் செல்லக்குட்டியின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தாங்கள் பிரிவால் துயருறும்
திரு திருமதி வரதராஜன்
(குருசோ வீதி, சுண்டுக்குளி)

இணுவில்
பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி. (69382)(ы.17.20)

## "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்"
## நினைவில் நீங்காத நான்காம் ஆண்டு



**யோண் கிளமன்ரைன்**

பிறப்பு
20.07.1980

இறப்பு
19.02.2012

நீர்போன திசைபார்த்த - எம்
பொழுது புலரவில்லை ஐயா!

உம் ஆசைமுகம் பாராது - எம்
வாழ்வு மலரவில்லை

தேடிப்பெற்ற திரவியத்தை
- மண்ணில்
புதைத்தோம் ஐயா!

நீர் போகும்போதே இன்பத்தை
- அன்றே
தொலைத்தோம் ஐயா!

நீர் இல்லாத காலத்தில் - இனி
எப்போது சிரிப்போம் ஐயா!

கழிந்தது நான்காண்டுகள்
காயங்கள்தான் இன்னும் ஆறவில்லை
கண்ணில் ஈரங்களும் தான்

27,சேமக்காலை வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மன்னார் வலைப்பாட்டு
கடலில் சங்கமமான
திருச்செல்வம்
கமலேந்திரராணி (குமுதினி)
திருச்செல்வம் கம்சினி
சிவலிங்கம் திருச்செல்வம்

தோற்றம்: 23.06.1974
தோற்றம்: 05.06.1996
தோற்றம்: 08.02.1972
மறைவு
19.02.1997


கண்கள் கலங்கி மனப்புண்கள் ஆறாமல்
ஆண்டுகள் பத்தொன்பது ஆனதே! நாளும்
வெந்தனலாய் வெந்து வெந்து கண்ணீர்
உருகுகிறதே உங்கள் மூவரையும் எண்ணி எண்ணி
எம்மனம் ஆறுதில்லையே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சி.தேவகுஞ்சரம்,
கதிரிப்பாய், அச்சுவேலி. (69355) (13.18)

உங்கள் பிரிவால் துயருறும்
அம்மா, அக்கா, அத்தான், அண்ணாமார்,
அண்ணிமார், பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கைதடி நுணாவிலைப்
பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை
வதிவிடமாகவும் பரிஸிலில்
வசித்துவருபவருமாகிய

அமரர்
**மயில்வாகனம் மனோராஜ்**

திதி :பூர்வபட்ச துவாதசி

பண்போடு பாசமாய்ப் பழகி
அன்போடு அனைவரையும் நேசித்தீர்
அவசரமாய் நல்லுலகம் நாடியதேன்
ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது நம் துயரம்

தோற்றம்
21.05.1952

மறைவு
01.03.2015

என்றென்றும் உங்கள் நீங்கா நினைவுடன்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

"பாலகிரி"
கல்லடி ஒழுங்கை,
சாவகச்சேரி.

மனைவி திருமதி பாலசரோஜினி மனோராஜ்
மற்றும் உறவினர்கள். (69347)(12.17.18)(13)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
04.10.1935

ஐங்கரன் அடியில்
22.02.2013

அமரர் திருமதி **பராசக்தி கந்தசாமி**

வாழ்வில் இழக்கக்கூடாத உன்னத உறவு
தரணியில் விலைபேச முடியாத அன்பு
என்றுமே உணர்வுடன் போராடும் சொந்தம் - அது
தாயெனும் அன்பான பந்தம், ஐயகோ!
நாம் தொலைத்து விட்டோம் எம் தெய்வத்தை
நிழல் போல் எம்மோடு தான் இருப்பார்
அம்மா என எம்மை நாமே தேற்றுகிறோம்
இருந்தும் எம் அன்புத் தெய்வத்தை நினைக்கையிலே கண்ணீர் கரைகிறது
ஆண்டுகள் மூன்று என்ன யுகங்கள் ஆனாலும் நாமே தேடிடுவோம்
எம் அன்னையின் உயிர் மூச்சை ... அடைந்திடுக சாந்தி ! சாந்தி!! சாந்தி!!

கரவெட்டி.

குடும்பத்தினர். (69339)(13,18,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவிப்பு விழா

அம்பாறை,பெப்.19
நிந்தவூர் கலை, இலக்கியப் பேரவையின் முதலாவது கௌரவிப்பு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

நிந்தவூர் கலை, இலக்கியப் பேரவையின் தலைவரும் கவிஞருமான வைத்தியர் ஏ.எம். ஜாபிர் தலைமையில் நிந்தவூர் அரசடித்தோட்டம் றௌப் கார்டன் திறந்த வெளியரங்கில் இந்தக் கௌரவிப்பு விழா நடைபெறும். பேரவையின் சிறப்பு நிகழ்வாக நடைபெறவிருக்கும் இந்தக் கௌரவிப்பு விழாவில், கலாபூசணம் விருது பெற்ற பேரவை உறுப்பினர்களும், அரச பணிகளிலிருந்து ஓய்வுபெற்ற உறுப்பினர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளதாகப் பேரவையின் செயலாளரும்,பிரதம பொறியியலாளருமான கவிஞர் ரீ.இஸ்மாயில் தெரிவித்தார்.

(த -ஜ-30)

## கிறேக்கிலி தோட்டம் வனப்பகுதியில் தீ

கொழும்பு,பெப்.19
திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறேக்கிலி தோட்டம் பெய்திலி பிரிவுக்குச் சொந்தமான வனப்பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் ஏற்பட்ட தீ அதன் ஒரு பகுதி வரை பரவியுள்ளது.

பத்து ஏக்கரைக் கொண்ட இந்த வனப்பகுதியில் 3 ஏக்கர் வரை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திம்புள்ள பத்தனைப் பொலிஸாரும், பொதுமக்களும் பெரும் சிரமத்துக்கு மத்தியில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்தப் பகுதியில் எவராவது தீ வைத்ததால் இந்தச் சம்பவம் இடம்பெற்றதா? அல்லது இயற்கையான காட்டுத்தீயா? என இதுவரை தெரியவில்லை என திம்புள்ள பத்தனை பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (த-ஜ)

# அபிவிருத்திக் கூட்டத்தில் முடிவெடுத்தும் காணிகளை ஒப்படைக்க மறுக்கின்றனர்

## கரந்தாயில் காணிகளை இழந்த பொதுமக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,பெப்.19

தெங்குப்பயிர்ச்செய்கைச்சபையால் கையகப்படுத்தப்பட்டது என்று கூறப்படும் மக்களுடைய காணிகளை மீண்டும்மக்களிடமேவழங்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு மாவட்ட ஒருக்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களால், பச்சிலைபள்ளி பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தபோதும் இன்றுவரைகுறித்தகாணிகள்தமக்கு வழங்கப்பட வில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பளை, கரந்தாய் கிராமத்தில் குறித்த காணிகளில் வாழ்ந்த மக்கள் போரின்போது இடம்பெயர்ந்திருந்தனர். போர் முடிவடைந்த பின்னர் குறித்த காணிகளில் குடிய மர்ந்த மக்கள் கடந்த வருடம் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையாலும், பளைப் பொலிஸாராலும் அந்தக் காணிகளில் இருந்து வற்புறுத்தி வெளியேற்றப்பட்டனர்.

குடியமர்ந்த மக்கள் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையினருக்கு சொந்தமான காணியிலேயே குடியமர்ந்தனர் என்றும், குறித்த காணி தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினருக்கு சொந்தமானது எனவும் சபையினர் தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்து குறித்த மக்களில் சிலர் காணிகளில் அத்துமீறி குடியமர்ந்தவர்கள் எனக் கூறி கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

> ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்கு வந்திருந்த காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் செயலாளர் பிரச்சினைக்குரியதாக கூறப்பட்ட காணி 1976 ஆம் ஆண்டு குறித்த மக்களுக்கு காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவாலேயே வழங்கப்பட்டது என்று கூறியிருந்தார்.

இதன் போது மக்களுடைய கருத்துக்களைக் கேட்ட அப்போதைய கிளிநொச்சி மாவட்ட நீதிவானாக இருந்த எம்.ஐ.வகாப்தீன், உடனடியாக மக்களை விடுவித்து அடுத்த தவணையில் மக்களுடைய காணிகள் என்பதற்கான ஆதாரங்களை மன்றில் சமர்பிக்குமாறு தெரிவித்திருந்தார். மன்றில்வழக்கு நடைபெற்றதன் காரணத்தால் குறித்தகாணியில் மக்கள் குடியமர அனுமதிக்கப் படாது இருந்தனர்.

கடந்த மாதம் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் நடை பெற்ற போது குறித்த விடயம் தொடர்பாக மாகாணசபை உறுப்பினர் அரியரட்ணத்தினால்குறித்த விடயம் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

இதன் போது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு வந்திருந்த காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் செய லாளர் பிரச்சினைக் குரியதாக கூறப்பட்ட காணி 1976ஆம்ஆண்டு குறித்த மக்களுக்கு காணி சீர்திருத்த ஆணைக் குழுவாலேயே வழங்கப்பட்டது என்றும், அதற்கான சான்றுகள் இருக்கின்றன என்றும் இணைத்தலைவர்களிடம் தெரியப்படுத்தியிருந்தார்.

அதையடுத்து தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையினரை விளக்கமளிக்குமாறு இணைத்தலைவர்களால் கேட்கப்பட்டபோது, குறித்த கூட்டத்துக்கு குறித்த சபையில் அதிகாரமளிக்கப்பட்டவர்கள் கலந்து கொள்ளவில்லை.

எனவே குறித்த காணிகள் மக்களுடையது தான் என்றும் காணிகளில் இருந்து அடாத்தாக எழுப்பப்பட்ட 30 குடும்பங்களுக்கும் அந்தக் காணிகளை தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையால் வைக்கப்பட்ட தென்னங் கன்றுகளுடன் பகிர்ந்தளிக்குமாறும் இணைத் தலைவரான வடக்கு முதல்வர் உட்பட ஏனைய இணைத் தலைவர்களாலும் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு தெரிவிக்கப்பட்டு ஒரு மாத காலமாகியும் குறித்த காணிகள் தமக்கு வழங்கப்படவில்லை என வும், இது தொடர்பாக எவரும் எதுவித நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அந்த மக்கள் தெரிவித்தனர்.

மக்களுடைய குறித்த குற்றச்சாட்டை அடுத்து இது தொடர்பாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளரை தொடர்பு கொண்டு கேட்ட போது:-

தமக்கு இதுவரை குறித்த காணிகளை வழங்குமாறு எந்த அறிவித்தலும் கிடைக்கவில்லை. காணிகளைச் சுற்றி தெங்கு உற்பத்திச் சபையால் வேலிகள் போடப்பட்டுள்ளன. இந்தக் காணிகளை கையளிக்குமாறு தெங்கு உற்பத்தி சபையினர் மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவினர் அறிவிக்கும் படசத்தில் காணிகளை வழங்கத் தயாராக இருக்கின்றோம்.- என்றார்.(ஐ-21,ரி3)

## அடையாளம் காணப்பட்டது மூதாட்டியின் உடல்

நெல்லியடி,பெப்.19

வீதியில் மயங்கி விழுந்து உயிரிழந்த மூதாட்டி, கரவெட்டி ,சாமியன் அரசடியைச் சேர்ந்த திருமதி கனகம்மா சிவசம்பு (வயது-77) என அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் நெல்லியடி, கன் பொல்லை வீதிச் சந்தியில் மயங்கி விழுந்த நிலையில் கிடந்த வயோதிப மாது பொது மக்களின் உதவியுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டார்.

சேர்க்கப்பட்ட ஒருசில மணி நேரத்தில் அவர் உயிரிழந்தமையால் அவரைப் பற்றிய விவரங்களை அறிய முடியவில்லை. சடலத்தை அடையாளம் காண்பதற்கு வசதியாக சடலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நேற்று முன்தினம் உறவினர்கள் நெல்லியடிப் பொலிஸாரிடம் முறையிட்டு சடலம் தமது உறவினரது எனத் தெரிவித்து சடலத்தைப் பெற்றுக் கொண்டனர்.

(ற-ஐ-173)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி,பெப்.19

கிளிநொச்சி மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு, கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள தனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது என கிளிநொச்சி மாவட்ட தொண்டர்ஆசிரியர்சங்கத்தலைவர் ஜெயராஜ் அறிவித்துள்ளார். (ஐ-21)

## மீள்பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.19

ஆசிரிய கலாசாலைகளின் இறுதிப்பரீட்சையின் மீள்பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தால் கலாசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியவர்கள் அலுவலக நேரத்தில் தமக்குரிய பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்கள் எதிர்வரும் மார்ச் மாத இறுதிப் பகுதியில் நடைபெறவுள்ள இறுதிப்பரீட்சையில் தோற்றுவதற்குரிய விண்ணப்பங்களை அனுப்புவதற்காக எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு வருகை தருமாறும் கல்லூரி அதிபர் கோரியுள்ளார். (ற-ஐ)

# சர்வதேச விமான நிலையத்துக்கு பலாலி மட்டுமே உகந்த இடமல்ல

## பூநகரிக்கும் முழங்காவிலுக்குமிடையே அமைக்க முடியும் என்கிறார் சுரேஸ்

யாழ்ப்பாணம், பெப். 19

வடக்கு மாகாணத்துக்கு சர்வதேச விமான நிலையம் தேவைதான். அதனைப் பலாலியில்தான் அமைக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிக்கும் முழங்காவிலுக்கும் இடையில் அமைத்துக் கொள்ள முடியும்.- இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான க.சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

கட்டைப்பிராயிலுள்ள அவரது இல்லத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. மிகவும் சனத்தொகை அடர்த்தி கூடிய பிரதேசம் யாழ்ப்பாணம். எதிர்காலத்தில் சனத்தொகை அடர்த்தி இன்னமும் அதிகமாகும் போது சர்வதேச விமான நிலையமும் அமைந்தால் இடநெருக்கடி ஏற்படும். மேலும், சர்வதேச விமான நிலையத்துக்காக காணிகள் சுவீகரிக்க வேண்டி ஏற்படும். - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பலாலி மண் வளம்கொழிக்கும் பிரதேசம் ஒரு நடுத்தரக் குடும்பம், ஒரு பரப்பில் விவசாயம் செய்தாலும், வாழ்க்கையைக் கொண்டு நடத்தக் கூடிய இடம். எனவே காணிச் சுவீகரிப்பை அனுமதிக்க முடியாது. ஆனாலும் வடக்கில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் பூந கரிக்கும், முழங்காவிலுக்கும் இடை யில் பெருமளவு பிரதேசம் வெற்றுக் காணியாக இருக்கின்றது. அங்கே இதனை அமைக்க முடியும். இதனூடாக பூநகரிப் பிரதேசம் மற்றும் கிளிநொச்சி மாவட்டமும் பொருளாதார ரீதியில் வளம் பெறும். நீண்ட கால நோக்கில் சிந்தித்து இதனைச் செயற்படுத்தலாம் - என்றார்.

அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முழங்காவில் தேசிய பாடசாலையின், ஆசிரியைகள் தங்கியிருந்த விடுதிக் கதவுகளை இரவுநேரத்தில்சென்று இராணுவத்தினர் தட்டியுள்ளனர். இதனால் ஆசிரியைகள் பயந்து போய் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாடுகள் காரணமாகத்தான் அவர்களை இங்கிருந்து வெளியேறுமாறு கேட்கின்றோம். தேசிய பாதுகாப்புக்காக அவர்களை இங்கு வைத்திருப்பதானால், தேசிய பாதுகாப்புக்குகந்தக மான இடங்களில் மாத்திரம் வைத்திருக்கட்டும். மக்கள் குடியிருப்புக்கள்நெருக்கமாகவுள்ள, பாடசாலைகளுக்குச் சொந் தமான காணிகளில் இராணு வத்தினர் தொடர்ந்தும் நிலைகொண்டிருக்கக்கூடாது-என்றும்சுரேஷ் பிரேமசந்திரன் ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டார். (ற-5)

## குமாரசாமிபுரம் காட்டுப்பகுதியில் கசிப்பு மீட்பு

கிளிநொச்சி,பெப்.19

விசுவமடு, குமாரசாமிபுரம் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் ஒரு தொகுதி கசிப்பு மற்றும் கோடா தருமபுரம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அதன்போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இன்னொருவர் தப்பியோடியுள்ளார். பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின்போது இவை மீட்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

(ற-ஐ-ரி3)

# கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 2,920 பேருக்கு காணிப் பத்திரங்கள்

## விரைவில் வழங்கப்படவுள்ளன

கிளிநொச்சி, பெப்.19

கிளிநொச்சி மாவட்டம், கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் மேலும் 2 ஆயிரத்து 920 பேருக்கு விரைவில் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பிரதேச செயலாளர் நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் அதிக குடும்பங்களின் நிலத்துக்கான காணி அனுமதிப் பத்திரங்கள் போர் காரணமாக நீண்ட காலமாக வழங்கப்படாதிருந்துள்ளன.

தற்போது 2 ஆயிரத்து 920 பேருக்கு விரைவில் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான காணிக் கச்சேரிகள் இடம்பெற்று வருகின் றன.

குறித்த காணிக் கச்சேரிகள் அடுத்த வாரத்துடன் நிறைவு பெறும். அதற்கான விவரங்கள் பூரணப்படுத்தப்பட்டு விரைவில் அனுப்பி வைப்போம். அதன் பிரகாரம் உரியவர்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப் பெற்றதும் வழங்கப் படும்.- என்றார்.

(ற-ஐ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நிரந்தர ஓட்டோ தரிப்பிடத்தை முருங்கனில் ஏற்படுத்துங்கள்

### ஓட்டோ உரிமையாளர்கள் கோரிக்கை

மன்னார்.பெப்.19

முருங்கனில் ஓட்டோ தரிப்பிடம் அமைத்தல் மற்றும் ஓட்டோச் சேவைகள் தொடர்பாகவும், தமிழ் அரசியல் தலைவர்கள் அக்கறை காட்ட வேண்டும் என்று குறித்த பகுதியைச் சேர்ந்த ஓட்டோ உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜீ.குணசீலன், மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் இ.குமரேஸ் ஆகியோரிடம் ஓட்டோ உரிமையாளர்கள் குறித்த விடயம் பற்றி தெரியப்படுத்தியுள்ளனர்.

இது குறித்து அவர்கள் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாக முருங்கன் பகுதியைச் சேர்ந்த ஓட்டோ உரிமையாளர்களாகிய நாம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றோம்.

ஓட்டோக்களுக்கான நிரந்தர தரிப்பிட வசதிகள் இல்லாமை, சேவைகளில் மற்றைய தரிப்பிடத்தைச் சேர்ந்த ஓட்டோ உரிமையாளர்களுடனான முரண்பாடுகள், வாழ்வாதாரப் பாதிப்பு போன்ற பல விடயங்கள் எம்மைப் பாதித்து வருகின்றன.

எனவே, இந்த விடயம் தொடர்பாக தமிழ் அரசியல் தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டும்- என்று கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக முருங்கன் ஓட்டோ சங்கத்தில் அங்கம் வகிக்கின்ற உரிமையாளர்கள் 30 பேர் கையெழுத்திட்டு கடிதம் ஒன்றையும் வடமாகாண சபை உறுப்பினர் ஜீ.குணசீலன் மற்றும் மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் ஆகியோரிடம் கையளித்துள்ளனர்.

(ற-ஐ-56,21)

## வடக்கு தொழிற்சாலைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

### அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

கிளிநொச்சி,பெப்.19

வடக்கில் போரால் பாதிக்கப்பட்டு இயங்காதுள்ள தொழிற்சாலைகளை மீள இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைவாக பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளத் தொழிற்சாலை, காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை ஆகியவற்றை மீண்டும் இயங்க வைப்பதற்காக, வடமாகாண சபை யின் ஒத்துழைப்பு வேண்டப்பட்டுள்ளது.



இந்த விடயம் தொடர்பில் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடனும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதுடன், அவருக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளேன். - இவ்வாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார் பேசாலையில் லங்கா சதொச கிளையின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பேசாலையில் திறக்கப்பட்டுள்ள "சதொச" கிளை, வடக்கு, கிழக்கின் முதலாவது கிளை என்ற பெருமையைப் பெறுகின்றது. இலங்கையில் திறக்கப்படும் இரண்டாவது கிளையும் இதுவாகும்.

புதிய அரச வரவு- செலவுத்திட்டத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாக நாம் சதொச மூலம் பல்வேறு வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளோம்.

வடமாகாணத்தில் விவசாயத்துறையையும், மீன்பிடித் தொழிலையும் விருத்தி செய்வதற்கு, நாம் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

மன்னாரின் மீன்வளத்தை முறையாகப் பயன்படுத்தி, மீனவர்களுக்கு அதனை இலாபமீட்டும் தொழிலாக மாற்றுவதற்காக, பேசாலையில் மீனவர் தொழிற்சாலை ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளோம்.

இதன் மூலம் மீன்களை குறைந்த விலையில் விற்று நட்டமடைவதற்குப் பதிலாக மீன்களை கருவாடாகப் பதப்படுத்தி, நல்ல விலைக்கு விற்க முடியும்.

அத்துடன் மன்னார் மாவட்டத்தின் காய்கறி உற்பத்திகள், நெல், பனம்பொருள் உற்பத்திகளை நல்ல விலையில் விற்பதற்காக சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். மன்னார் மாவட்டத்தில் வருடம் ஒன்றுக்கு ஐம்பதாயிரம் மெற்றிக்தொன் நெல்லை களஞ்சியப்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மன்னார் வளைகுடாவில் இந்திய மீனவர்களின் சட்ட விரோத மீன்பிடித் தொழிலை நிறுத்துவதற்காக, கடந்த மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, அரச உயர் மட்டத்தின் கவனத்துக்கும், இந்திய உயர்ஸ்தானிகரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது- என்றார்.

(ற-ஐ-56)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**

அமரர்
**வேலுப்பிள்ளை நடராசா**

உதிப்பு
01.12.1939

உதிர்வு
16.01.2016



கடந்த 2016.01.16 ஆம் திகதி இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் வேலுப்பிள்ளை நடராசா அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (18.02.2016) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன.

இன்று (19.02.2016) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் எமது குடும்பத் தலைவர் சுகவீனமுற்று இருந்த காலத்திலும் அவரது மறைவின் பின்னரும் அவருக்கும் எமக்கும் சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் தந்தையை இழந்து தவித்தபோது ஆறுதல் கூறி தோளோடு தோள் நின்று நாம் துவண்டு விழாது காத்த அனைத்துச் சொந்தங்களுக்கும் எம் தலை தாழ்த்தி வணக்கத்தினையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மாசார், பளை. (அ/29159)(11.18)



## பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் செயலமர்வு

### வவுனியாவில் ஆரம்பம்

வவுனியா,பெப்.19

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் பெண்கள் விவகார திணைக்களத்தின் ஏற்பாட்டில் நீண்டகால அடிப்படையில் பெண்களது உரிமைகளை உறுதிப்படுத்துவது தொடர்பிலான செயலமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த செயலமர்வில் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வின் முடிவில், மாகாண மட்ட செயலமர்வுடன் கொள்கை ஆவணம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன், உதவிச்செயலாளர் திருமதி சுஜீவா, சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற-ஐ)

## பாடசாலை கட்டடம் திறப்பு

மன்னார்.பெப்.19

உலக வங்கியின் உதவியுடன் 60 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மன்னார் காக்கையன்குளம் அல்மதீனா பாடசாலை கட்டடம் நேற்று முன்தினம் கைத்தொழில் வணிகத் துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீனால் திறந்து வைக்கப்பட்டது.

ஐந்து வகுப்பறைகளும், ஒரு அதிபர் பணிமனையும் கொண்ட குறித்த பாடசாலையின் கட்டடத் தொகுதி திறப்பு விழாவில் வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன், மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன், முன்னாள் பிரதி அமைச்சர் மற்றும் மடு வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ஐ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை மேற்கு மக்களுக்கு நெல்லியான் கிணற்றுத் தண்ணீர்

## வேள்ட் விசன் நிறுவனம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.19
பொன்னாலை மேற்கில் மீள்குடிய மர்த்தப்பட்ட மக்களுக்கு, வேள்ட் விசன் நிறுவனத்தின் சுகாதாரம் மற்றும் தண்ணீர் வழங்கல் திட்டத்தின் ஊடாக, நெல்லியான் கிணற்றில் இருந்து குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது என்று வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பொன்னாலை மீள்குடியேற்றக் கிராமம், கல்விளான் ஆகிய இரண்டு பிரதேசத்திலும் எந்தப் பகுதிக்கு முதலில் தண்ணீர் வழங்கும் செயல்முறையை செயற்படுத்துவது என்பது தொடர்பில் சிக்கல் நிலை காணப்பட்டது என்றும், எனினும் தற்போது கல்விளான் பகுதி மக்களுடன் மேற்கொண்ட சந்திப்பின் பின்னர் பொன்னாலை மேற்கு மீள்குடியேற்றக் கிராமத்துக்கு நெல்லியான் கிணற்றில் இருந்து தண்ணீர் வழங்குவதற்கான திட்டத்தை வேள்ட் விசன் நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கல்விளான் பகுதியில் தற்போது தண்ணீர் பயன்படுத்தும் நிலையில் உள்ளது. இவர்கள் அருகில் உள்ள வயல்நிலக் கிணறுகளில் இருந்து தண்ணீரைப் பெற்றுக் கொள்கின்றனர். பொன்னாலை மேற்கு மீள்குடியேற்றக் கிராமத்துக்கு பிரதேச சபையால் தண்ணீர்த் தாங்கிகள் ஊடாகவே தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. பொன்னாலை மேற்கு மீள்குடியேற்றக் கிராம மக்கள் தண்ணீரைப் பணம் செலுத்திப் பெற்றே பயன்படுத்தி வருகின்றனர்.

இவர்களின் தண்ணீருக்கான தேவைப்பாடுகளை அறிவதுடன், சங்கானை வைத்தியசாலைப் புனரமைப்புத் திட்டத்தில் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக, உண்மையான தேவைப்பாட்டை அறிந்து வேள்ட் விசன் நிதியை, பயனுள்ள ஒரு திட்டத்துக்காகச் செலவிட வேண்டும் என்ற கோரிக்கைகள் பிரதேச சுகாதார சேவைகள் நிலையத்தால் முன்வைக்கப்பட்டன.

எனவே வேள்ட் விசன் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட மூன்று கட்ட ஆய்வுகளின் அடிப்படையில் பொன்னாலை மேற்கு மீள்குடியேற்றக் கிராமத்தில் தண்ணீர் மாசு அதிகமாக அறியப்பட்டது.

எனினும் கல்விளான் பகுதியில் குறைந்தளவு பாதிப்புக்களே உணரப் பட்டன. அதனால் பொன்னாலைப் பிரதேசத்துக்கு இந்தத்திட்டத்தை மேற் கொள்வதற்கான வேண்டுகோள் வேள்ட் விசன் நிறுவனத்தின் திட்ட முகாமையாளருக்கு உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

வேள்ட் விசன் நிறுவனம், நான்கு வருடச் செயற்றிட்டமான சுகாதாரம் மற்றும் நீர் வழங்கல் என்னும் இந்த திட்டத்தின் ஆரம்ப கட்ட ஏற்பாடுகளை வலி.மேற்கு பிரதேச சபை, பிரதேச செயலகம் என்பவற்றின் ஒத்திசைவுடன் விரைந்து முன்னெடுக்கவுள்ளது. (ற-ஜ-ரி5,50)

### பூசணிக்கொடிகள் விசமிகளால் அழிப்பு

சாவகச்சேரி,பெப்.19
விளை நிலத்தில் காணப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட பூசணிக் கொடிகளைப் பிடுங்கி அழித்தனர் விசமிகள். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு மிருசுவில் கெற்பேலியில் இடம்பெற்றுள்ளது.

தனது காணியில் 2 ஆயிரம் பூசணிக் கன்றுகளை நடுகை செய்து பராமரித்து வந்ததாகவும், கடந்த சனிக்கிழமை இரவு தோட்டத்தினுள் புகுந்த இனந்தெரியாதோர் அங்கு காணப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட பூசணிக் கொடிகளைப் பிடுங்கி எறிந்து விட்டுச் சென்றுள்ளனர் எனவும் பாதிக்கப்பட்ட விவசாயி கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் இதுதொடர்பானஅறிக்கையைத் தாக்கல் செய்துள்ளனர். (ற-ஜ-9)

### வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், பெப்.19
கோப்பாய், நீர்வேலி மத்தி ஸ்ரீகாளி முத்துமாரி அம்பாள் ஆலயத்துக்குப் புதிதாக உருவாக்கப்பட்ட சப்பை ரத ( சப்பரம் ) வெள்ளோட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கு நடை பெறவுள்ளது.

நீர்வேலி காளிமாரி அம்பிகா சிற்பக்கலைக் கூட ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ ஜ.கமல்ஹாசன் தலைமையில் இந்தச் சப்பை ரதம் உருவாக்கப் பட்டுள்ளது. (ற-ஜ-9)


### மீட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம்,பெப்.19
நூலக கற்கை நெறி தரம் ஒன்றுக்கான பரீட்சை அடுத்த மாதம் 12, 13 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குரிய மீட்டல் வகுப்புகள் இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் யாழ் பல்கலைகழகத்தால் நடத்தப்படவுள்ளன. பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு இலங்கை நூலகச்சங்க, யாழ் நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார். (ற-ஜ-ரி4)

# மரண அறிவித்தல்

## முத்தையா பத்மநாதன் (உருத்திரம்)



மலர்வு : 18.11.1930 உதிர்வு : 15.02.2016

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்.கந்தர்மடத்தை வதிவிடமாகவும், கனடா - மார்க்கத்தில் வாழ்ந்தவருமாகிய முத்தையா பத்மநாதன் (உருத்திரன்) 15.02.2016 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், ராஜேஸ்வரியின் (ராசாத்தி) அன்புக் கணவரும், சுதர்சன் (கனடா), சுஜிதன் (கனடா),சுதாந்தி (ஜேர்மனி), Dr.சுதர்சினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமுதினி, கருணா, நரேந்திரா, Dr.சசிகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கனகராசா, குணராசன் (கனடா), சுசீலாதேவி (நியூசிலாந்து), காலஞ்சென்ற சுவேந்திரராசா, ஜெயராசா (கொழும்பு),பத்மாதேவி (ராதா - கனடா), காலஞ்சென்ற மகேந்திரராஜா, விஜயராசா (கொக்குவில்), பாலராசா (UK) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பவளரத்தினம் (இந்தியா),பவானி (கனடா), பரந்தாமன்( நியூசிலாந்து), காலஞ்சென்ற புஷ்பதேவி, பங்கஜலீலா (கொழும்பு), காலஞ்சென்ற சிவப்பிரகாசம், காலஞ்சென்ற சுமதி, மல்லிகா (கொக்குவில்), ஞானரஞ்சினி (லண்டன்), காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரி, பாலசுப்பிரமணியம், சண்முகலிங்கம், பாலசிங்கம் (இலங்கை), கமலாம்பிகை (கனடா), தர்மாம்பிகை ( இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், டிலானி,டனில், சாருகன்,சனகன்,சாம்பவி,அர்த்தனா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave, Markham என்ற முகவரியில் நாளை (20.02.2016) சனிக்கிழமை மாலை 4 மணி முதல் 9 மணிவரையும் மறுநாள் ஞாயிறு காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை அஞ்சலிக்காகவும், ஈமக்கிரியைகளுக்காகவும் வைக்கப்பட்டு Highland Hills Crematorium,12492 Woobine Ave, Gormley, ON.LOH IGO வில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (சி/29325) (11,15,20)

**தொடர்புகளுக்கு:**
**சுதர்சன்** (மகன் - 905 944 1453), **சுஜிதன்** (மகன் - 905 471 9928),
**சகோதரர்கள்** - மு.குணராசன் (905 471 3040), சி.பத்மாதேவி (ராதா - 416 847 5317),
ராசன் (கொக்குவில் - 075 047 3613), பெறாமகன் சுபா - 416 561 2782

### வீடுகள் கையளிக்கும் நிகழ்வு

கொழும்புத்துறை, பெப்.19
கொழும்புத்துறை வசந்தபுரம் கிராமத்தில் யாழ்.கியூடெக் கரித்தாஸ் நிறு வனத்தால் அமைக்கப்பட்ட 14 வீடுகளை பயனாளிகளுக்குக் கையளிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற வுள்ளது.

5 லட்சத்து 80ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்செலவில் அமைக்கப்பட்ட குறித்த வீட்டுத் திட்டத் திறப்பு விழா கியூடெக் இயக்குநர் அருட்திரு. கியூஜின் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, சிறப்பு விருந்தினராக கரித்தாஸ் நிறுவன தேசிய இயக்குநர் அருட்திரு ஜோர்ஜ் சிகாமணி அடிகள், விசேட விருந்தினர்களாக யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன், பருத்தித்துறை மறைக் கோட்ட குரு முதல்வர் அருட்திரு. ஏ.யாவிஸ் அடிகள், பாசையூர் பங்குத் தந்தை அருட்திரு. லியோ ஆம்ஸ்ரோங் அடிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-135)

### நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.19
நீர்வேலி, கரந்தன் கலைவாணி சனசமூக நிலையத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நிலைய மண்டபத்தில் இடம் பெற்றது.

அதில் நிலையத்தின் தலைவராக ஆ.சுந்தரமூர்த்தி, செயலாளராக இ.தயாநிதி, பொருளாளராக சி.அற்புதராசா, உப தலைவராக க.நாகராசா, உப செயலாளராக ஞா.நிசங்கன் ஆகியோர் தேர்ந் தெடுக்கப்பட்ட துடன் 16 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ற-ஜ)

### பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா

சாவகச்சேரி,பெப்.19
தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையில் 12.6 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரு மாடி வகுப்பறைத் தொகுதி நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை வகுப்புகள் நடைபெறும் இந்தப் பாடசாலையில் தற்போது 451 பிள்ளைகள் கல்வி கற்கின்றனர்.

இந்த நிலையில் வட மாகாண பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி நிதியில் மாடிக் கட்டடம் அமைக்க கடந்த வருடம் நிதி ஒதுக்கப்பட்டு, வேலைகள் வலயக் கல்விப் பணிப்பாளரின் நேரடிக் கண்காணிப்பில் இடம்பெற்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் சி.கந்தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், மாகாண திறைசேரி பிரதம கணக்காளர் சி.பத்மநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்கால பேரம் பேசல்களை அம்பலமாக்குவார் பொன்சேகா

## மகிந்தவுக்குச் 'செக்' வைக்கிறது மைத்திரி தரப்பு

கொழும்பு, பெப். 19
ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக விடுதலைப் புலிகளுக்குப் பணம் வழங்கியவர் யார்? அந்தப் பணத்தினூடாக எவ்வாறான ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன என்பது உள்ளிட்ட முக்கிய பல இரகசியத் தகவல்களை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விரைவில் அம்பலப்படுத்துவார் என்றுசிறிலங்கா சுதந்திரக் கட்சிதெரிவித்துள்ளது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே, சு.கவின் சிரேஷ்ட உறுப்பினர்களுள் ஒருவரான அமைச்சர் சரத் அமுனுகம மேற்கண்ட தகவலை வெளியிட்டார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-
மின்சாரக் கதிரையைக் காண்பித்து அரசியல் நடத்தியவர்கள், இன்று இராணுவத்தைக் குறிவைத்து அரசியலை முன்னெடுக்கின்றனர்.
இலங்கைக்கு எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில்லை. மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றே கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.
அதனை எவ்வகையான நீதிமன்றத்தின் கீழ் விசாரணை செய்வது என்பதை இலங்கை அரசே தீர்மானிக்கும் என ஜெனிவாவில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.
உள்ளகப் பொறிமுறையிலேயே அனைத்து விசாரணைகளும் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி தெளிவாகக் கூறியுள்ளார். ஆகவே, இந்தவிடயம் தொடர்பில் எவரும் குழப்பமடையத் தேவையில்லை.
சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை கடந்த ஆட்சியாளர்கள் மிகவும் கொடூரமான முறையில் நடத்தினர். அவரைச் சிறையில் அடைத்து ஜம்பர்" அணிவித்தனர். இவ்வாறான கொடுமை எந்தவொரு இராணுவச் சிப்பாய்க்கும் நல்லாட்சி அரசில் இடம்பெறாது.
எனினும், துட்டகைமுனு அரசின் காலம்முதல் இன்றுவரையான



காலப்பகுதியில் தோன்றிய சிறந்த இராணுவத் தளபதிக்கு அந்தக் கதியைச் செய்தவர்கள், இன்று இராணுவச் சிப்பாய்களின் நிலைமை தொடர்பில் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை பாராட்டுகின்றேன். பொன்சேகாவை சிறையிலிருந்து மாற்றி கடற்படை ரெக் ஹவுஸ் இல் வைக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.
அதேவேளை, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக விடுதலைப்புலிகளுக்குப் பணம் கொடுத்தவர்கள் யார்? அந்தப் பணத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் என்ன? இவை தொடர்பான தகவல்களை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விரைவில் வெளியிடுவார்- என்றார். (த-சி)

### முன்னாள் சிப்பாய் வெட்டிக் கொலை

கொழும்பு, பெப். 19
கல்கிரியாகம, புதுகேஹின்ன பிரதேசத்தில் வயலுக்குச் சென்ற 45 வயதுடைய விவசாயி ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார். இவர், அங்கவீனமடைந்த முன்னாள் இராணுவச் சிப்பாய் என்று பொலிஸார்தெரிவித்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் இவ்வாறு கொலைசெய்யப்பட்ட நபர், 25 ஏக்கர் வயல் காணிக்குச் சொந்தமானவர் என்றும், இவரது கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தில் மற்றுமொரு அங்கவீனமடைந்த முன்னாள் இராணுவச் சிப்பாய்கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

### மஞ்சள் கோட்டில் விபத்து; இரண்டு பெண்கள் சாவு

கொழும்பு, பெப். 19
பாதசாரிக் கடவைகளைக் கடக்க முயன்ற இருவர், வாகனங்கள் மோதி உயிரிழந்துள்ளனர். 28 வயதான யுவதியும், 45வயதானபெண்ணொருவருமே உயிரிழந்தவர்கள் ஆவார்கள்.
ஹோமாகம, கல்விலவத்த மாஓயா மாவத்தைக்கு அண்மையிலுள்ள பாதசாரி கடவையைக் கடந்துகொண்டிருந்த யுவதியொருவர் மீது லொறி மோதியதில் அந்த யுவதி உயிரிழந்துள்ளார்.
புளத்கோஹூபிட்டியவை வசிப்பிடமாகக்கொண்ட பட்டதாரியான அந்த யுவதி, தனியார் நிறுவன மொன்றில்கடமையாற்றுகின்றார். கடமைக்காக அவர், நேற்று முன்தினம் புதன்கிழமை காலை சென்றுகொண்டிருந்தபோதே இந்தச்சம்பவம்இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த யுவதி, ஹோமாகம வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்றும், லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
இதேவேளை - ஹிக்கடுவ பத்தேகம வீதியில், சுமங்கல வித்தியாலயத்துக்கு அண்மையிலுள்ள பாதசாரி கடவையில், வீதியைக்கடந்துகொண்டிருந்த 45 வயதான பெண்மீது, சிறியரக லொறி மோதியதில் அந்தப் பெண் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-சி)

## கைதாக வேண்டியோர் மகிந்தவும் ஷிரந்தியுமே

### சொல்கிறார் அசாத் சாலி

கொழும்பு, பெப். 19
யோசிதவுக்குப் பதிலாக அவரது பெற்றோர்களான மகிந்தவும், அவரது மனைவியான ஷிரந்தியுமே கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் என மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தவறியுள்ளது. அவர் தனது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தார். காடுகளுக்குச் சென்று யானைகளைப் பிடித்து வந்தார். அத்துடன், யானைகளை வளர்ப்பதற்குரிய அனுமதிப்பத்திரங்களை பெறாமலேயே அவற்றை வளர்த்து வந்தார்.



மேலும், முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவை அங்கொடைக்குஅழைத்துச்சென்று அவரை ஒரு தடவை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அவர் ஒன்றுக்கொன்று முரணானசெய்திகளைக்கூறுகின்றார். அத்துடன், யோசிதவைக் கைது செய்வதற்குப் பதிலாக அவரது பெற்றோர்களானமுன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் முதற்பெண்மணியான ஷிரந்தி ஆகியோரே கைது செய்யப்பட்டிருக்க வேண்டும்- என்றார். (த)

## சாதாரண உடையில் யாத்திரையில் ஈடுபட்ட பௌத்த பிக்குகள் கைது

கொழும்பு, பெப். 19
காவி உடை அணியாமல் சாதாரண உடையில் சிவனொளிபாத மலைக்கு யாத்திரை மேற்கொண்ட அநுராதபுரத்தைச் சேர்ந்த ஐந்து பௌத்த பிக்குகளை ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
அநுராதபுரம் சந்தலாங்காவ பிரதேசத்திலிருந்து சிவனொளி பாதமலைக்கு யாத்திரிகர்களாக காவி உடை அணியாமல் சாதாரண உடையில் வந்த ஐந்து பௌத்த பிக்குகளில் ஒரு பிக்குவிடமிருந்து கஞ்சா போதைப்பொருள் ஹற்றன் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.
கடந்த செவ்வாய் இரவு 11 மணியளவில் ஹற்றன் குடாகம பகுதியில் ரோந்துக் கடமையில் ஈடுப்பட்டிருந்த ஹற்றன் பொலிஸாரால் இந்த 5 பேர் பயணித்த வாகனம் திடீரெனப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டபோது அதில் பயணித்த ஒருவரிடமிருந்து கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஐவரும் பௌத்த பிக்குகள் என்பதும் தெரிய வந்தது.
இதனையடுத்து இந்த ஐந்து பேரையும் கைது செய்த ஹற்றன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட பின், சம்பந்தப்பட்ட ஒரு பிக்குவை ஹற்றன் நீதிவானிடம் முன்னிலைப்படுத்தினர்.
ஏனைய நான்கு பௌத்த பிக்குகள் குறித்து, விகாரையின் தேரருக்கு அறிவித்த பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

## சிறுநீரக மோசடி குறித்து விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, பெப். 19
மலையக மக்களை ஏமாற்றி அவர்களது சிறுநீரகங்கள் விலைக்கு பெறப்பட்டுள்ளமை குறித்து வெளியாகியுள்ள செய்தி தொடர்பிலான விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
சிறுநீரகங்களை விலைக்குப் பெற்ற இந்த நடவடிக்கை எந்த வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது என்பது தொடர்பாகவும், இந்தச் செயலில் ஈடுபட்டுள்ள வைத்தியர்கள் எவர் என்பது தொடர்பாகவும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
உலகத் தொழு நோயாளர் தினத்தையொட்டி இலங்கைத் தொழுநோய் ஒழிப்பு இயக்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை நேற்றுமுன்தினம் புதன்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைத்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், மலையகப் பெருந் தோட்டங்களைச் சேர்ந்தவர்களை அழைத்து வந்து லட்சக்கணக்கில் பணம் தருவதாகக் கூறி அவர்களை ஏமாற்றி சிறுநீரகங்கள் பெறப்பட்டுள்ளன. ஆனால், அவர்களுக்குச் சொற்ப பணமே வழங்கப்பட்டுள்ளது.
என்றாலும் இந்த மோசடி வியாபாரம் குறித்து உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு குற்றப்புலனாய்வுப்பொலிஸாருக்கு ஆலோசனைவழங்கப்பட்டுள்ளது.
அதேநேரம் இந்திய அரசு சுட்டிக்காட்டிய சிறுநீரக வியாபாரம் தொடர்பாக ஆராயவென நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட குழுவின் அறிக்கை எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.
அந்த அறிக்கையின்படி 6 வைத்தியர்கள் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. எனினும் அவர்களில் சிலர் வைத்தியர்கள் அல்லர். இந்தக் குழு, சிறுநீரகம் பெறப்பட்ட மருத்துவப் பகுதி குறித்தே கவனம் செலுத்தியுள்ளது. ஆனால், இந்தவிடயம் தொடர்பாக புலன் விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் இன்டர் போலின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். (த)

## மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் முகவர்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, பெப். 19
மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கும் வெளிநாட்டு முகவர் நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள் ளதாக பதில் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.
சவூதி அரேபியா, கட்டார், குவைத், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஜோர்தான் உட்பட மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிந்து கொண்டிருக்கும்போது பல்வேறு காரணங்களினால் உயிரிழந்த இலங்கையர்கள் 34 பேரின் உறவினர்களுக்கு 5 கோடி 70 லட்சம் ரூபா நிதியை வழங்கி வைக்கும் வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லசந்த கொலைக் குற்றவாளிகளின் உருவங்களை வெளியிட்டது பொலிஸ்




கொழும்பு, பெப்.19
சண்டே லீடர்' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக் குற்றவாளிகள் என்று சந்தேகிக்கப்படும் இருவரின் உருவ மாதிரிகளைப்பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ளது.

இந்தக் கொலை தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் சாட்சியமளித்தவர்கள் வெளிப்படுத்திய தகவல்களுக்கு அமைய, பொலிஸ்குற்ற அறிக்கை பிரிவின் பொலிஸ் சித்திரகாரர்களால் இவ்விரு சித்திரங்களும் தீட்டப்பட்டுள்ளன.

முதலாவது சந்தேகநபர், 35 வயது மதிக்கத் தக்கவர். உயரம் 5 அடி 8 அங்குலம். கண்கள் கபில நிறம், மாநிறத் தோற்றம் கொண்டவர்.

இரண்டாவது சந்தேகநபர் 40 வயது மதிக்கத்தக்கவர். உயரம் 5 அடி 10 அங்குலம். பருமனான உடற் தோற்றம்கொண்ட பொது நிறமானவர்.

> இந்தக் கொலை தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் சாட்சியமளித்தவர்கள் வெளிப்படுத்திய தகவல்களுக்கு அமைய, பொலிஸ் குற்ற அறிக்கைப் பிரிவின் பொலிஸ் சித்திரக் காரர்களால் இவ்விரு சித்திரங்களும் தீட்டப்பட்டுள்ளன.

இவ்விரு சந்தேகநபர்கள் தொடர்பிலும் சரியான தகவல்கள் தெரியுமாயின், 0718591753, 0718591770, 0773291500 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிவிக்கமுடியும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அதிகாரியுமான சட்டத்தரணி ருவன் குணசேகர கையொப்பமிட்டு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(து-சி)

# மகிந்தவின் பயணத்தை தடுக்கவே யோசித கைது

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, பெப் 19
புதிய கட்சியை உருவாக்கி வெற்றிநடைபோடுவதற்குத் தயாராகும் மகிந்தவின் அரசியல் பயணத்துக்கு கடிவாளம் போடுவதற்காகவே யோசித ராஜபக்ச கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று புதியதொரு விளக்கத்தை நேற்று வழங்கியுள்ளது மகிந்த அணி.

பொரளை என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர்உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் கூறியதாவது:-
சி.எஸ்.என். தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டபோது 5 மில்லியன் ரூபா வெளிநாடொன்றில் இருந்து கிடைக்கப்பெற்றது என்று கூறப்பட்டுள்ளமையானது முற்றிலும் பொய்யான விடயம். அவ்வாறு எந்தவொரு நாட்டிலிருந்தும் நிதி கிடைக் கவில்லை. அது உண்மை என்றால் அதன் சாட்சியங்களை முன்வைக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

207 மில்லியன் ரூபா, சி.எஸ். என். நிறுவனம் ஆரம்பிப்பதற்காக மூலதனமாக இடப்பட்டுள்ளது. அது தொடர்பில் எந்தவித ஆதாரமும் இல்லை என்று தெரிவித்துத்தான் பொலிஸ் நிதிக் குற்றவியல் பிரிவால் யோசித ராஜபக்ச கைதுசெய்யப்பட்டிருந்தார். 207 மில்லியன் ரூபா எவ்வாறு கிடைக்கப்பெற்றது, அதில் எத்தனை பேர் பங்குதாரர்கள் என்று தெளிவான அறிக்கை யையும், ஆதாரத்தையும் சமர்ப்பித்துள்ளோம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் புதிய கட்சியொன்று உருவாகும் என்ற அச்சத்தின் காரணமாகவே மைத்திரி யோசிதவைக் கைது செய்ய உத்தரவிட்டிருந்தார். நாட்டின் சட்டம், அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட இடமளிக்க முடியாது. நாட்டின் அரச வளங்களை யோசிதவோ மகிந்தவோ அல்லது எவராயினும் சூறையாடியிருந்தால் சட்டத்தின்முன் நிறுத்தலாம். அதற்கு நாங்களும் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை.

> நாட்டின் சட்டம், அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட இடமளிக்க முடியாது. நாட்டின் அரச வளங்களை யோசிதவோ, மகிந்தவோ அல்லது எவராயினும் சூறையாடியிருந்தால் சட்டத்தின் முன் நிறுத்தலாம்.

ஆனால், பொய்க் குற்றச்சாட்டில் ஒருவரின் அரசியல் நடவடிக்கைகளை முடக்குவதற்கு இவ்வாறு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு அனுமதியளிக்கக் முடியாது. யோசித கைதுசெய்யப்பட்டமைக்கான காரணம் தொடர்பில் அரசுடன் நேரடி விவாதத்துக்கு நாங்கள் தயார் என்றும் அவர் சவால் விடுத்துள்ளார். (து-சி)



# நியூசிலாந்துப் பிரதமர் அடுத்த வாரம் வருகிறார்

கொழும்பு, பெப்.19
இலங்கை- நியூசிலாந்துக் கிடையில் வளர்ந்து வரும் வர்த்தக மற்றும் அரசியல் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் நியூசிலாந்துப் பிரதமர் ஜோன் கீ அடுத்த வாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கைக்கு வரும் ஜோன் கீ, ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதுடன் உள்ளூரிலுள்ள வர்த்தகர்களுடனும் பேச்சு நடத்தவுள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ள நியூசிலாந்து பிரதமர்ஜோன் கீ இலங்கைக்கு வருகைதந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த்)

# மனிதாபிமானம் குறித்து மகிந்தவுக்கு தெரியாது

## கூறுகின்றார் சந்திரிகா

கொழும்பு, பெப் 19
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு மனிதாபிமானம் என்றால் என்னவென்றே தெரியாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பிரபல அரசியல் தலைவரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் கணவருமான விஜயகுமார ரணதுங்கப் படுகொலை செய்யப்பட்ட ஞாபகார்த்த நிகழ்வு கடந்த செவ்வாய்கிழமை அவரது பிறந்த இடமான சீதுவையில் அனுஷ்டிக்கப்பட்டது. சந்திரிகா குமாரதுங்க, ஜீவன் குமாரதுங்க, பேராசிரியர் காலோ பொன்சேகா ஆகியோர் விஜயகுமார ரணதுங்கவின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் விஜயகுமார ரணதுங்கவின் ஞாபகார்த்த வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்திருப்பது குறித்து செய்தியாளர்கள் சந்திரிகாவிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, விஜயவை நினைவுகூர மகிந்தவுக்கு எந்தவிதத் தகுதியும் கிடையாது. அவர் உயிருடன் இருக்கும் வரை மகிந்த அவருக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டும், சண்டை போட்டுக் கொண்டும் இருந்தார். அத்துடன் விஜயகுமார ரணதுங்க ஒரு மனிதநேயவாதி. மகிந்தவை விட முற்றிலும் மாறுபட்டவர். அப்படிப்பட்ட ஒரு மனிதநேயவாதியை நினைவுகூர மகிந்த எந்த வகையிலும் தகுதியானவர் இல்லை. ஏனெனில் மனித நேயம் என்றால் என்னவென்றே மகிந்தவுக்குத் தெரியாது எனவும் கூறினார். தி

# பாடப் புத்தகங்களை வழங்குவதற்கு அதிக பணம் அறவிடும் பாடசாலை

## பெற்றோர்கள் முறைப்பாடு

கொழும்பு, பெப்.19
கல்வி அமைச்சின் அனுமதியோடு ஹற்றன் பிரதேசத்தில் இயங்கும் தனியார் சர்வதேச பாடசாலை ஒன்று அதிக விலைக்குப் பாடப்புத்தகங்களைக் குறித்த பாடசாலை யில் கல்வி பயிலும் மாணவர் களுக்கு விற்பனை செய்வதால் பல அசௌகரியங்களுக்கு பெற்றோர்கள் முகங்கொடுத்து வருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலையில் பாடப் புத்தகங்களை ஒரு விலைக்குப் பெற்றுக்கொண்டு அந்த விலைக்கு மேலதிகமாக பாடசாலை நிர்வாகம் பிறிதொரு விலையை நிர்ணயித்து மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது.

மேலும், புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள விலையை மறைத்து அதற்கு மேல் பாடசாலையின் பெயர் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர்களை ஒட்டி விற்பனை செய்வதாகவும், விற்பனைக்கான ஒரு விலைச் சிட்டையையும் கொடுப்பதாகவும் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, 850 மாணவ, மாணவிகள் கல்வி பயிலும் குறித்த பாடசாலையில் நடத்தப்படும் பல நிகழ்வுகளுக்கு அதிக பணம் அறவிடுவதாகவும் பாடசாலையின் மாதாந்த கட்டணமாக 2,500 ரூபா முதல் 5,000 ரூபா வரையிலான தொகை அறவிடப்படுகின்ற இந்த நிலையில், பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் பொருளாதார ரீதியில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கும்பெற்றோர்கள், இதுகுறித்து பாடசாலை நிர்வாகம் கவனத்தில் எடுத்து உரிய தீர்வைப் பெற்றுதர வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

இந்தவிடயம் தொடர்பாகப் பாடசாலை அதிபர் ஏ.இராசையாவிடம் தொலைபேசி மூலம் தொடர்புக்கொண்டு வினாவிய போது,

மாணவர்களுக்கு வழங்கிய பாடப் புத்தகங்கள் கல்வி அமைச்சின் ஊடாகவும், தனியார் நிறுவனங்கள் ஊடாகவும் பல சிரமங்களுக்கு மத்தியில் பெறப்பட்டு வருகின்றன. குறித்த புத்தகங்களைக் கொழும்புபகுதியிலிருந்துகொண்டு வருவதால் போக்குவரத்துச் செலவுஅதிகம். இதனால்அவற்றை அதிக விலைக்கு விற்பதாகவும் அதனைத் தாம் ஒப்புக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.(து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அரக்கப் பரக்க உத்தரவாதம்; முறித்து முடக்கும் போக்கா...?

தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் மற்றும் காணாமற் போனோர் விவகாரம் ஆகியவை குறித்து, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரவுள்ளார்.

குறிப்பிட்ட பிரேரணை, மேற்குறிப்பிட்ட இரு சாரார்களினதும் நீண்ட காலமாக, (இருபது தொடக்கம் இருபத்தைந்து ஆண்டுகளாக) இழுத்தடிக்கப்படும் விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று பாதிப்புற்றோரின் உறவுகள் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர். இந்த விவகாரத்தில், விசேட நீதிமன்றங்கள் மற்றும் புனர்வாழ்வின் ஊடாக விடுதலை செய்வதென்ற ஒவ்வாத நிபந்தனைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கண்ணீர் வடித்து இறைஞ்சுகின்றனர்; உருக்கமாகக் கேட்டுள்ளனர்.

மேற்போந்த விவகாரம் வெறும் நாடாளுமன்ற விவாதமாக முடிவடையக்கூடாது என்பதே பாதிப்புற்றவர்களின் உறவுகளின் வேண்டுதலும் பிரார்த்தனையுமாக உள்ளன. உறவினர் ஒருவர் காணாமற் போகச் செய்யப்பட்டாலோ, அல்லது காணாமற் போனாலோ உண்டாகும் மன உழைச்சல் எத்தகையது என்பதை மிகப் பலரும் அண்மைக்காலமாக அறிந்திருப்பர், அனுபவித்தும் இருப்பர்.


அதேவகை ஒத்ததாக, எந்த வகையான விசாரணையும் இன்றி--

தாமதித்து மேற்கொள்ளப்படும் விசாரணைகள் ஊடாக நீட்டி இழுக்கப்படும்--காலத்தை வாங்கும்--விசாரணைகள் ஊடாக நீண்ட நெடுங்காலமாக சிறைவாசம் அனுபவிக்கிறார்கள் தமிழ் இளம் தலைமுறையினர்.

அவர்கள் மட்டுமன்றி, அவர்களது பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனுபவிக்கும் மன உழைச்சல் எத்தகையது என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

பல ஆண்டுகளாக வேதனையில் மூழ்கி, வாழ்நாளின் பெரும்பகுதியை சிறையிலேயே கழித்த எமது இளைஞர்கள், நீண்ட காலத்துக்குப் பின்னர் நிரபராதிகள் என்று விடுதலை செய்யப்பட்டமையும் இந்த நாட்டின் இருண்ட பக்கங்கள்.

குற்றமற்றவர்களைச் சந்தேகத்தின்பேரில், சிறைகளில் தடுத்து வைத்து, பலப்பல ஆண்டுகளின் பின்னர் விடுதலை செய்யும்போது, அவர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல் எதுவும் இல்லை. பாதிப்புற்றவர் உணவுத் தவிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கப்போவதாக அறிவித்ததும், அதனைக் கைவிடுமாறு கோருவது வழமை என்றாகி விட்டது. பேச்சுத் தமிழில், சம்பந்தப்பட்டவர்களுக்கு அரக்கப் பரக்க உத்தரவாதங்களை வழங்கி, முடக்கிவிட முயல்வதற்கு இடமளிக்கும் போக்கு இனிமேல் எடுபடாது. அதனை அரச தரப்பு மட்டுமன்றி, எமது அரசியல் தலைவர்களும் ஊன்றி உணர வேண்டும். எதிர்பார்க்கலாமா என்ன? எப்போது...??



# பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கை கானல் நீராக மாறிவிடுமா?

கே.கவிப்பிரஷான்

மனிதாபிமானமற்ற வகையில் கொடூரமாக இடம் பெற்ற இறுதிப் போரில் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் - போர்க் குற்றங்கள் போன்றவற்றுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதிப் போர்க்குற்ற அறிக்கைத் தீர்மானத்தின்படி இலங்கை அரசு எவ்வாறு நடந்துகொள்ளப் போகின்றது? கையாளப்போகின்றது? போர்க்குற்றத்திலிருந்து இலங்கையை எவ்வகையில் காப்பாற்றிக்கொள்ள முடியும்? தமிழர்களுக்கு எவ்வாறான அரசியல் தீர்வுத் திட்டங்களை வழங்கலாம்? போர்க்குற்ற விசாரணை தொடர்பில் சிங்கள இனவாத -மதவாதிகளின் மனநிலை என்ன? என்பவற்றுக்கான நாடித் துடிப்பை அறிந்துவிட்டு - தெரிந்து கொண்டு சென்றுள்ளார் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சையித் அல்-ஹுசைன். நான்குநாள் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வந்திருந்த ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் சையித் அல்-ஹுசைன், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், பல்வேறுபட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் மக்கள் தரப்பினரையும் சந்தித்திருந்தார்.

"நான் அடுத்தமுறை வரும்போது நீங்கள் சொந்த இடங்களில் வசிப்பீர்கள்"-என்றஓர் உறுதிமொழியும் போரினால்இடம் பெயர்ந்த மக்களிடையே சையித் அல்-ஹுசைன் கொடுத்திருந்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கைப் பயணம் குறித்து நாட்டிலுள்ள மக்கள் மட்டுமல்ல, உலகநாடுகளும் பெரும் எதிர்பார்ப்போடு காத்திருந்தன.

போரினால் இடம் பெயர்ந்த மக்களிடையே இவரது வருகையால் தமக்கொரு நிரந்தரமான தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் அவர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை மட்டுமே கொடுத்துச் சென்றுள்ளார் ஆணையா ளர்.

இவரது வருகையின் பின்னர் பல்வேறுபட்ட விமர்சனங்களும் எதிர்மறையான கருத்துகளும் எழத்தொடங்கியுள்ளன.

இதற்குப் பிரதான காரணம், இவரது நிகழ்ச்சி நிரலும் அவர் வெளியிட்டுள்ள பல்வேறு கருத்துகளும் ஆகும்.

வழுவழுப்பான உறவைவிட [illegible] என்றார்கள். அது போலத்தான் இன்றைய நல்லாட்சி அரசின் போக்கு தமிழர்களின் அரசியல் பயணத்தை மாற்றிவிடுமோ என்ற சந்தேகம் துளிர்க்கத் தொடங்கிவிட்டது.

அத்துடன், ஐ.நாவின் போர்க் குற்றத் தீர்மானம் கானல் நீராகி விடுமோ என்ற அச்சத்திலேயே பாதிக்கப்பட்டவர்கள் உள்ளனர்.

இலங்கைக்கான வருகையின் பின்னர், ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு ஆணையாளர் வழங்கிய செவ்வியில் ,

## இலங்கை மீது எதுவும் திணிக்கப்படவில்லை

"இலங்கை அரசு மீது நாம் எதனையும் திணிக்கவில்லை. எமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளோம். பக்கச்சார்பற்ற விசாரணைக்கு சர்வதேசத்தின் பங்களிப்பு அவசியமில்லை என ஜனாதிபதி மைத் திபால சிறிசேன தெரிவித்துள்ளார். இலங்கை தீர்மானிப்பது எதுவாக இருந்தாலும் பாதிக்கப்பட்டவர்களின் ஆதரவு இருக்குமேயானால் அது எம்மைப் பொறுத்தவரையில் ஏற்புடையதே"-என்று தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வந்திருந்த ஆணையாளர் வடமாகாண முதலமைச்சருடன் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தார். இதன் போது, தமிழ் அரசியல் கைதிகளைப் பொது மன்னிப்பில் விடுதலை செய்வதற்குச் சர்வதேச சட்டத்தில் இடமில்லையென்று இடித்துரைத்திருந்தார்.

இதனைச் சிங்கள ஊடகங்கள் திரிவுபடுத்திச் செய்திகளை வெளியிட்டிருந்தன. தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கக்கூடாது என்று மனித உமை ஆணையாளரே தெரிவித்து விட்டார் என மக்களிடையே ஒரு பொய்யைப் பரப்பியது தென்னிலங்கை.

இதேவேளை, வடக்கு, கிழக்குக்குச் சென்றிருந்த ஆணையாளர் போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து கலந்துரையாடத் தவறிவிட்டார்.

கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக சர்வதேச விசா ரணையாளர்களைக் கொண்டு நடத்தப்பட்ட விசாரணைகளின் ஊடாகவே இறுதிப் போர்க்குற்ற அறிக்கை ஐ.நாவினால் தயாரிக்கப்பட்டது.

பல்வேறுபட்ட இழுபறிகளுக்கு மத்தியில் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் ஐ.நாவின் 30 ஆவது கூட்டத்தொடரில் மனித உரிமைகள் ஆணையாளர் சையித் அல்-ஹுசைனால் இறுதி அறிக்கை மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இறுதிப் போர்க்குற்ற அவலங்கள் பெரும்பாலானவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதாவது, 40 ஆயிரத்துக்கும் மேலான உயிர்கள் போரில் பலிகொள்ளப்பட்டமை, மனித உரிமைகள் மீறப்பட்டமை, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை - சித்திரவதைகள், ஆயிரக்கணக்கான பெண்கள் விதவைகளாக்கப்பட்டமை, ஆயிரக்கணக்கானோர் அங்கவீனமாக்கப்பட்டமை, சொத்துகள் சூறையாடப்பட்டமைபோன்றவையே உள்ளடக்கப்பட்டன. இறுதி அறிக்கையைத் தயாரித்த அல்-ஹூசைன் இவற்றின் வலியை நிச்சயம் உணர்ந்திருப்பார்.

**அப்பாவி மக்களுக்கு நீதி வேண்டும்**

போரினால் அப்பாவி மக்கள் பட்ட துன்பங்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்று அடித்துக் கூறியிருந்தவர் இவர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இலங்கையின் நீதிக்கட்டமைப்பில் நம்பிக்கையிழந்து சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தின் ஊடாக நீதி கிடைக்க வேண்டும் என்று அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இறுதிப் போர்க்குற்ற அறிக்கையில் தமிழர்களின் நலனில் அக்கறை கொண்ட அளவுக்கு சையித் அல் - ஹூசைனின் இலங்கைக்கான வருகை அமையவில்லை என்றே பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் போர்க் குற்றம் தொடர்பில் கடும்போக்குடன் நடந்து கொண்ட மேற்குலகம் அறிக்கை யைச் சமர்ப்பித்து பல மாதங்கள் கடந்து விட்ட நிலையில் இது குறித்து எவ்வித விசாரணைகளையும் இலங்கையில் நடத்தவில்லை. ஐ.நாவும் இலங்கை அரசும் அதற்கானபடிமுறைகளைத்தயாரப்படுத்துவதாகவும் தெரியவில்லை.

அல் - ஹூசைன் இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் போர் இடம்பெற்றபோது இராணுவத் தளபதியாகச் செயற்பட்ட பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகாவுக்குத் தேசியப்பட்டியல்மூலம்நாடாளுமன்றஉறுப்பினர் பதவியை வழங்கியுள்ளது அரசு. இதிலிருந்து இராணுவத் தரப்பினர் குற்றமிழைக்க வில்லையென அல் - ஹூசைனுக்குத்தெரிவிக்க விரும்பியுள்ளதா அரசு? என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

இதேவேளை, இராணுவத்தினரைப் போர்க்குற்றத்தினுள் அரசு தள்ளுகின்றது என்று கூக்கூரல் இட்டு மகிந்த, கோத்தபாய மற்றும் இவர்களது ஆதரவு அணியினர் ஒரு மில்லியன் கையெழுத்து வேட்டையையும் ஆரம்பித்தனர்.

மகிந்த அணியினரோ, இராணுவத்தையும் நாட்டையும் நல்லாட்சி அரசு காட்டிக் கொடுத்துவிட்டது என்று கூக்குரல் இட்டுக் கொண்டு இருக்கின்றனர்.

ஆனால், போர்க்குற்றவிசாரணைகளைப் பக்கச்சார்ப்பற்ற முறையில் முன்னெடுப்பதற்கு சர்வதேசத்தின் பங்களிப்புகள் அவசியமில்லை என்று மனித உரிமைகள் ஆணையாளரைச் சந்தித்தபோது ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

மகிந்த தனது ஆட்சிக் காலத்தில் சீனாவுடன் அதிக நெருக்கத்தைக் கொண்டிருந்தவர். சீனாவுடன் இலங்கையின் நெருக்கத்தை விரும்பாத அமெரிக்கா, இலங்கைக்கு எதிராகப் போர்க்குற்ற பிரேரணையை ஐ.நாவில் நிறைவேற்ற விடாப்பிடியாக நின்றது.

இறுதிப் போரைத் தடுத்து நிறுத்தாத அமெரிக்கா, பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளின் உதவியுடன் இலங்கைக்கெதிரான போர்க்குற்ற விசாரணைப் பிரேரணையை ஐ.நாவில் 2012 ஆம் ஆண்டு நிறைவேற்றியது.

**நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை**

அன்றைய காலகட்டத்தில் இலங்கையின் விடயத்தில் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் நடந்துகொண்ட விதத்தைப் பார்த்தபோது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதிகிடைக்கும் என்று பெரும்பாலானோர் நம்பியிருந்தனர்.

ஆனால், ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஐ.நாவின் போக்கும் அமெரிக்காவின் போக்கும் இலங்கை அரசுக்குச் சாதகமாகவே அமைந்துள்ளது.

வடக்கு, கிழக்குக்கான தனது பயணத்தை முடித்துக்கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஆணையாளர், போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித நிவாரணங்களையும் அரசு வழங்கத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

இந்தக்குற்றச்சாட்டு குறித்து அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அறிக்கையிலும், ஊடகங்களிலும் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைத்துவிடுமா? என்பதை ஆணையாளர் சிந்திக்க வேண்டும். இலங்கை அரசு விட்ட தவறுகளை இவரும் விடுகின்றார்.

ஏனென்றால், ஐ.நாவின் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட போரினால் பாதிக் கப்பட்ட பகுதிகளையோ அல்லது பாதிக்கப்பட்டவர்களையோ குறிப்பிடும் அளவுக்கு நேரடியாகச் சென்று பார்க்கவுமில்லை; அவர்களின் அன்றாட தேவைகளைப் பற்றிக் கலந்துரையாடவுமில்லை ஆணையாளர். இறுதிப் போர் இடம்பெற்ற வன்னி நிலப்பரப்பிற்குள் நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்டவர்களின் மனநிலையைக் கூட அறிய முற்படவில்லை.

வடக்கு முதலமைச்சரைச் சந்திப்பதற்கு ஆணையாளர் சென்ற வீதியில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, ஆணையாளர் அவர்களுடன் ஒரு சில நிமிடங்கள் கலந்துரையாடியிருந்தார். உங்களுக்குத் தக்க பதில் கிடைக்கும்என்று தெரிவித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டுவிட்டார்.

வலி வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்து மருதனார் மடம் சபாபதிப்பிள்ளை முகாமில் தங்கியுள்ள மக்களை மட்டும் அவர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, வயதான தாய்மார்கள் கண்ணீர் மல்க, "உறவுகள், காணிகள் எல்லாவற்றையும் இழந்து 25 வருடங்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்; எங்களுக்கு விமான நிலையம் வேண்டாம்; துறைமுகம் வேண்டாம்;"– என்றெல்லாம் தமது அபிலாசைகளைக் கொட்டித்தீர்த்தனர்.

இதற்கு அவர் அடுத்த முறை நான் யாழ்ப்பாணம் வரும்போது நீங்கள் எல்லோரும் சொந்த இடங்களில் இருப்பீர்கள்" –என்று வாக்குறுதி அளித்துள்ளார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆணையாளர் சொன்ன ஆறுதல் வார்த்தைகளும் – சந்திப்புகளும் இவைதான். மாறாக, ஜெனிவாவிலேயே சந்தித்துக் கலந்துரையாடக்கூடியவர்களைத்தான் இங்கு வந்தும் சந்தித்துள்ளார் ஆணையாளர்.

ஐ.நாவின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசை வலியுறுத்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனிடம் தெரிவித்திருந்தார் ஆணையாளர்.

ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உமை ஆணையாளர் நாட்டுக்கு வருகை தந்த பின்னரும் இலங்கை அரசு எமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்வதற்குத் தயார் இல்லை என்பதையே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கூற்றிலிருந்து அறிய முடிகின்றது. அத்தோடு, இது நிதர்சனமாகவும் அமைந்துள்ளது.



**பாதிக்கப்பட்ட மக்களின் கனவு கானல் நீராகுமா?**

அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட போர்க்குற்ற விசாரணை தீர்மானத்தின் வலு கொஞ்சம் கொஞ்சமாக நலிவடைந்து வருகின்றது. ஐ.நாவின் போர்க் குற்றத் தீர்மானத்தினால் தீர்வு கிடைக் கும் என நம்பியிருந்த பாதிக்கப்பட்ட மக்களின்கனவு கானல் நீராகிவிடுமோ என்ற சந்தேகத்தை இது ஏற்படுத்தியுள்ளது ஐ.நா வின் மனித உரிமைகள் ஆணையாளர் சையித் அல்–ஹுசைனின் இலங்கைக்கான வருகை.

## பஸ் தரிப்பிடங்களும், பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பயணிகளும்

மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில், முருங்கன் வைத்தியசாலைச் சந்தியில் நிறுவப்பட்டிருக்கும் பஸ் தரிப்பிடங்கள், பயணிகள் தங்கும் இடத்துக்கு வெகு தொலைவில் அமைந்துள்ளதால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள், பாடசாலை மாணவ மாணவிகள், பொதுமக்கள் பலரும் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. வைத்தியசாலைச் சந்தியில் அமைந்துள்ள பயணிகள் தரிப்பிடத்தில் சுமார் ஆறு பேர் வரை அமரக்கூடிய வசதியுள்ளது. அன்றாடம் முருங்கன் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கென முசலி, மடு, மன்னார், மாந்தைப் பிரதேசங்களிலிருந்து ஏராளமான நோயாளர்கள் வருகை தந்து கொண்டிருக்கின்றனர். இயலாத நிலையில் இருக்க இடமின்றி மர நிழல்களின் கீழ் நிற்கும் முதியவர்கள் கூட தங்குமிடத்திலிருந்து சுமார் 100மீற்றர் தூரம் வரை நடந்து, வெயிலிலும், மழையிலும் நின்று பயணிக்க வேண்டியுள்ளது. முருங்கன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்க தூர இடங்களிலிருந்து வரும் மாணவ மாணவிகளும் முருங்கன் காவல் நிலைய வாயிலுக்கு முன்னால் நின்றபடியே பஸ்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். இதனோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் பயணம் செய்து நோயாளர், முதியோர், பொதுமக்கள், மாணவர்களின் வசதிகருதி தகுந்ததொரு தங்குமிடமும், அதற்கு கிட்டிய தூரத்தில் பஸ் தரிப்பிடங்களும் அமைத்துத்தர நடவடிக்கை எடுப்பார்களா?

எ.டி.தேவதாசன் அல்மேடா, முருங்கன்.

## ஐஸ் இடப்பட்ட மீன்களும் அவலப்படும் பாவனையாளர்களும்

சந்தைகளில் ஐஸ் இடப்படாத மீன்களைப் பார்ப்பது அரிதாகி விட்டது. மீன்களைப் பிடிப்பவர்கள் ஐஸ் இட்டு அவற்றைப் பாதுகாப்பது ஒருபுறம் இருக்க, சந்தை வியாபாரிகளும் தமது பங்குக்கு ஐஸ்கட்டிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் பிடிபட்டுப் பல நாள்கள் கடந்துவிட்ட மீன்களை வாங்கி உண்ண வேண்டிய அவலநிலை தோன்றியுள்ளது.

முன்பெல்லாம் இங்கு பிடிபடும் மீன்களைக் கொழும்புக்கு அனுப்பி வைக்கும்போது அவற்றுக்கு ஐஸ் கட்டிகளைப் போட்டுப் பாதுகாக்கும் முறை காணப்பட்டது. இதை ஓரளவு ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் குடாநாட்டுக் கடலில் பிடிபடும் மீன்களுக்கு ஐஸ் இடப்பட்டு விற்பனை செய்வது வேதனை தருகின்றது. ஐஸ் இட்டு விற்பனை செய்யப்படுகின்ற நாள்பட்ட மீன்களை வீடுகளுக்குக் கொண்டு சென்று வெட்டும் போது அவை பிய்ந்து கையுடன் வருவதைக் காண முடிகின்றது. இதனால் அதை உண்பதற்கு அருவருப்பானதொரு நிலை ஏற்படுகிறது.

மேலும் பகல் வேளையில் சந்தையில் விற்பனையாகாத மீன் களைச் சிலர் எடுத்துச் சென்று வேறு இடங்களில் மாலை நேரங்களில் விற்பனை செய்வதையும் காண முடிகின்றது. இதற்கும் ஐஸ்கட்டிகள் தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பருத்தித்துறைக் கடலில் தூண்டில் போட்டுப் பிடிக்கப்பட்டு துடிக்கத் துடிக்க சந்தைக்கு எடுத்துவரப்பட்டு விற்பனையான மீன்களை வாங்கிச் சென்ற ஞாபகம் மனதில் நிழலாடுகின்றது.

அனேகமாக அங்கு இந்த நிலை இருக்குமென நான் நினைக்கின்றேன். ஆனால் அதை உறுதி செய்து கொள்ள முடியவில்லை. வலிகாமம் பிரதேசத்தின் ஏனைய சந்தைகளில் அனேகமாக ஐஸ் போட்ட மீன்களே விற்பனை செய்யப்படுகின்றன. ஊருக்குள் வரும் பெட்டி வியாபாரிகளும் இத்தகைய மீன்களையே விற்பனை செய்கின்றனர்.

பாவனையாளர்கள் பணத்தைக் கொடுத்துத் தரமான மீன்களை வாங்குவதையே விரும்புகின்றனர். ஆனால் ஏனோ முடியவில்லை.

மா.நாகேஸ்வரி, சுன்னாகம்.

## கட்டாக்காலி நாய்களும், கடிபடும் பாதசாரிகளும்

நானாட்டான் பிரதேசத்தில், குறிப்பாக முருங்கன் பசார் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் வெகுவாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் பாதசாரிகள் நாய்களால் கடியுண்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் அவலநிலை ஏற்படுவது மட்டுமன்றி, வாகன விபத்துகளும் இடம் பெற்று வருகின்றன.

கடந்தவாரம் முருங்கன் பசார் பகுதியில், நாய்களால் கடியுண்ட இருவர் முருங்கன், மன்னார் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையைக் கட்டுப்படுத்த பிரதேச சபையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு, மக்களைக் காப்பாற்ற முன்வருவார்களா?

ஏ.டி.தேவதாசன் அல்மேடா, முருங்கன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஈழவாரியம்பதியுறை அ...
திராவிட முறையில் அ...

# வெள்ளோட்ட உற்ச...

சாவகச்சேரி - சங்கத்தானை ஈழவாரியம்பதியுறை ...
மன்மத வருடம் மாசித்திங்கள் 07 ஆம் நாள் ...
திருவருள் பாலித்துள்ளது. அனைத்து அம்பி...

புதிய நவகலச சிற்பத்தேர் நிர்மாணிப்பு | சிந்தனை... திரு. கிருஸ்ணபி...

## 21.02.2016 முற்பகல் 10 மணியளவி... தேர்த்திருவிழா இடம்பெறும்.

### அருளாசியுரை



சிவநேயச் செல்வர்களே!

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஔவையார் கூற்று ஆகும். இன்றும் பொருத்தப்பாடு கொண்ட நிலையில் கலைகளின் உறைவிடமாக மிளிருகின்ற இடம் கோயிலாகும். இவ்வகையில் சாவகச்சேரி சங்கத்தானை ஈழவாரியம்பதியுறை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் மஹோற்சவத்தினால் பெரும் பேரருள் சுரந்திட மதுரை நாயகியாய் சங்கநாதம் ஒலி பேசிட, வலம்புரி நாயகியாம் தாயார் நவகோள நவகலச ரதத்தில் எழுந்தருளும் திருக்காட்சி அருட்காட்சியாய் விளங்கிட, தாயவள் பாதம் பூசித்து ஆசி கூறுகின்றேன்.

ஆணவம் முதலான அகந்தைகளை சுட்டெரித்து தாய் பிள்ளையை அன்போடு அரவணைத்தாற்போல் எமக்கும் நலமான வாழ்வு நல்கிட வல்ல நாயகி மூவுலகும் ஆட்சி செய்த அங்கயற் கண்ணியாய் "பூத்தவளே புவனம் பதின்னான்கும் பூத்த வண்ணம் காத்தவளே....." என்று அபிராமிப்பட்டர் எண்ணிய சிந்தனையில், அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் எனக்கூறிடும் வகையில் இரதம் அமைந்துள்ளது. அதில் அம்பிகை எழுந்து வருகை தந்து அடியார் பிறவிப்பிணி யாவும் போக்கி வளம் ஓங்கி வாழ்ந்திட வழிகாட்டிடும் தாயாக விளங்குகிறாள். "அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்" அதையே சரணாகதியாய் பெற்றிடுக.

"என்றும் வேண்டும் இறவாத இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

### வாழ்த்துச் செய்தி



தேர் என்பது வாழ்க்கையைத் தேர் என்ற செய்தியை எமக்குத் தருகின்றது. தேர் என்றால் ஆராய்ந்துபார் என்று பொருள்.

கோயில்களில் தேர் வெறுமனே ஓடுவதில்லை. அதன் பீடத்தில் இறைவன் இருந்தபின்னரே செப்பமுற ஓடுகின்றது. அதுபோல எங்கள் இதய பீடத்தில் இறைவன் இருந்தால் எங்கள் வாழ்க்கைத்தேரும் சீராக ஓடும்.

தேர் அமைத்து இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என விரும்பிய அடியவர்கள் எம்பெருமானுக்கு அழகிய சித்திரத்தேரை அமைத்துள்ளனர். அதன் வெள்ளோட்டத்தைக் கண்டு மகிழும் பேறடைந்துள்ளனர். எம்பெருமாட்டிக்கென இச்சித்திரத்தேரை வடிவமைத்த கலைஞர்களையும் இத்திருப்பணியை முன்னெடுத்த அம்பிகை அடியவர்களையும் பாராட்டுவதோடு அனைவருக்கும் எம் பெருமாட்டியின் திருவருள் கிடைக்க வேண்டும் எனப்பிரார்த்திக்கின்றேன். குறிப்பாக இத்தேரை வடிவமைத்த திரு. கலாமோகன் அவர்கள் பலவண்ணத் தேர்களை தன் கைவண்ணத்தால் படைத்தவர். புகழையும் விளம்பரத்தையும் விரும்பாத அவர் அமைதியாக இருந்து அரிய பணிகளை ஆற்றி வருபவர். இத் தேரினைச் செதுக்கிய திரு கலா மோகன் அவர்கள் தனது குடும்பத்தாருடன் நீண்ட காலம் வாழ்ந்து இது போன்ற பல சிற்பத் தேர்களை ஆக்கி உதவவேண்டும் என வேண்டிக்கொள்வதுடன் அதற்காக எல்லாம் வல்ல மீனாட்சி அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

பேராசிரியர்.தி. வேல்நம்பி
பீடாதிபதி/ முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
தலைவர்/ யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்.

### மஹோற்சவ குருவின் அருளாசிச்செய்தி



இவ் இலங்கை நாட்டின் வடபால் யாழ் நகருக்கு கிழக்குப் பகுதியான சாவகச்சேரி சங்கத்தானை ஈழவாரியம்பதி எனும் சேத்திரத்தில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் அன்னை ஸ்ரீ மீனாட்சி அம்பிகைக்கு அழகிய நவகலச சித்திரத்தேர் உருவாகி வெள்ளோட்ட விழா மிகச்சிறப்பாக நடைபெறும் காட்சி கிடைக்கும் பேறு பெரும் பேறாக அமைகின்றது.

பல்லவகால தேர் அமைப்புக்களை எடுத்துக் காட்டும் முகமாக சிற்பக்கலைமாமணி கி.கலாமோகன் சிற்பக் கலைக் குழுவினர்களால் அழகிய நவகலச சிற்பத்தேர் உருவாகி வெள்ளோட்டம் நடைபெறுகின்றது.

வெள்ளோட்டம் முடிந்து அம்பிகை இதில் ஏறி அருளாட்சி கொடுக்கும் பேற்றினால் அடியார்கள் அனைவரும் சகல செல்வப் பெருவாழ்வு வாழ வேண்டுமென மீனாட்சி அம்பிகை பாதாரவிந்தங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

மஹோற்சவ குரு
சிவாகம க்ரியா ரத்னநிதி
ச.மு.பாஸ்கர ரவிக்குருக்கள்
அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

### ஆலய பிரதம குருவின் அருள் செய்தி



சாவகச்சேரி சங்கத்தானை ஈழவாரியம்பதி உறையும் தாயார் ஸ்ரீ மீனாட்சியம்பாளுக்கு- நவ கலச சித்திர சிற்பத்தேர் அமையப் பெற்று வெள்ளோட்ட பெருவிழா நிகழ்வுறும் செய்தி அனைவருக்கும் எல்லையற்ற மகிழ்ச்சியைத் தருவதாகும். எமது மட்டுவில் கிராம மைந்தர்- "சிந்தனைசிற்பி" திரு. கி.கலாமோகன் (குழுவினர்) கலாகேசரி சிற்பாலயம் அவர்களின் கலைவண்ணத்தில் அற்புதமாக விஸ்வகர்மாவின் படைப்போ என வியக்கும் வண்ணம் அமைந்துள்ளது இத்தேரின் நிர்மாணப் பணியில் பெரும் பங்கு கொண்டவர்கள் தேர்த்திருப்பணிச் சபையினரும் ஆலயம் சார்ந்த இந்து இளைஞர்களும் ஆகும். அம்பாளை குலதெய்வமாக நினைந்து வழிபாடு செய்யும் இவ் ஊர்பக்தர்கள், வெளிநாடுகளில் வாழும் பக்தர்களின் நிதி- பொருளாதார பங்களிப்பும் ஊக்குவிப்பும் தேர் விரைவில் சிறப்புற அமைய மூலதனமாக அமைந்தது. ஆலய பரிபாலன சபையினரின் ஆலோசனைகளும் ஒத்துழைப்புகளும் காரணியாக அமைந்தது. எல்லோரும் சேர்ந்து வடம் பிடித்து .வெள்ளோட்ட அருட்காட்சியை தரிசித்து அருள் வெள்ளத்தில் மிதப்போமாக மீனாட்சித் தாயாரின் பெரும் கருணை அனைவருக்கும் கிடைக்க பிரார்த்தனைகள்.

கலாநிதி: நு. கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
ஆலய பிரதம குரு

### வாழ்த்துச் செய்தி



சாவகச்சேரி சங்கத்தானை ஈழவாரியம்பதியுறையும் மீனாட்சியம்மனுக்குப் புதிதாக உருவாக்கப்பட்ட நவகலச சிற்பத் தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். ஆலயத்தில் நடைபெறும் விழாக்களில் தேர்த்திருவிழா மிக முக்கியமானதாகும்.

மதுரை மீனாட்சி அம்பாளை ஒத்த வடிவுடைய சங்கத்தானை மீனாட்சி அம்பாளுக்கு அழகுமிக்க சித்திரத் தேர் அமைவது ஊருக்கும் நாட்டிற்கும் பெருமையாகும் வரலாற்று ஆவணமாக மிளிர உள்ள இக்கலைப்படைப்பை உருவாக்கிய கலைஞர்களையும் இந்த நல்ல கைங்கரியத்தைச் செய்த பரிபாலன சபையினரையும் ஊர்மக்களையும் மனமாரப் பாராட்டுகின்றேன்.

தேரோடும் நன்னாளில் சிறப்பிதழ் வெளிவருவதும் இரட்டிப்பு மகிழ்ச்சியூட்டுவதாகும். சித்திரத்தேர் வெள்ளோட்டம் சீராக நிகழவும் சிறப்பிதழ் சிறப்பாக வெளிவரவும் எல்லாம் வல்ல மீனாட்சியம்பாளின் திருவருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

அ. உமாமகேஸ்வரன்,
பணிப்பாளர்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

### வாழ்த்துரை




சாவகச்சேரி சங்கத்தானை ஈழவாரியம்பதியுறை மீனாட்சித்தாயின் தேர்த் திருப்பணியை அருட்பணியாய் ஆற்றியவர் முன்னாள் தலைவர் க.உமாமகேஸ்வரன் ஆவார். அவருடைய செயலுக்கு யான் போதுமானவர் இல்லையாயினும் அப்பணியைச் செயற்படுத்தும் ஆற்றலையும் செயலையும் வழியையும் மீனாட்சி அம்பாள் எனக்குத் தந்துள்ளாள் என்றால் அது மிகையாகாது. சிற்பாச்சாரியர் திரு.கலாமோகன் அவர்களும் அவர்தம் குழுவினர் கூட பல சிரமங்களைச் சந்தித்த நிலையில் வெற்றியை நிலைபெறச் செய்தவர்களாய் விளங்கும் நிலையில் வாழ்த்துவதுடன் தேரில் சங்கத்தானை ஈழ வாரியம்பதியுறை எங்கள் குல நாயகியின் திருக்கோல அழகினைக் காணவைத்த அத்தனை அடியார்க்கும் தேர்த் திருப்பணிச்சபைத் தலைவர் என்ற முறையில் நன்றி கூறுவதை விட அன்னையின் திருவருள் நிறைந்திட வேண்டுகிறேன்.

"பயிரவி பஞ்சமி பாசங்குசை பஞ்சபாணி வஞ்சகர்
உயிரவி உண்ணும் உயிர்சண்டி காளி ஒளிரும் கலா
வயிரவி மண்டலி மாலி சூலி வராகியென்றே
செயிரவி நான் மறைசேர் திருநாமங்கள் செப்புவரே"

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி

திரு.ச. திரவியம்
தேர்த் திருப்பணிச்சபைத் தலைவர்.






| | | | | |
|---|---|---|---|---|
| S.Jana Traders<br>Kaithady Junction Kaithady.<br>T.P. 077 248 7772<br>077 611 5199, 021 205 7181 | சீதா நகை மாளிகை<br>கண்டி வீதி,<br>கொடிகாமம்.<br>தொ.பே. 077 599 9544 | ராஜன் ஆபரணமாளிகை<br>தனங்கிளப்பு வீதி,<br>சாவகச்சேரி.<br>தொ.பே. 077 308 6859 | மீனாட்சி அம்மன்<br>தச்சுத் தொழிலகம்<br>சாரதா வீதி, சங்கத்தானை,<br>சாவகச்சேரி.<br>தொ.பே. 077 749 6002 | V.S. சபாரத்தினம் ஜீவல்லறி<br>Since 1942<br>118, கண்டிவீதி, சாவகச்சேரி.<br>021 227 1177, 077 314 6143 |
| நிரு தச்சுத் தொழிலகம்<br>சராதா வீதி,<br>சங்கத்தானை, சாவகச்சேரி.<br>தொ.பே. 077 869 4250 | சுகி மரத்தளபாட தொழிலகம்<br>சாரதாவீதி,<br>சங்கத்தானை, சாவகச்சேரி.<br>தொ.பே. 077 255 4426 | Sakthi Micro System<br>அரசடி சந்தி, சாவகச்சேரி.<br>தொ.பே. 021 227 0084<br>077 610 2609 | கணேஷா ஹாட்வெயார்<br>கண்டி வீதி, சாவகச்சேரி.<br>தொ.பே. 021 227 0026 | உதயன் மரக்காலை<br>சாரதாவீதி, சங்கத்தானை,<br>சாவகச்சேரி.<br>தொ.பே.077 299 8655 |
| இராமாவில் முருகன் சுவையகம்<br>மீசாலை வடக்கு, புத்தூர் சந்தி,<br>கண்டிவீதி, சங்கத்தானை.<br>தொ.பே. 077 421 8057 | வீனஸ் மரத் தொழிற்சாலை<br>கைலாயபிள்ளை வீதி,<br>சாவகச்சேரி.<br>தொ.பே. 077 925 8692 | VIVI ELECTRONICS<br>கண்டி வீதி, சாவகச்சேரி.<br>தொ.பே. 077 500 2394<br>077 780 6494 | காமாட்சி அம்மாள் கூட்டுறவுக் கைத்தொழிற்சங்கம்,<br>நீர்வேலி (மட்டுப்படுத்தப்பட்டது)<br>பதிவு இல. J/ 1017.<br>நீர்வேலி. தொ.பே. 021 300 3440 | ஸ்ரீதேவி ஜூவல்லர்ஸ்<br>பிரபு வெல்டிங் வேக்ஸ்<br>சாரதா வீதி, சங்கத்தானை,<br>சாவகச்சேரி.<br>077 104 2848 |
| வதனி ஜூவல்லறி<br>கண்டி வீதி, கொடிகாமம்.<br>தொ.பே. 077 800 2724 | V.K.T.Rice Mill<br>நீர்வேலி சந்தி,<br>நீர்வேலி.<br>தொ.பே. 077 325 5882 | மனோ வெல்டிங் வேக்ஸ்<br>பொன்னுச்சுவாமி வீதி,<br>சங்கத்தானை, சாவகச்சேரி.<br>தொ.பே. 077 843 2644 | தேவராசா மணப்பந்தல்<br>நுணாவில் கிழக்கு,<br>சாவகச்சேரி. | சிறி நகை அகம்<br>நவீனசந்தை,<br>சாவகச்சேரி.<br>தொ.பே. 077 936 1416 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சாவகச்சேரி - சங்கத்தானை

# அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தானம்

அமைக்கப்பெற்ற புதிய நவகலச சித்திர சிற்பத்தேர்

# வி சிறப்பிதழ்

**2016.02.19**
**வெள்ளிக்கிழமை**
**பி.ப 02.00 மணி**



ற எழில் சிற்ப நாயகியாம் அருள்மிகு ஸ்ரீமீனாட்சி அம்பாளுக்கு நிகழும் மங்கலகரமான
ள் (19.02.2016) புதிய நவகலச சிற்ப சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெற
ம்பிகை மெய்யடியார்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**னைச்சிற்பி, சிற்பகலாவிற்பன்னர், கலைச்சாகரம், விஸ்வப்பிரம்மஸ்ரீ**
**னபிள்ளை கலாமோகன்(குழுவினர்), கலாகேசரி சிற்பாலயம்(மட்டுவில்)**

**வில்**

வர்ணவேலை
ரவி ஆட்ஸ் குழுவினர்
'' ஓவியச்செல்வர் '' தே.தணிகாசலம்,
திருநெல்வேலி

இரும்பு வேலை
திரு.ச.சிவகுணேசன்(குழுவினர்)
அம்பாள் வெல்டிங் வேக்ஸ் சங்கத்தானை.

பித்தளை வேலைகள்
திரு.க.ரஞ்சித்குமார்
கமலி சிற்ப நிலையம்
மீனாட்சி அம்மன் வீதி, சங்கத்தானை.



### வாழ்த்துச் செய்தி

சாவகச்சேரி சங்கத்தானையில் அமைந்துள்ள ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நவகலச சிற்பத்தேர் வெள்ளோட்ட நிகழ்வுகள் இன்று நடைபெற திருவருள் கைகூடிய நிலையில் இந் நிகழ்வை ஒட்டி வெளியிடப்படும் சிறப்பிதழுக்கான வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் வடைகின்றேன். உச்சி முதல் சில்லுகள் வரை மரத்தினால் ன்னர்களால் மிக அழகாக அமைக்கப்பட்ட சித்திரத் தேரானது 9 ங்களைக் கொண்ட ஒரு சிறப்பான தோற்றத்தில் அமைக்கப்பட்டி து கண்டவர்கள் உள்ளங்களில் பக்திப் பெருக்கையும் ச்சியையும் தாண்டவமாட வைக்கும் என்பதில் ஐயம் இல்லை.

இந்த அழகிய ரதம் வடத்தில் இணைக்கப்பட்டு ஊர் கூடி வடம் து கோயிலைச் சுற்றி அமைந்துள்ள ரத வீதிகளில் மெல்ல மெல்ல சந்து பவனி வர வீதி எங்கும் மக்கள் வண்ணக் கோலமிட்டு நிறை வைத்து இறைவனை வணங்கத் தயாராக இருக்கின்ற இந்த மையான வேளையில் வெளியிடப்பட விசேட சிறப்பிதழுக்கு ழ்த்துரை ஒன்றை வழங்கி எல்லோரும் இன்புற்றிருக்க ாள் அருள் புரியும் ஆசிவேண்டி நிற்கின்றேன்.

நீதியரசர் க. வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர் வடமாகாணம்.



### வாழ்த்துச் செய்தி

எல்லாம் வல்ல கலை எழில்மிகு சிற்பநாயகியாக, நவநாயகியாக சங்கத்தானைப் பதியிலே வீற்றிருந்து அருள்ஆட்சி பொழிகின்ற மீனாட்சி அம்பிகைக்கு. எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற திராவிடமரபிலான நவகலசமெனும் நவமணித் தேரினை (நவ ஸ்தூபி) தில் முதன்முறையாக அமைப்பதை இட்டு பெருமகிழ்வு அடை றேன்.

ஆகம விதிமுறை மரபுவழி, சிற்ப சாஸ்திர முறைப்படி அமைகின்ற கவும் இது உள்ளது. நாம் எமது குருவிடமிருந்து கற்றுக்கொண்ட தையே எமது கற்பனா சக்திகளின் மூலமாகவும் சிறுசிறு மாறுதல் மூலமாகவும் பெரியகலைப் புரட்சியை ஏற்படுத்தலாம். இதன் மூலமாக கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதுடன் வளர்ச்சிப்பாதை ம் கொண்டு செல்லலாம்.

புகழ்பூத்த புதுமைக் கலை மேதை ''கலாகேசரி'' தம்பித்துரையின் ாவனுமாகிய நாம் முதன்முறையாக இக் கலை முயற்சியைச் செய் மூலமாக மகிழ்ச்சியுடன் கூடிய சமர்ப்பணத்தையும் செய்கின் . அத்துடன் இக்கலைப் படைப்பு உருவாகக் காரணமாக இருந்த த் திருப்பணிச் சபையினர், ஆலய நிர்வாகத்தினர், அம்பிகையின் பவர்கள், கலாகேசரி சிற்பாலயக் கலைஞர்கள்; வர்ணக்கலைஞர் இரும்பு இணைப்பு கலைஞர்கள் எல்லோருக்கும் மீனாட்சி அம் டைய அருள் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்திப்பதுடன் மன றவும் அடைகின்றேன்.

''சிந்தனைச்சிற்பி'' கலாமோகன் கலாகேசரி சிற்பாலயம் மட்டுவில்.

### தென்மராட்சிப் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

இலங்கைத் திருநாட்டின் முடி எனத் திகழும் யாழ்ப்பாணத்தின் தெற்கே வந்தாரை வரவேற்று வாழ்வளிக்கும் தென்மராட்சி பிரதேசத்தின் மத்தியிலே வனப்பு மிகு சங்கத்தானைப் பகுதியிலே பல வரலாற்றுப் புதுமைகளைத் தாங்கி அடியார்க்கு அருள் பாலிக்கும் ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தான நவ கலச புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்ட நிகழ்வின் மகத்துவம் தாங்கி வெளிவரும் இதழுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வெய்துகின்றேன்.

'' விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வமுளதோ''

என்ற குமரகுருபர சுவாமிகளின் பாடலுக்கமைய தென்மராட்சிப் பிரிவின் சங்கத்தானைப் பகுதியிலே வேண்டுவோர் வேண்டும் வரம் ஈய்ந்தருளும் '' மீனாட்சி அம்பாள் '' எனும் நாமம் கொண்டு கோயில் கொண்டெழுந்தருளி அடியார்களுக்கு அருள் மழை பொழிந்து கொண்டிருக்கும் அன்னை ஆதிபராசக்தியின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு நடைபெற இறையருள் கைகூடியுள்ளமை எமக்கெல்லாம் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். அத்தருணம் அடியார்கள் பெருமக்கள் கலந்து கொண்டு வெள்ளோட்ட நிகழ்வுடன் நடைபெறும் கிரியைகள், இசைகள் முதலானவற்றைக் கண்ணாரக் கண்டு இறையாசி பெற்று அருள் பெறுவோமாக !

எமது மீனாட்சி அம்பாள் ஆலய ரதோற்சவ வெள்ளோட்ட நிகழ்வு நல்லமுறையிலே சிறப்பாக பூரணத்துவம் பெற்றிட எல்லாம் வல்ல இறைவனது நல்லாசிகளோடு எனது வாழ்த்துக்களையும் இந்நேரத்திலே வழங்குவதில் அகங்குளிர்கின்றேன்.

'' வேண்டும் வரம் தருபவளே எங்கள் மீனாட்சி அம்மா - இன்னல் பல தாண்டி
வந்தோம் தாயே - எம் தொல்லை வினைகள் தீர்த்திடுவாய் அம்மா - யாபேர்க்கும்
நல்லருள் தருவாயே மீனாட்சி அம்பாளே ! ''

திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன்,
பிரதேச செயலர், தென்மராட்சி.

### சித்திர வனப்பு மிகு ரதத்தினை எண்ணி களிகூர்கிறேன்.

சாவகச்சேரி சங்கத்தானை ஈழவாரியம் பதியுறை ஸ்ரீ மீனாட்சி அம்பாளுக்கு புதிதாக நிர்மாணிக்கப் பெற்ற சித்திரத்தேர் குறித்து நான் பேருவகை கொள்கிறேன். இந்த மேன்மை மிகு அருட் செயலுக்கு அம்பாளின் திருவருள் பாலித்துள்ளமையை நினைத்து நோக்குகையில் தேவியின் மகத்துவத்தை எண்ணி என்மனம் உருகி நிற்கின்றது. பலரூபா செல்வச் செலவில் உருவெடுத்துள்ள இத்தேரின் உருவாக்கத்திற்கான நற்பணி புரிந்த தேர்த் திருப்பணி சபைக்கும், ஆலய பரிபாலன சபைக்கும், தேரின் பிறப்புக்கு ஆதாரமாய் அமைந்த கலைஞர் பெருமக்களுக்கும் தேருக்காய் திருப்பணி புரிந்த அம்பிகை அடியார்களுக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொள்கிறேன்.

நெடுங்காலமாய் திரு ஆறுமுகம் சிவனடியார் அவர்களும் இதர அடியார்களும் கண்ட கனவு இன்று நனவாகி உள்ளமையை எண்ணி நான் பூரிப்படைகிறேன். இனிவரும் காலங்களில் அம்பாள் இச்சித்திரத்தேரில் வலம் வரும் காட்சியைக் கண்டு அடியார்கள், தாயின் இஷ்ட சித்திகளை பெறும் நிமித்தம் வேண்டி அமைகின்றேன்.

திரு செல்லத்துரை துரைசிங்கம்
ஓய்வு நிலை ஆசிரியர்,
தலைவர் / போசகர் சபை
ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தானம் சங்கத்தானை, சாவகச்சேரி.
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

### பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துரை



மதுரைப் பதியில் வந்து அவதரித்துப் பாண்டிய வம் சத்தின் ஆணவம் முதலான அகந்தையையும் போக்கிய மீனாட்சித் தாய் சாவகச்சேரியில் சங்கத்தானை ஈழ வாரியம்பதியில் விஷ்வப்பிரம்ம குலமான விஷ்வகர் மாக்களின் சக்தியாய் அருள் சுரந்த நிலையில் வந்து அவதரித்த நாயகியே மீனாட்சித்தாயவள். ஈழத்தில் எங்கும் இல்லாத கலைநுட்பத்தில் நவசக்திக்கு நவகலசம் மதுரை நாயகியின் திருவிளையாடல்களையும் சிற்பங்க ளாய் தாங்கிய நிலையில் ''ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மையே.......'' என்ற பாடல் வரிகள் என்னையும் உருக்க வல்ல நிலையில் அமைகின்றது. இதனையே திருமூலர் '' உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் '' என்பதையும் ஒப்பிட்டுக் கூறுகின்றார். எனவே அன்பர்களே உங்கள் உடலில் இறைவியை எழுந்தருளச் செய்து உடலாகிய தேரை அசைக்கும் போது எத்தனையோ இடர் வரும். அதனையே சறுக்குக்கட்டை உணர்த்தி நிற்கின்றது. அதனையெல்லாம் விலக்கி சரியான பாதையில் செயற்படுவோமாயின் '' அவனருளாலே அவன் தாள் வணங்கி'' என்ற மணி வார்த்தைக்கு அமைய எமது வையகவாழ்வு மலரும் என்பதையே மீனாட்சித்தாயாரின் புதிய நவகலச சிற்பத் தேர் வெள்ளோட்டம் உணர்த்துகின்றது.

அந்த வகையில் சிறப்பாய் தேரோடினால் அடியாரிடம் உள்ள ஆணவம் மட்டும் ஓடிவிடாது. வறுமை, மன மாயை, பகை, துன்பம், துயரம் அனைத்தும் ஓடிவிடும் என்பார்கள். அந்நிலையில் அருட்கவி விநாசித்தம்பி புலவர் பாடிய பாடல் அடியேனுக்கு சித்தமாய் வருகிறது.

'' பிணியிலா வாழ்வு அருளம்மா
பிறவியறுத்து அருள் புரியம்மா
பணிபுரிய தொண்டருட் சேரம்மா
பயின்றிடு துணையெனக் காரம்மா''

என்பதற்கு அமைய கண்ணால் என்னைப் பாரம்மா என்று ஒவ்வொரு அடியவர்களும் காணும் பொருட்டும் அரும் பெரும் வாழ்வியல் திருப்பணியை ஆற்றிக் கொண்டிருக்கும் அத்தனை பேரும் அன்னையின் திருவருள் நிறை அவள் பாதத்தினை மனம் மொழிகளினால் வணங்கி வாழ்த்துகின்றேன்.


மொழிபருவி, வித்தியாரத்தினம்
லயன் ஐ.கோ.சந்திரசேகரன் J.P
தலைவர்/மீனாட்சி அம்மன் தேவஸ்தானம்,
சங்கத்தானை, சாவகச்சேரி,
பிரதிப் பிரதம ஒழுக்காற்று அதிகாரி (ஓய்வு நிலை)
யாழ்.பல்கலைக்கழகம்.


| | | | | |
|---|---|---|---|---|
| **ரூபி நகை மாளிகை**<br>கண்டி வீதி, கொடிகாமம்.<br>தொ.பே. 077 617 3046<br>077 241 8473 | **விமலா இரும்பகம்**<br>கண்டி வீதி, சாவகச்சேரி.<br>021 227 0904<br>077 039 5725, 077 556 2569 | **கீதா கலாலயா**<br>**டிசைனர்ஸ்**<br>கண்டி வீதி, சாவகச்சேரி.<br>தொ.பே. 071 318 4241 | **அபி**<br>**மல்ரி சென்ரர்**<br>சங்கத்தானை, சாவகச்சேரி.<br>தொ.பே. 077 844 7880 | **இந்திரன்**<br>**ஜூவெல்லறி**<br>இல.10, நவீனசந்தை,<br>சாவகச்சேரி.<br>தொ.பே. 021 227 0257<br>021 227 1191 |
| **ஸ்ரீ மீனாட்சி அம்மன்**<br>மரக்காலை.<br>கண்டுவில் வீதி, சாவகச்சேரி.<br>தொ.பே. 077 554 3001 | **Tharish**<br>**Enterprises**<br>மீசாலை வடக்கு, மீசாலை.<br>தொ.பே. 077 668 7320 | **தேவாஸ்**<br>**சலூன்**<br>கண்டி வீதி, சாவகச்சேரி. | **லிலக்ஷன்**<br>**தச்சுத் தொழிலகம்.**<br>மீனாட்சி அம்மன் கோயில் வீதி,<br>சங்கத்தானை, சாவகச்சேரி.<br>தொ.பே. 077 922 3157 | **Metro**<br>***Saloon***<br>சங்கத்தானை, சாவகச்சேரி.<br>தொ.பே. 076 641 8484 |
| **ஈஸ்வரன் சிற்ப ஸ்தாபனம்**<br>ஆசாரி வீதி, தாவடி,<br>கோண்டாவில் மேற்கு.<br>021 222 3626, 077 114 0234 | **Micro Auto works**<br>Clock Tower Rd,<br>Jaffna.<br>T.P. 077 610 2945<br>021 222 9111 | **Pranavan**<br>**Hardware**<br>Cross road<br>Neervely North, Neervely<br>T.P. 077 716 1929 | **தர்சன் மர அரிவு**<br>**அன் விற்பனை நிலையம்**<br>பொன்னுச்சுவாமி வீதி,<br>சங்கத்தானை, சாவகச்சேரி.<br>தொ.பே. 077 863 3441 | **கிருஸ்ணா**<br>**மரத் தொழிற்சாலை**<br>கைலாயபிள்ளை வீதி,<br>சாவகச்சேரி.<br>தொ.பே. 077 328 8229 |
| **ஸ்ரார் ஹோட்டல்**<br>கண்டி வீதி,<br>சங்கத்தானை, சாவகச்சேரி.<br>தொ.பே. 077 649 1027<br>077 940 0963 | **Pizza Cornor**<br>கண்டி வீதி, கொடிகாமம்.<br>தொ.பே.021 730 6171 | **சஞ்சனா**<br>**நகைத்தொழிலகம்**<br>[illegible] | **Sekaran Printer**<br>[illegible] வீதி, கொடிகாமம்.<br>தொ.பே. 077 940 5802 | **கனில்**<br>**நகைத்தொழிலகம்**<br>கண்டி வீதி, சாவகச்சேரி.<br>தொ.பே. 077 366 2902 |

(C/29146)(10.17.18.20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம் செய் மனமே!



ஜோ.ஜெஸ்ரின்

உனக்குள் ஒரு பாடல் உறங்கிக் கொண்டிருக்கின்றது. அதை நீ தான் பாடவேண்டும். ஓடுகின்ற நதி ஒரு நாளும் ஓய்வெடுப்பதில்லை அதுதனது கடமையைச் செய்கின்றது. அதேபோலவே நாடிநரம்புகளில் ஊற்றெடுக்கும் இசை, பரிசுத்தமான சுவாசம் இவை எல்லாம் உன்னைப் பாடச் சொல்கின்றன. உனது ஆத்மாவின் பாடல் ஓய்வெடுக்கும்போது இந்தப் பூமி பிரளயப்பட்டுக் கிடக்கின்றது. நீ உனது பாடலைப் பாடி முடித்தால் உன்னால் நடனமாட முடியும். நீ அமைதியாக ஒரு தனிமையான இடத்திலிருக்கும் போது உனது பாடலும் உனது நடனமும் வெளிப்படுகின்றன.

தொலைபேசியில் மற்றவரோடு உரையாடும்போது 'கவரேச்' வரவில்லை என்று தனிமையான இடம் தேடுவது போல, உன்னுடன் நீ உரையாடவேண்டுமாக இருந்தால் அலைபேசி தேவையில்லை. தனிமையான இடத்திற்கு வா. அப்போது உனக்குள் ஓர் உன்னதமான தேடலைக் காட்டும் பிரார்த்தனை ஆரம்பமாகட்டும்!

பரிசுத்தமான தூய காற்றை நீ சுவாசித்து உனக்குள் இருக்கும் பாடலை வெளியேற்று. உனக்குள் இருக்கும் நடனத்தை வெளியேற்று, நீ அமைதியாக அமர்ந்திருக்கும்போது உன்னால் பாடமுடியும், நடனமாடமுடியும். இதனை முயற்சி செய்து பார்க்க ஆவல் இருந்தால், அதற்கு நீ தயாராகு. இப்போதே தியானத்தைத் தொடங்கலாம்.

வாழ்வெல்லாம் தியானம் கொட்டிக் கிடக்கிறது, நித்திரைக்குச் செல்கின்றாய், உறங்கிப் போகின்றாய், இயல்பாக விழித்துக்கொள்கின்றாய், காலைக்கடன் முடிக்கிறாய், நீராடுகின்றாய், உணவருந்துகின்றாய், அலுவல்களைக் கவனிக்கப் புறப்பட்டு விடுகின்றாய். இத்தகைய அன்றாடச் செயற்பாடுகளிலும் உன்னை அறியாமல் நீ தியானம் செய்கின்றாய். காரணம் உன்னால் சுவாசிக்க முடிவதால், உன்னை அறியாத போது தியானம் உன்கூட இருக்கின்றது என்று பார்த்தோம். இனி உன்னை அறிந்து நடப்பதைக் கவனித்து விழிப்படைந்து எப்படித் தியானத்தைத் தொடங்கலாம்....

நித்திரை ஒரு தியானம். கனவு காண்பது கூட ஒரு தியானம். நீ எதைச் செய்ய விரும்புகிறாயோ, எதை வழக்கப்படுத்திக் கொள்ளப் போகிறாயோ அதை ஆர்வத்துடன் செய்யப்பழகு. அதுவே அர்த்தம் தரும் தியானம் ஆகும்.

ஒரு மனிதனின் வாழ்வே தியானம். உன்னால் சிரித்துவாழ முடிந்தால் நீ சுவாசத்தைச் சுதந்திரமாக சுவாசிக்கக் கற்றுக்கொள்கிறாய். சிரித்து மகிழ முடியாமல் எதற்கெடுத்தாலும் சிலர் பயம் கொள்வார்கள். சின்னத்தனமான விடயங்கள் தான் பயத்தை வளர்க்கின்றன. பெரிய பெரிய விடயங்களுக்கு மனம் பயந்து போவதில்லை. சிரித்து வாழப் பழகி விட்டால் பயம் விலகிவிடும்.

எப்படி நாம் சிரிக்கமுடியும்? சிந்திப்போம்.

சிரிப்பின் முக்கியத்துவத்தை நீ கண்டுபிடிக்க வேண்டும். தியானம் செய்பவர்கள் முழுமையாகப் புன்னகைக்கின்றார்கள். அவர்கள் புன்னகைக்கக் கற்றுக் கொண்டு அதி உன்னதமான சந்தோசத்தை உற்பத்தி செய்கின்றார்கள்.

அழுகை என்பதை அது துன்பமானது என்று நாம் நினைக்கின்றோம். ஆனால், அழுகையில் இருக்கும் ஆறுதல் சிரிப்பில் கிடைப்பது கடினமானது. சுகமான ஒரு ஆறுதலைக் கண்ணீர் விடுவதன் மூலம் கைப்பற்றிக் கொள்ள முடியும்.

அழுகை ஒரு வியாதியாக இருக்கும் போது சிரிப்பு மருந்தாகின்றது, சிரிப்பு சில நேரம் வியாதியாகின்றபோது அழுகை கூட ஓர் ஆயுதமாக மாறி விடுகின்றது. சிரிக்கவும் அழவும் தெரிந்தால் போதும், அதை இயல்பாக சிரிக்கவும் இயற்கையாக அழவும் முடிந்தால், உன்னதமான உணர்வுகளை வெளிப்படுத்த முடிந்தால் அதுவும் தியானம் தான்.

நல்ல ஒரு நகைச்சுவையைச் சொன்னாலும் சிரிக்கவே முடியாதவர்கள் இருக்கின்றார்கள், துன்பம் வானளவாய் உயர்ந்து சோகமாய் வடிவெடுக்கின்றபோது, அழவே முடியாதவர்களும் இருக்கிறார்கள்.

தனது தந்தையின் மரணத்தில் எல்லோரும் அழுகின்றார்கள். மகனால் அழமுடியவில்லை அவன் அழாமல் இருப்பதற்கான காரணம், தந்தையின் மரணத்தை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பிணம் சுடுகாடு போகும்போதுகூட அவனால் அழமுடியவில்லை. அவன் மனநோயாளியாக மாறிப் போவான்! மரணவீடுகளில் போய்ப் பாருங்கள். எல்லோரும் பெரும்பாலும் தமது கவலைகளை எல்லாம் கொட்டித் தீர்த்துவிடுவார்கள். அதுதான் ஆறுதலாகின்றது, ஆற்றுப்படுத்தலாகின்றது. நீ வாழ்க்கையில் சரிசமமான பங்கை வகிக்க விரும்புகின்றாயா? ஆம் என்றால், சிரிப்பு வந்தால் சிரித்துவிடு. அழுகை வந்தால் அழுதுவிடு. உனது உணர்வுகளை அடக்கிப் போடாதே, அவற்றை வெளிப்படுத்த உனக்கு வடிகால் தேவைப்படுகின்றது. இறை சக்திகளை நாம் தியானத்தின் மூலம் நிறைவாகப் பெற்றுவிடமுடியும். நீ எந்த மதத்தினனாக இருந்தாலும் பரவாயில்லை, எந்த மதப் பிரிவினைவாதியாக இருந்தாலும் கடவுள் இல்லை என்று நீ வாதித்தாலும் கவலையில்லை. நீ தியானம் செய்கின்ற போது தியானத்தின்மூலம் இறைசக்திகளை நிறைவாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

வாழ்க்கையில் திருப்பங்கள் திடீரென வந்து விடுகின்றன. முடிவுகள் என்பது இடியப்பச் சிக்கலாகவே இருந்து விடுகின்றன. ஆகவே திடீரென வரும் பரீட்சையில் சித்தியடைவதற்கு கவனமின்மையைக் கைவிட்டு விட்டு கவனமாக இருக்கவேண்டும் மனிதனுடைய புத்தி என்பது ஒரு வெற்றி இரத்தினமாகும். அதை மாசுபடவிடாமல் மாயையைத் தொலைவிலே விரட்டிவிட்டால் கடவுளின் ஆசீர்வாதங்கள் நிறைவாய்க் கிடைக்கும். ஒவ்வொரு வினாடியிலும் கடவுள் அல்லது பரம்பொருளின் ஆசீர்வாதங்கள் எப்போதும் நிரம்பிவழியும் போது மாயை தொலைவில் போய்விடும். ஒரு மிருகம் எவ்வளவு பயங்கரமானதாக இருந்தாலும், எமக்கு முன்னால் ஒளியை வைத்திருக்கும் போது, அது அருகில் வராது. அதேபோல ஞான ஒளியை எமக்குள் வரவழைத்தால் துன்பம் வராது. மோட்டார் வாகனத்துக்கு எரிபொருள் தேவை... உடலுக்கு உணவு தேவை.... அதே போல ஞானமனிதனாவதற்கு நினைவு என்னும் ஞானத்திரையால் ஆன்மாவுக்கு சக்தி ஊட்டப்பட வேண்டும். தியானத்தின் மூலம் ஆன்மாவில் படிந்திருக்கும் அழுக்குகளை அகற்றி விடுங்கள். அப்போது தவறுகளிலிருந்து நீங்கள் தப்பிப் பிழைப்பீர்கள். சட்டத்துக்கு முரணான செயல்களைச் செய்யமாட்டீர்கள். சமூகத்துக்கு விரோதமான காரியங்களில் ஈடுபடமாட்டீர்கள். மாயை எனும் புயலில் உங்களைப் பாதுகாத்துக் கொள்ள உங்கள் புலன்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். நல்ல கடிகாரத்தைப்போல மிகச் சரியான முயற்சிகளை இடைவிடாது செய்து வந்தால், காலத்தை வெல்லும் காரியவாதிகளாகுவோம். இந்தப் பிரபஞ்சத்தில் ஒவ்வொரு விநாடியும் இறைவனின் ஆசீர்வாதம், அருள், அன்பு, கருணை யாவும் நிறைந்து கிடக்கின்றன.

தியானத்தின் மூலம் நாம் பலமடைகின்றோம். நலமடைகின்றோம். தியானம் என்பது இறையை நினைந்துருகுவது. மனதை ஒருநிலைப்படுத்தி அமைதியில் திளைப்பது. ஆகவே உனக்குரித்தான தியான வேளையில் வேறெதையும் தியானிக்காதே. இறைவனின் சந்தோசத்தை, முகமலர்வை அனுபவித்துப்பார். எனது என்று கூறுவதை விட்டுவிடுங்கள். தியானத்தின் மூலம் எல்லாம் உனதாகும். உனக்கு எது தேவையோ, அது தியானத்தின் மூலம் உன்னைத் தேடிவரும். சந்தோசத்திலிருப்பதும், இறைவனைப் புகழ்ந்து பாடுவதும் குழப்பங்களிலிருந்து எமக்கு விடுதலை தருகின்றன.

கடவுள் இல்லை என்று வாதிடுபவன் மனதிலும் கடவுள் இருக்கின்றார். நம்பிக்கைதான் கடவுள். தன்னம்பிக்கை என்பதும், கடவுள் நம்பிக்கை என்பதும் எமக்குள் இருக்கும் சக்தியைக் கண்டு கொள்வதாகும். எவனொருவன் தனக்குள் தன்னைக் கண்டுபிடிக்கின்றானோ, அவனால் இறைசக்தியை உணர முடியும். அவற்றை நிறைவாய்ப் பெற்றுக் கொள்ள முடியும்.

அன்பால்தான் இந்த உலகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. உன்னை அன்பு செய்வது தியானத்தின் முதல் நிலை. உன்னைப்போல் மற்றவரையும் நேசிப்பது தியானத்தின் இரண்டாம் நிலை.

எதிரிகள், துரோகிகள், சமூக விரோதிகள் போன்றவர்களுக்கும் நீ ஆசீர்வாதம் வழங்குவது தியானத்தின் மூன்றாம் நிலை. பயம் அற்ற தேசத்தை உருவாக்க பயபக்தி எனும் தியானத்தை பிரதானமாக்குவோம்.

எப்படி உன்னை நீ அன்பு செய்ய முடியும் என்று இப்போதே திட்டமிட்டுக்கொள். உனக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது என்பதைத் தெரிந்துகொள். உன்னை அளவுக்கதிகமாக அன்பு செய்து பார். அங்கே பிறக்கும் சந்தோசம். இந்தச் சந்தோசத்தை மையமாக வைத்து உன்னைப்போல் அடுத்தவனையும் நேசிக்கப் பழகு. அவனுக்குப் பிடித்தது எது? பிடிக்காதது எது? என்று ஆராய்ந்து பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

# வட மாகாண சபை

வட மாகாண சபைக்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் மாவட்டங்களுக்கு 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு உள்ளூர் வழங்குநர்களாக பதிவு செய்ய விரும்பும் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள 2016 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல் பதிவிற்காக விண்ணப்பங்கள் ஏற்கனவே சமர்ப்பிக்காத தரம் வாய்ந்த வழங்குநர்களிடமிருந்தும் உற்பத்தியாளர்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

### தொகுதி இல: "G"

| உப தொகுதி இல. | பொருள்கள் – விவரம் |
|---|---|
| G-17 | ஆயுர்வேத மருந்துச் சரக்குகளும் பலசரக்குப் பொருள்களும் |
| G-18 | வைத்தியசாலைகளுக்கு உணவு வழங்கல் (உலர் உணவு மட்டும்) |
| G-19 | சமைத்த உணவும் குளிர்பானமும் |
| G-21 | விவசாய பொருள்கள், உர வகைகள் மற்றும் விவசாய இரசாயனப்பொருள்கள் |
| G-22 | விவசாய விதைகள், நடுகைப் பொருள்கள் |
| G-23 | கால்நடைகளின் உணவுகள் மற்றும் ஏனைய பொருள்கள் |
| G-24 | கால்நடைகளுக்கான மருந்துகள் |
| G-25 | மீன்பிடி தொடர்பான பொருள்கள் |
| G-26 | கைத்தொழில் மூலப்பொருள்கள் |

### தொகுதி இல: "S"

| உப தொகுதி இல. | சேவைகள் – விவரம் |
|---|---|
| S-5 | குளிரூட்டிகள், மின் உபகரணங்கள் மற்றும் மின்வயர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-6 | பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் |
| S-7 | சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல், கட்டட தளங்கள், கதவுகள், ஜன்னல்கள், திரைச்சீலைகள் சுத்திகரிப்புச் செய்தல் |
| S-10 | விவசாய உபகரணங்கள் தயாரித்தல் / வடிவமைத்தல் மற்றும் விவசாய இயந்திரங்கள் உபகரணங்கள் திருத்தம் |

### நிபந்தனைகள்

1. வழங்குநர்களாக பதிவு செய்தல் 2016 ஆம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியானதாகும்.
2. உள்ளூர் பெறுகைகள் பதிவு செய்த வழங்குநர்கள் பட்டியலிலிருந்தும், தேசிய ரீதியிலான பெறுகைகளின் போது இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் வானவில் பக்கங்களில் (Rainbow Pages) பெயர் குறிப்பிடப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும் பொதுவாக விலை மனுக்கள் கோரப்படும். எனினும் பொருள் கொள்பவருக்கு வேறு மூலங்களிலிருந்தும் விலை மனுகோருவதற்கான உரிமையும் உண்டு.
3. விண்ணப்பங்களை பதிவு செய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விவரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. பதிவுக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை பிரதம செயலாளர் கொண்டுள்ளார்.
5. மனுக்கள் கோரும்போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருள்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.
6. வியாபார பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பொருள்கள், சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
7. குறிப்பிடப்படும் பொருள்கள் சேவைகளுக்கு வழங்குநர்களாக பதிவு செய்பவர்களால் சமர்ப்பிக்கப்படும் விவரங்கள் ஆவணங்களின் உண்மைத்தன்மையானது பிரதம செயலாளரால் நியமிக்கப்படும் குழுவினரால் நேரடியாக சென்று பார்வையிடுவதன் மூலமோ நேர்காணலின் மூலமோ பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும். வழங்குநர் குறிப்பிட்ட பொருள்கள் சேவைகளுக்கு வழங்குநர்களாக பதிவு செய்வதற்கு தாங்கள் தகுதியற்றவர் என காணப்படுமிடத்து தங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
8. பொருள்கள் சேவைகள் விநியோகிப்பதற்கு விருப்பு தெரிவிக்கும் மாவட்டம் / மாவட்டங்கள் வழங்குநர்களால் குறிப்பிடப்படல் வேண்டும்.
9. வழங்குநர்களுக்கு பெறுகைகளுக்கான காசு முற்பணம் வழங்கப்படமாட்டாது.
10. பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் தரப்பட்ட மாதிரியில் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியுடனும் வரிப்பதிவுச் சான்றிதழின் பிரதியுடனும் மீளளிக்கப்படாத வைப்புப் பணத்துடனும் 2016 மார்ச் மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக "பிரதிப் பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் - நிதி அலுவலகம், வடமாகாண சபை, 61/1, நல்லூர் குறுக்குத் தெரு, நல்லூர்" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலக வேலை நாள்களில் (மு.ப 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை) நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2016 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்" என குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
11. முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பதிவு செய்யப்படவேண்டிய ஒவ்வொரு உப பொருள் தொகுதிக்கும், சேவைக்கும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா.150/- க்கான காசுக்கட்டளை "பிரதிப் பிரதம செயலாளர்- நிதி, வட மாகாண சபை" என்ற பெயரில் யாழ்ப்பாணம் தபாற் கந்தோரில் மாற்றக்கூடியவாறு பெறப்பட்டு இணைத்து அனுப்புதல் வேண்டும். அல்லது இல.61/1,நல்லூர் குறுக்கு தெரு, நல்லூர் எனும் முகவரியில் இயங்குகின்ற பிரதிப் பிரதம செயலாளர் - நிதி அலுவலகத்தில் அலுவலக வேலை நாள்களில் (மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை) நேரடியாகப் பணத்தினைச் செலுத்திப் பெறுகின்ற பற்றுச் சீட்டினை இணைத்து அனுப்புதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட உப பொருள்கள் அல்லது உப சேவைகளின் தொகுதிக்கு பதிவு கோருவதாயின், ஒவ்வொரு உப பொருள் தொகுதிக்கும் அல்லது சேவைகளுக்கும் தனித்தனி விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத வைப்பு பணம் ரூபா 150/- உம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
12. 2016 மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
13. மேலதிக விளக்கங்களுக்கு "பிரதிப் பிரதம செயலாளர் - நிதி , வட மாகாணம்" அவர்களுடன் தொலைபேசி இல 021 222 0854 மூலம் தொடர்பு கொள்ளமுடியும்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

### 2016 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

### வட மாகாண சபை

1. வியாபார நிறுவனத்தின் பெயர் :-
2. வியாபார நிறுவனத்தின் முகவரி :-
3. தொலைபேசி இலக்கம் :-
4. தொலைநகரி (Fax) இலக்கம் :-
5. வியாபார பதிவு இலக்கம் :-
6. வியாபாரத்தின் தன்மை :-
7. பதிவு செய்யப்படவேண்டிய பொருள்கள் / சேவைகளின் தொகுதி :-

| தொகுதி இல | பொருள்கள் / சேவைகள் விவரம் |
|---|---|
| | |

8. கணக்கினை பேணும் வங்கிகளின் பெயர்கள் :-
9. கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி :-

10 வற் (VAT) வரி பதிவு இலக்கம் (இருப்பின்) :-

11. மின்னஞ்சல் முகவரி :-

12 வழங்கல் செய்யக்கூடிய மாவட்டங்களின் பெயர்கள் :-
(விண்ணப்பதாரி வழங்கல் செய்யக்கூடிய மாவட்டம்/ மாவட்டங்களினை " ✔ " அடையாளத்தினை இடுவதன் மூலம் தெரிவு செய்தல் வேண்டும்)

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | |
| வவுனியா | |
| மன்னார் | |
| கிளிநொச்சி | |
| முல்லைத்தீவு | |

என்னால் / எங்களால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை எனவும் வட மாகாண சபை பிரதம செயலாளரினால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருள்கள் / சேவைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கிறோம். பதிவுக் கட்டணம் ரூபா. 150/- இற்கு ...............ஆம் திகதிய ....................இலக்க காசுக்கட்டளை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

.................................... .................................... ....................................


விண்ணப்பதாரியின் ஒப்பம் பெயர் திகதி

அ.பத்திநாதன்,
பிரதம செயலாளர்,
வட மாகாண சபை,
63, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வர்ணம் தீட்டுவோம்... வாங்க....





## கிழமையைக் கண்டறிய ஒரு கணக்கு!

பிறந்த நாள் அல்லது முக்கியமான ஏதாவதொரு நாளைக் குறிப்பிட்டுச் சொன்னால், நீங்கள் அந்த நாளுக்கான கிழமையைக் கணக்கிட்டுக் கூற முடியும். எப்படி என்கிறீர்களா?



ஜனவரி - 0
பெப்ரவரி - 3
மார்ச் - 3
ஏப்ரல் - 6
மே - 1
ஜூன் - 4
ஜூலை - 6
ஒகஸ்ட் - 2
செப்ரெம்பர் - 5
ஒக்ரோபர் - 0
நவம்பர் - 3
டிசம்பர் - 5

இதை மட்டும் குறித்து வைத்துக் கொள்ளுங்கள் அல்லது உங்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.
நீங்கள் எவரிடமாவது அவர்களுடைய பிறந்த நாள் அல்லது குறிப்பிடத்தக்க ஒரு நாளைக் கேளுங்கள்
அவர் பதில் - மார்ச் 21, 1999
மேலுள்ள மாதங்களுக்கான வரிசையில் அதற்கான எண் - 3
அடுத்துத் திகதியை எடுக்கவும் - 21
வருடத்தின் கடைசி இரண்டு இலக்கத்தை மட்டும் எடுக்கவும் - 99
வருடக் கடைசி இலக்கத்தை 4 ஆல் வகுக்கவும் - 99/4 = 24 மீதி 3
அடுத்து அனைத்து எண்களையும் சேர்க்கவும் - 3 + 21 + 99 + 24 = 147
தற்போது கூட்டி வந்த எண்ணை 7 ஆல் வகுக்கவும் - 147/7 = 21 வகுத்த பின்பு மீதி 0
மீதியாக வரும் எண்
0 - ஞாயிற்றுக்கிழமை
1 - திங்கட்கிழமை
2 - செவ்வாய்க்கிழமை
3 - புதன்கிழமை
4 - வியாழக்கிழமை
5 - வெள்ளிக்கிழமை
6 - சனிக்கிழமை.
இங்கு நாம் கணக்கிட்ட நாளுக்கான கிழமை 0 என்பதால் ஞாயிற்றுக் கிழமை.

# சமயோசித புத்தியால் வெற்றி கிடைத்தது



ஒரு தடவை காட்டில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு பல இடங்களில்சொட்டுத்தண்ணீர் கூட இல்லாது போய்விட்டது. யானைகள் நீர்நிலைகளைத் தேடிப் படை எடுத்தன. வழியில் ஓர் அழகிய குட்டையில் சிறிதளவு நீர் இருந்தது. யானைகள் மகிழ்ச்சியோடு அங்கே சென்றன. போகும் வழியில் புதர்கள் மத்தியில் இருந்த முயல்களை யானைகள் மிதித்து சாவடித்துக் கொண்டு சென்றன. யானைகள் குட்டையைவிட்டு அகன்றதும் எஞ்சியிருந்த முயல்கள் தம்மிடையே கூடிப் பேசின.

"இந்த யானைகள் மறுபடியும் குட்டைக்கு வந்தால் எம்மை மறுபடியும் துன்புறுத்தும். ஆகவே அந்த யானைகள் வராமலிருக்க ஏதாவது தந்திரம் செய்யவேண்டும்" என்று முயல்கள் முடிவு செய்தன.

ஒரு புத்திசாலி முயலிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அப்பொழுது இரவு வேளை. பௌர்ணமி நிலவு காட்டைப் பளிச்சிடச் செய்தது. அந்தப் புத்திசாலி முயல் ஒரு தந்திரத்தைக் கண்டுபிடித்து அதனைச் செயற்படுத்த முயன்றது. யானைக் கூட்டதுக்குத் தலைவனான யானையிடம் அந்த முயல் சென்று அதன் காலில் விழுந்தது."நீ யார்? நீ இங்கே எதற்கு வந்து இருக்கிறாய்?" என்று யானைகளின் தலைவன் கேட்டது.

"நான் நிலவில் வசிக்கும் முயல். அந்தக் குட்டையில்தான் நிலவுத் தெய்வம் வசிக்கிறது. நீங்கள் அங்கே போய்க் குட்டையைக் கலக்கி இருக்கிறீர்கள். நிலவுத் தெய்வம் என் மூலம் உங்களுக்கு ஒரு செய்தி அனுப்பி இருக்கிறது. இனி நீங்கள் அந்தக் குட்டைக்கு வந்து தொந்தரவு செய்யக் கூடாதாம் என்று கற்பனையாக ஒரு செய்தியைக் கூறியது அந்தப் புத்திசாலி முயல்.

அந்த யானைத் தலைவனுக்கு முயலின் வார்த்தையில் நம்பிக்கை இல்லை. "நான் அந்த நிலவுத் தெய்வத்தைச் சந்திக்கவேண்டும் என்னை அழைத்துப் போ" என்றது.

யானை குட்டையை அடைந்தபோது பௌர்ணமி நிலவின் பிரதிபலிப்பு அந்த அசையாத நீரில் பிரதிபலித்தது. ஆகவே நிலவுத் தெய்வம் குட்டையில் ஓய்வு எடுப்பதாகவே அந்த யானை முடிவு செய்து விட்டது. குட்டையில் உள்ள நிலவுத் தெய்வத்துக்கு [illegible] விடைபெற்றுச் சென்றது. அதன்பிறகு அந்தக் குட்டைக்கு [illegible] இல்லை. புத்திசாலி முயலின் தந்திரத்தினால் பல முயல்கள் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டன.



## வரலாற்றில் இன்றைய தினம்

1600 - தென் அமெரிக்க வரலாற்றிலேயே அந்த நாட்டின் மிகப் பெரியதானஹெளனா புரினா ஸ்ராற்றோ எரிமலை வெடித்தது.
1726 - சோவியத் சுப்பிரீம் பிரிவி கவுன்சில் ஸ்தாபிக்கப்பட்டது.
1878 - போனோ சிறாபிற்கான காப்புரிமத்தை தோமஸ் அல்வா எடிசன் பெற்றுக்கொண்டார்.
1942 - இரண்டாம் உலக மகாயுத்தம். வட ஆஸ்திரேலியா டார்வின் நகரை ஜப்பானியரின் 250 வரையான போர் விமானங்கள் தாக்கியதில் 250பேர் வரை சாவு.
1948 - சுதந்திரத்துக்காகப் போராடும் தென் கிழக்காசிய இளைஞர்கள் கல்கத்தாவில் ஒன்று கூடினர்.
1953 - முதலாவது இலக்கிய தணிக்கைச் சபை அமெரிக்க ஜோர்ஜியாவில் அங்கீகரிக்கப்பட்டது.
1959 - சைப்பிரஸுக்கு ஐக்கிய இராஜ்ஜியம் சுதந்திரத்தை வழங்கியது.
1985 - செய்கை இருதயம் பொருத்தப்பட்ட முதலாவது நபராக, வில்லியம் ஜே.ஸ்றொடெர் என்பவர் மருத்துவமனையிலிருந்து வெளியேறினார்.
1986 - சிறிலங்கா இராணுவம் கிழக்கு மாகாணம் அக்கரைப்பற்றில் 80 வரையான தமிழ் விவசாயிகளைப் படுகொலை செய்தது.
2014- முருகன், சாந்தன், பேரறிவாளன் உட்பட ஏழு பேருக்கு விடுதலையென அதிரடி அறிவிப்பு விடுத்தார் ஜெயலலிதா.
1993 - எயிட்ஸ் நோய்க்குப் புதிய மருந்து அமெரிக்க விஞ்ஞானிகளின் முயற்சி வெற்றி.

## மயிலார் நடனம்

கண் நிறைந்த தோகை விரித்து
நடனம் ஆடுகிறார் மயிலார்
நடனம் ஆடுகிறார்
காலைத் தூக்கித் தாளத் தோடு
நடன மாடுகிறார் மயிலார்
நடன மாடுகிறார்
தெய் தெய் தெய் தித் தித்தித் தெய்

ஆட்டம் ஆடுகிறார் மயிலார்....
ஆட்டம் ஆடுகிறார்
திரண்ட மேகம் இருண்டு வர
ஆட்டம் ஆடுகிறார் மயிலார்
ஆட்டம் ஆடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையும் கிடப்பிலா?

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு கலைக்கப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை பரிந்துரை செய்ததால், ஆணைக்குழு கலைக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு கடந்த செப்ரெம்பரில் இருந்து காணப்பட்டது. ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பூரணமாகாததால் அதன் பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கும்படி ஆணைக்குழுவின் தலைவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

கடந்த 15ஆம் திகதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் முடிவுக்கு வந்தது. ஜனாதிபதி என்ன செய்யப்போகிறார் என்பதைப் பலரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். தற்பொழுது ஜனாதிபதி மே மாதம் வரை மூன்று மாத கால நீடிப்பு வழங்கியுள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் பரிந்துரை செய்யப்பட்ட உள்நாட்டு விசார ணைப் பொறிமுறைக்கான ஏற்பாடுகள் குறித்து அரசு நடவடிக்கை எடுக்கவேண்டிய கடப்பாட்டில் இருப்பதால், ஆணைக்குழுவின் பதவிக்காலம் மே மாதத்தின் பின்னர் நீடிக்கப்படுவது சாத்தியம் அல்ல. விசாரணைகளை இறுதிப்படுத்தவே இந்த மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் 2013 ஒகஸ்ட் 15இல் வெறும் கண்துடைப்புக்காக அமைக்கப்பட்டது மூவர் அடங்கிய இந்த ஆணைக்குழு ஐ.நாவால் பரிந்துரை செய்யப்பட்ட உள்ளக விசாரணைப் பொறிமுறை செயற்படுத்தப்படும்போது, காணாமற்போனோர் குறித்தும், போரின் இறுதிப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் புதிதாக விசாரணைகள் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் இந்த ஆணைக்குழுவின் அறிக்கை செயற்படுத்தப்படுவதற்கான சாத்தியம்அரிதாகவே உள்ளது.

1983-2009 காலப்பகுதியில் காணாமற்போனோர் குறித்து விசாரணை நடத்தி ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஆணைக்குழு பணிக்கப்பட்டிருந்தது. விசாரணைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயம், போர்க்குற்ற விசாரணை குறித்த சர்வதேச அழுத்தத்தை குறைக்கும் நோக்கத்துடன் உள்ளக போர்க்குற்ற விசாரணையை முன்னெடுக்கும் வகையில் அதன் விடயப்பரப்பை மகிந்த விஸ்தரித்ததுடன், அனைத்துலக சட்டதிட்டம் தொடர்பில் பரணகம குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக டெஸ்மன் டி சில்வா தலைமையில் அறுவர் அடங்கிய ஆலோசனைக்குழு ஒன்றையும் அமைத்திருந்தார். ஆணைக்குழுவுக்கு சர்வதேச பூச்சுப் பூசுவதே மகிந்தவின் நோக்கம்.

போர்க்குற்றங்கள் தொடர்பிலான தனது இறுதி அறிக்கையைக் கடந்த ஒகஸ்ட் மாதம் ஜனாதிபதியிடம் இந்த ஆணைக்குழு கையளித்தது. எதிர்பார்த்ததைவிட ஏராளமானோர் முறைப்பாடு செய்ததால் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் பூர்த்தி அடையாத நிலையில் மே மாதம் வரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இதன் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவுக்கு 20,106 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. இவற்றில் 5,200 பேரின் முறைப்பாடுகள் படையினரின் உறவினர்களால் செய்யப்பட்டவை.




வடக்கிலும், கிழக்கிலும் நடைபெற்ற அமர்வுகளில் ஆணைக்குழு 1,440 முறைப்பாட்டாளர்களின் வாக்கு மூலங்களைப் பதிவுசெய்திருந்தது. இந்த வாக்கு மூலங்கள் குறித்து மேலதிக விசாரணை நடத்துவதற்காக சுதந்திரமான விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு, முறைப்பாடு குறித்து ஆய்வு செய்யப்பட்டு, சட்டமா அதிபரின் மேலதிக நடவடிக்கைக்காக ஆணைக்குழுவால் அனுப்பும் ஏற்பாடும் இருந்தது. எனினும், ஆணைக்குழு பெற்ற சாட்சியங்களை அடிப்படையாக வைத்து விசாரணை நடத்தவும் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் சட்டமா அதிபருக்கு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. அதேசமயம், பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் -என்றும் ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் பரிந்துரை செய்திருந்தது. ஆனால், அரசு இவை குறித்து அக்கறை எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஆணைக் குழு இதுவரை நடத்திய விசாரணைகளில் காணாமற்போனோர் எவரையும் கண்டுபிடித்ததாகவும் தகவல் இல்லை.

முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் போன்று இந்த ஆணைக்குழுவின் அறிக்கையையும் கிடப்பில் போடப்படாமல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இதன் செயற்பாடுகள் உதவும் சாத்தியங்கள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# தன்னம்பிக்கையே சீரான வாழ்வை வடிவமைக்கிறது



சி.நற்குணலிங்கம், நெல்லியடி.

தன்னம்பிக்கை என்பது தன்னை நம்புதலாகும். இயற்கையிலேயே நாம் எம்மீது நம்பிக்கை கொண்டவர்களாகவே இருக்கின்றோம். ஆனால் அது போதமான அளவு இருப்பதில்லை. அதனை வளர்த்துக் கொள்வதே எமது வளர்ச்சிக்கான சரியான வழியாகும். தன்னம்பிக்கை என்னும் மனிதசக்தி எம்மிடம் நிறைந்திருந்தால்தான், அது முன்னேற்றப் பாதையை நோக்கி எம்மை உந்திச் செல்லும். தன்னம்பிக்கை ஒரு மனிதனின் வாழ்வின் உயிர்த்துடிப்பாக உள்ளது.

தன்னம்பிக்கை என்பது மனம் சார்ந்த விடயமாகும். எம்மைப் பற்றி நாம் எண்ணும் எண்ணத்தைப் பொறுத்தே எமது மகிழ்வும், வேதனையும், சாதனையும் உருவாகின்றன. மனதின் வல்லமையைத் தட்டி எழுப்ப நம்பிக்கை தருகின்ற வார்த்தைகளை, விடயங்களை மனதுக்கு கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். தன் மீது நம்பிக்கையில்லாது, மனம் போன போக்கில் வாழ நினைத்தால், அவன் தன்னை ஒரு கட்டத்தில் வெறுக்கத் தொடங்குவான். அப்போது அவன் வாழ்வில் கீழ்நிலைக்குச் செல்வதற்கான கதவு திறந்து விட்டதென்பது பொருள். மனிதனை அழிக்கக்கூடிய ஒரே விடயம் அழிவில் நம்பிக்கை வைப்பது என மார்ட்டீன்புபெர் என்பவர் கூறியுள்ளார்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் பல பிரச்சினைகள், போராட்டங்களுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கையில் உணர்வுகளால் கட்டுண்டு, உணர்ச்சிகளுக்கு அடிமையாகி வாழ்வதால் வாழ்க்கையை வாழமுடியாமல் சிக்கித் தவிக்கிறார்கள்.வாழும் வாழ்க்கையை திருப்தியான மனநிலையில் வாழ, மனதில் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். தன்னம்பிக்கை இருந்தால் தைரியம் தன்னால் வரும். வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கையே அனைத்தையும் வெற்றிகரமாக மாற்றித்தரும். தன்னம்பிக்கையை மூலதனமாக வைத்து உழையுங்கள். வாழ்வில் வளம் பெறலாம். நம்பிக்கை எப்போது வருகிறதோ அப்போது உங்கள் செயல் சிறப்பாக நடந்தேறும். உங்களது வெற்றிக்கும், தோல்விக்கும் நீங்களே பொறுப்பு. நாளை பற்றிய நம்பிக்கைதான் நேற்றைய காயங்களுக்கு மருந்து. என்றைக்கும் அறிவு மட்டும் வாழ்க்கைக்கு போதாது. தன்னம்பிக்கை உள்ளவனுக்குத்தான் அது சாத்தியமாகும். குடும்பத்தைப் பொறுத்தவரை குடும்ப உறவுகளுக்கு என்று சில வரைமுறைகள் உண்டு. அதில் முக்கியமானது, தம்பதிகளிடையே ஒருவருக்கொருவர் நம்பிக்கை இருந்தால் மட்டுமே குடும்ப வாழ்க்கையில் சந்தோசம் நிலைக்கும். இல்லையேல் சந்தேகமே நிலைக்கும். தன்னம்பிக்கையைப் பெறுவதற்கு உடல் ஆரோக்கியத்தைவிட, மன ஆரோக்கியமே முக்கியம். உங்கள் திறமையைப் பற்றிய சந்தேகம் உங்களுக்கு வரும்போது, என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கை உங்களுக்கு உதவும்.

நம்பிக்கை என்பது ஏழாவது அறிவு. நம்பிக்கை என்பது எமக்கு நாமே செய்யும் ஆயுள் காப்பீட்டுத்திட்டம். ஒவ்வொரு விடியலையும் நம்பிக்கையோடு எதிர்கொள். இழப்பு என்பது எதுவுமில்லை, உனது நம்பிக்கை உன்னிடம் உள்ளவரை, நம்பிக்கை இருந்தால் எதிர்நீச்சல் போட்டு வாழ்வை வெல்லலாம். சிறிதளவே நம்பிக்கையை வைத்துக் கொண்டு செயலில் இறங்கினால் இறுதியில் சோர்ந்து, துவண்டுபோய் விடுவோம். முழுவதுமாக நிரம்பப்பெற்ற நம்பிக்கையே எம்மை வாழ்வின் உச்சத்துக்குக் கொண்டு செல்லும். தன்னம்பிக்கை என்னும் உந்து சக்தியே உயர்ந்த குறிக்கோளை, அடைய உதவுகிறது. எதிர்காலம் என்றும் எம்மோடுதான். உங்களிடமுள்ள அழிவுச் சக்திகளைவிட, ஆக்கச் சக்திகளை அதிகரிக்கச் செய்யும்போது தன்னம்பிக்கை அதிகரிக்கும். அவ்வாறு ஏற்படும் நம்பிக்கையைக் குறைய விடாமல் தினம் தோறும் அவற்றை மதிப்பீடு செய்வதன் மூலம், உங்கள் கண்முன்னே தெரிவதெல்லாவற்றையும் வெற்றிப் படிக்கட்டுக்களாக ஆக்கிட முடியும். உங்களிடம் நம்பிக்கை நம்பிக்கையாகவே இருக்கிறதா என்பதைப் பொறுத்தே உங்களது வெற்றி அமையும் என்பதை மறந்து விடாதீர்கள். உலகில் இருக்கும் அனை வரும் மகிழ்ச்சியாக, ஆரோக்கியமாக வாழ்க்கையைக் கழிக்க வேண்டும் என விரும்பு கிறார் கள். அது எல்லோருக்கும் கிடைப்பதில்லை. வாழ்க்கை சிலருக்கு வெறுமையாகி விடும். வாழ்வு வளம் பெற, எந்த விடயமாக இருந்தாலும் அதனை நம்பிக்கையுடன் செய்யும் திறனை வளர்த் துக் கொள்ளுங்கள். எமது வாழ்க்கை எமது கைகளில். தன்னம்பிக்கை கொண்டு வாழ்வோமாக.

# பேராசை களைவோம்

தவக்காலம் ஆரம்பமாகிவிட்டது. இந்தத் தவக்காலத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் இறைவனைப் பிரிந்து, அவர் காட்டிய அன்புப் பாதையிலிருந்து தடம்மாறி, எமது பாதையில் சென்று கொண்டிருக்கின் றோம். இறைவனுடன் ஒன்றித்திருக்கும்போது எமது மனதிலிருந்த அமைதி, சந்தோசம், எம் குடும்பத்திலிருந்த ஒற்றுமை, நிம்மதி, இப்போது எம்மிடம் இல்லை என்பதை நாம் உணர்கின்றோம். நாம் இறைவனுடைய பாதைக்குத் திரும்பி வரவேண்டும் என எண்ணினாலும், செய்த பாவச் செயல்கள் இதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன என்று நாம் அஞ்சுகின்றோம். எனவே, நாம் பாவவாழ்வை விட்டுத் திரும்பி வரும்போது இறைவன் எம்மை ஏற்றுக்கொள்வாரா? அவ்வாறு அவர் ஏற்றுக்கொண்டாலும் நாம் இதுவரை செய்த பாவங்களின் சுமை, எம் மனதிலிருக்கும் குற்ற உணர்வுகள் எம்மை விட்டு நீங்கி நாம் மனநிம்மதியுடன் வாழ முடியுமா? இவ்வாறான சிந்தனைகள் தான் எம்மில் பலருடைய மனதிலும் எழும் கேள்விகளாகவும், எமது மனதை அலைக்கழித்துக் கொண்டிருக்கும் சிந்தனை களாகவும் காணப்படுகின்றன.




எந்த மதத்தைச் சார்ந்தவனாயிருந்தாலும் இறைவன் உண்டு என்று நம்புகிறவனாக இருந்தால், இத்தகைய உணர்வுகள் நிச்சயம் அவர்களை ஆட்டுவிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனெனில் சராசரி மனிதராகிய நாம் உடல் இச்சைகளால் ஆட்கொள் ளப்பட்டு, நொடிக்கொருமுறை இறைவனுடைய கட்டளைக்கு எதிராக நடப்பவர்கள். ஏதோ கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்பவை தான் பாவம் என்பதல்ல. எம்முடைய தேவைகளுக்கு மேல் ஆசைப்படுவதும் ஒரு பாவம்தான். எம்முடைய தேவைகளுக்கு மேல் நாம் ஆசைப்படும் போது அதற்குத் தேவையான பணம் மற்றும் பொருள்களின் மேல் ஆசை ஏற்படுகின்றது. அது எமக்குப் போதுமானதாக இல்லாத பட்சத்திலும், எம்மால் அடைய முடியாத பட்சத்திலும் நாம் தவறான வழிகளில் அவற்றைத் தேட முயல்கின்றோம். எனவே இறைவன் நாம் செய்த தவறுகளை மன்னித்து எம்மை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றால், நாம் ஏதாவது ஒரு வகையில் அதற்கு முயற்சி செய்ய வேண்டுமல்லவா? இன்று முதல் இந்தத் தவக் காலத்தில் நாம் அதைத்தான் செய்ய வேண்டும். எம்மைப் பாவத்துக்கு இட்டுச் செல்லும் தவறுகள் பலவற்றுக்கும் முதன்மைக் காரணமாக இருப்பது எம்முடைய பேராசைதான். அதை நாம் விட்டுவிட முயற்சி செய்வோம்.

செல்வி அ. சைலேந்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சூழல் அறிந்து பேசுவது நல்லது. தொழிலில் உருவாகின்ற இடையூறைச், சரி செய்ய முற்படுவீர்கள். பணவரவை விட நிர்வாகச் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**இடபம்:** உங்களின் திறமையைப் பிறர் பாராட்டுவர். தொழில் வளர்ச்சியால், பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மிதுனம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை உண்டாகும். தொழிலில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். கடன் தொல்லை நீங்கும். உறவினர்களுடன் சுற்றுலா சென்றுவரத் திட்டமிடுவீர்கள்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழிலில் புதிய சாதனை படைப்பீர்கள். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**சிங்கம்:** எதிர்கால வளர்ச்சி குறித்துத் திட்டமிடுவீர்கள். தொழில் வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். மாமன், மைத்துனருக்கு இயன்ற வகையில் உதவுவீர்கள். பெண்கள், ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கன்னி:** நற்குணம் உள்ளவரின் அறிமுகம் கிடைக்கும். புதிய உத்தியால், தொழிலில் ஆதாயம் கூடும். பெண்கள் வீட்டுச் செலவில் தாராள குணம் பின்பற்றுவர். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**துலாம்:** பேசுவதில் நிதானம் தேவைப்படும். தொழிலில், போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தை பின்பற்றவும். தாயின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை அளிக்கும்.

**விருச்சிகம்:** நண்பர்களிடம் தேவையற்ற விவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம், தாமதகதியில் இயங்கும். மிதமான பணவரவு கிடைக்கும். உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது.


**தனுசு:** உறவினர், உங்களிடம் உதவி கேட்பர். தொழில், வியாபாரத்தில், முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். குடும்பச் செலவுக்கு சேமிப்புப் பணம் பயன்படும். நேரத்துக்கு உண்பதால், ஆரோக்கியம் சீராகும்.

**மகரம்:** நேர்மையுடன் செயற்படுவீர்கள். தொழிலில், இலாபம் சுமாராக இருக்கும். குடும்பச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். வெளியூர் பயணத் திட்டத்தில் திடீர் மாற்றம் ஏற்படும்.

**கும்பம்:** நம்பகத்தன்மை இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். கடின உழைப்பால், தொழிலில் வளர்ச்சி உருவாகும். வீட்டுச் செலவில் சிக்கனம் தேவை. பெண்கள் நகையை இரவல் கொடுக்கக் கூடாது.

**மீனம்:** பொறுமையாகவும் குணத்துடனும் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். பெண்கள், தாய் வீட்டினரின் அன்பைப் பெறுவார்கள்.

# இரு நடிகர்கள் இணைவு?



"இறுதிச்சுற்று" படத்தைத் தொடர்ந்து மாதவன், புஷ்கர் - காயத்திரி இயக்கும் படத்தில் நடிக்கவிருக்கிறார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. இந்தப் படத்துக்கு "விக்ரம் வேதா" என்று பெயரிட்டிருக்கிறார்கள் என்றும், இந்தப் படத்தை "இறுதிச் சுற்று" படத்தை தயாரித்த "ஒய்நாட் ஸ்டுடியோஸ்" நிறுவனமே தயாரிக்க விருக்கிறது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரண்டு கதாநாயகர்களைக் கொண்ட பயங்கரம் மிக்க கதையாம் இந்தப் படம்! இதில் இன்னொரு நாயகனாக நடிக்க விஜய் சேது பதியிடம் பேச்சு நடத்தி வருகிறார்கள் என்றும், இந்தப் படத்தின் அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 'ஓரம் போ', 'வா' ஆகிய படங்களை இயக்கிய புஷ்கர் காயத்திரி இயக்கும் மூன்றாவது படம் இது.

**மிருதுளா** @mrithulaM · Jan 30

**அவமானம், பாராட்டு, அன்பு, புறக்கணிப்பு, அக்கறை என அனைத்தையும் ஒரே மன நிலையோடு எதிர்கொள்ள மனநோய் தேவைப் படுகிறது.**

**கார்த்திக்** @ikrthik · Jan 10

**திறந்த புத்தகமாய் இருக்காதீர்கள் தூக்கம் வராதபோது மட்டுமே படிப்பார்கள்**




**மகிந்த ரகம் -** இவங்களுக்கு.. சின்ன வயதிலையே லவ் பண்ணிட்டு சீன்போட்டு திரிவாங்க.. இப்ப ஒன்றுமே இல்லாம இருந்து யோசிப்பாங்க.

**ரணில் ரகம் -** இவங்களுக்கு லவ் செட் ஆகுதோ இல்லையோ அடுத்தவன் காதலைக் குழப்பி உடைச்சு விடுகிறது தான் வேலை...

**ஹக்கீம் ரகம் -** இவங்க எப்ப எவரை லவ் பண்ணுவாங்க.... யார் உட இருப்பாங்க என்று சொல்ல முடியாது..

**மைத்திரி ரகம் -** மனிதன் உணர்ந்து கொள்ள.. இது மனிதக் காதல் அல்ல..!! என்று சொல்லுவாங்க ..... காலம் போகத்தான் புரியும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 5 | 1 | | |
| | | | | | | | 6 | 4 |
| 5 | | | | 2 | 4 | | | 3 |
| | 6 | | 8 | | 1 | 2 | | |
| | | 9 | 5 | | 7 | | | |
| | | 1 | | | | | | 8 |
| 3 | 5 | | | 9 | | | | |
| | | 7 | | | | | | |
| | 4 | | 1 | | | | 2 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 7 | 2 | 3 | 8 | 4 | 5 | 9 |
| 4 | 2 | 9 | 5 | 1 | 6 | 3 | 7 | 8 |
| 8 | 5 | 3 | 7 | 9 | 4 | 6 | 1 | 2 |
| 1 | 7 | 4 | 8 | 2 | 3 | 9 | 6 | 5 |
| 2 | 8 | 6 | 9 | 7 | 5 | 1 | 4 | 3 |
| 9 | 3 | 5 | 6 | 4 | 1 | 2 | 8 | 7 |
| 3 | 6 | 2 | 1 | 5 | 7 | 8 | 9 | 4 |
| 7 | 4 | 1 | 3 | 8 | 9 | 5 | 2 | 6 |
| 5 | 9 | 8 | 4 | 6 | 2 | 7 | 3 | 1 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



உலகத்துல
உன்னை விட பெரியவன்
எவருமில்லை...!
அதனால் நீ எவருக்கும்
பயப்படாதே...
அதே போல
உன்னைவிட சின்னவன்
எவருமில்லை...
அதனால எவரையும்
தாழ்வா
நினைக்காதே....!

நீ விரும்புவதை
செய்வதில்
உன் சுதந்திரம்
அடங்கி உள்ளது,
நீ செய்வதை
விரும்புவதில்
உன் மகிழ்ச்சி
அடங்கி உள்ளது...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 40 | 40 | 30 | 60 | 30 | 30 |
| கத்தரி | 50 | 60 | 80 | 80 | 50 | 80 | 70 | 70 |
| கரட் | 180 | 200 | 240 | 180 | 140 | 240 | 160 | 160 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 35 |
| பயிற்றை | 100 | 80 | 100 | 80 | 80 | 80 | 60 | 60 |
| பாகல் | 80 | 100 | 80 | 100 | 100 | 120 | 60 | 60 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 70 | 60 | 50 | 90 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 70 | 60 | 50 | 70 | 50 | 50 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 80 | 80 | 60 | 80 | 70 | 70 |
| பூசணி | 80 | 70 | 100 | 60 | 50 | 120 | 70 | 70 |
| தக்காளி | 50 | 50 | 60 | 60 | 50 | 80 | 60 | 60 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 50 | 60 | 40 | 45 | 45 |
| கீரை | 20 | 30 | 25 | 10 | 20 | 30 | 15 | 15 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20 | 30 | 20 | 20 |
| பச்சை மிளகாய் | 150 | 180 | 200 | 140 | 160 | 240 | 150 | 150 |
| புடோல் | 60 | 80 | 60 | 40 | 50 | 80 | 40 | 40 |
| கோவா | 80 | 80 | 60 | 80 | 50 | 80 | 60 | 60 |
| வெண்டி | 100 | 100 | 80 | 60 | 100 | 120 | 70 | 70 |
| போஞ்சி | 70 | 80 | 120 | 80 | 60 | 120 | 40 | 40 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 100 | 160 | 60 | 60 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 30–45 | 30–45 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 60 | 50 | 60 | 50 | 50 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 80 | 60 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 30 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 240 | 240 | 200 | 180 | 160 | 180 | 160 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 100 | 140 | 150 | 90 | 90 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 600 | 350 | 600 | 600 | 450 | 450 |
| பனங்கிழங்கு | 04 | 02.50 | 05 | 02 | 07 | – | 03 | 02 |





## ஆண்களுக்கான ரீ–சேட்

ஆண்களுக்கான முழுக்கை ரீ–சேட் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பிரின்ரட் துணியில் இந்த வகை ரீ–சேட்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை 900 ரூபாவிலிருந்து 1,000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

## நாளை


மாசி-08
சனிக்கிழமை 20.02.2016
திதி: திரயோதசி மு.இ.11.14
நட்சத்திரம்: பூசம் பி.இ.05.13
ராகுகாலம்: 09.32-11.02 வரை
சுபநேரம்: 03.32-05.02 வரை
சனிப் பிரதோஷ விரதம்



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 600 | 650 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 500 | 300 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 450 | .500 | 500 | 600 | 600 | 500 | 450 |
| சுறா | 400 | 600 | 600 | 800 | 700 | – | – |
| சீலா | 250 | 400 | 400 | 450 | 400 | 450 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 500 | 550 | 300 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 500 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | – | 350 |
| கிழாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 300 | 400 | – | – | 450 | – | 350 |
| திரளி | 200 | 200 | 200 | 200 | 300 | 200 | 350 |
| நகரை | 150 | 250 | – | 300 | 300 | – | 300 |
| சூடை | 100 | 150 | 100 | 200 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 250 | 200 | 150 | 250 | 300 | 250 | 250 |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 300 | 300 | 150 |
| மதனம் | 100 | 200 | 180 | 300 | 250 | 300 | 300 |
| கொய் | 80 | 150 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 300 | 200 | 250 | 400 | 300 | 300 | – |
| வாழை | 100 | – | 200 | 300 | 200 | 300 | 250 |



## தக்காளியைப் பாதுகாக்க

- தக்காளியைப் பத்திரமாகப் பாதுகாக்க ஒரு சுலபமான வழி உள்ளது. அதனை தண்ணீரில் போட்டு வைத்தால் போதும். எளிதில் அழுகாது.
- தக்காளி காயாக இருந்தால், அதனைப் பச்சையாக உடனே குளிர்சாதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.
- தக்காளியின் காம்புப்பாகம் பாத்திரத்தில் படும் படியாக வைத்து, அது பழுத்த பின்னர் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும்.




**தேவையானவை:**
கோழி இறைச்சி – அரைக் கிலோ
எலுமிச்சைச்சாறு – 3 கரண்டி
குடை மிளகாய் - 3
சோளமா - 6 கரண்டி
மிளகுத்தூள் – 2 கரண்டி
சிக்கன் ஸ்டாக் - 1 கப்
எண்ணெய், உப்பு - தேவைகேற்ப

## செய்முறை:

கோழிஇறைச்சித் துண்டுகளை எலும்புகள் நீக்கி, நன்கு கழுவிச் சுத்தம் செய்து கொள்ளவும். ஒரு கரண்டி எலுமிச்சைச் சாறு எடுத்து, அதில் தேவையான அளவு உப்புச் சேர்த்து, கோழித் துண்டங்கள் மீது தடவி ஊறவையுங்கள். இரண்டுகரண்டி சோளமாவை அரைக்கப் நீரில் கரைத்துக் கொள்ள வேண்டும். குடை மிள காய்களின் [illegible] விட்டு நறுக்கிக் கொள்ள[illegible] ஒரு சட்டியில் பொரிக்கும் அளவுக்கு எண்ணெய் விட்டு, சூடேறியதும் ஊற வைத்துள்ள கோழிஇறைச்சித்துண்டங்களை கார்ன்ஸ்டார்சில் புரட்டி எண்ணெயில் போட்டு பொரித்து எடுக்க வேண்டும். பொன்னிறமாக வெந்தவுடன் எடுத்துத் தனியே வைக்கவும். மற்றொரு சட்டியில் இரண்டு கரண்டி எண்ணெய் விட்டு நறுக்கி வைத்துள்ள குடை மிளகாய் துண்[illegible] வதக்க வேண்டும். [illegible]ள், தேவையான உப்பு, சிக்கன் ஸ்டாக் ஆகியவற்றைச் சேர்த்து கொதிக்கவிட வேண்டும். நன்கு கொதிக்கும் போது கரைத்து வைத்துள்ள கார்ன்ஸ்டாச்சை ஊற்றிக் கலந்து மிதமான சுவாலையில் வேகவிட வேண்டும். குழம்பு கெட்டியானவுடன் பொரித்து வைத்துள்ள கோழி இறைச்சி துண்டுகளைப் போட்டு மேலும் சில நிமிடங்கள் குறைந்த சுவாலையில் வேகவிட வேண்டும். மீதமுள்ள எலுமிச்சைச்சாற்றை ஊற்றிக் கலந்து இறக்கி சூடாகப் பரிமாற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்

## மிகக் குறைந்த விலையில் இந்திய தொடுதிரை கைபேசி

ரிங்கிங் பெல்ஸ் என்ற நிறுவனம் மிகவும் குறைவான விலையில் பிரிடம் 251 என்ற தொடுதிரைக் கை பேசியை இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது.



இந்த கை பேசியில், 4.1 அங்குலத் தொடுதிரை, சேமிப்பு வசதியாக 1ஜிபி நினைவகம், 8 ஜிபி மற்றும் விரிவாகக் கூடிய சேமிப்பு வதியாக 32 ஜிபி வசதி கொண்டதாவும், அன்ரொய்ட் லொலிபொப் 5.1 இயக்குதளத்துடனும் வெளியாகியுள்ளது.

இதன் விலை 251 இந்திய ரூபாவாகும். இந்த கைபேசி இணையத் தளம் மூலம் விற்பனை செய்யப்படுவதுடன் அதன் விற்பனை நாளை 20 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. எனினும் மேலதிக தகவல்களை அந்நிறுவனம் வெளியிடவில்லை.

## லெனோவாவின் புதிய வெளியீடு

லெனோவா நிறுவனம் லெனோவா வைப் பி1 ரேபொ எனும் தொடுதிரைக் கைபேசியை அறிமுகப்படுத்தியுள்ளது.



இரண்டு சிம் உபயோகிக்கக் கூடிய இந்தக் கைபேசி அண்ரொய்ட் 5.1 லொலிப்பொப் மூலம் இயங்குகின்றது.

401 பிக்சல் தீர்மானம் மற்றும் 1080X1920 பிக்சல்கள் தீர்மானம் கொண்ட 5.5 அங்குல முழு ஹச்டி திரையை இந்தக் கைபேசி கொண்டுள்ளது.

இதில் மைக்ரோ எஸ்டி அட்டை வழியாக 128ஜிபி வரை விரிவாக்கக்கூடிய 32ஜிபி உள்ளடங்கிய சேமிப்பு உடன் வருகிறது. அத்துடன் எல்ஈடி கொண்ட 13 மெகாபிக்சல் பின்புற கமரா மற்றும் 5 மெகாபிக்சல் முன் எதிர்கொள்ளும் கமராவுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## நிலநடுக்கத்தை கண்டுபிடிக்கும் செயலி

அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் அண்ரொய்ட் தொடுதிரை கைபேசிகள் மூலம் நிலநடுக்கத்தைக் கண்டறியும் செயலியை உருவாக்கியுள்ளனர்.

மைசேக் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தச் செயலி நிலநடுக்கத்தை முன்கூட்டியே கணித்துவிடுகிறது.

அதாவது, ஒரு இடத்தில் நிலநடுக்கம் நிகழப்போகிறது என்றால், அந்த இடம் மற்றும் நேரம் அதுமட்டுமன்றி அதன் அதிர்வீச்சு போன்றவற்றை துல்லியமாக ஆராய்வு செய்து உடனடியாக அது சம்பந்தப்பட்ட தகவல்கள் அனைத்தையும் கைபேசிக்கு அனுப்புகின்றது.

60 சதவீதம் வரையிலான அண்ரொய்ட் தொடுதிரை கைபேசிகள் சுமார் 6 மைல் (10 கிலோ மீற்றர்) வரையிலான தூரத்தில் நிகழும் நிலநடுக்கத்தைத்தரவு அடிப்படையில், மிகத்துல்லியமாகக்கணிக்கும் என உறுதியாக கூற முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கலிபோர்னியாவில் 16 மில்லியன் தொடுதிரைக் கைபேசிகள் மற்றும் உலக அளவில் 1 பில்லியன் கைபேசிகளில் இந்த செயலி பொருத்தப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.





# கொமர்ஷல் வங்கியின் ரன்சலு சலுகை அட்டை

கொமர்ஷல் வங்கி ஜே.ஏ.ஏ.எவ். உடனும், ஊழியர் நம்பகத் திட்டமொன்றை முகாமைப்படுத்தி வரும் சனல்– 17 உடனும், பங்குடைமையை ஏற்படுத்தியுள்ளதன் மூலம், இலங்கையின் ஆடை உற்பத்தித்துறை நிறுவனங்களுக்கு விசேட அனுகூலங்களைக் கொண்ட தனித்துவமான கடன் அட்டையை வழங்க முன் வந்துள்ளது.

ஜே.ஏ.ஏ.எவ். செயற்படுத்திவரும் ரன்சலு சலுகைத் திட்டத்தின் எந்தவொரு அங்கத்தவரும், கொமர்ஷல் வங்கியில் கணக்கை வைத்திருக்கும் அல்லது கணக்கை ஆரம்பிக்கும் பட்சத்தில் அவருக்கு “ரன்சலு சலுகை அட்டை” இலவசமாக வழங்கப்படும்.

இந்த டெபிட் கார்ட் உரிமையாளர்கள், ஏற்கெனவே ரன்சலு திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்களுக்கு மேலதிகமாக வழமையான கொமர்ஷல் வங்கி டெபிட் கார்ட்தாரர்கள் அனுபவிக்கும் பரந்த அளவிலான தள்ளுபடிகளையும் மற்றும் சலுகைகளையும்பெற்றுக் கொள்ளத் தகுதி உடையவர்களாவர். 350,000 பேர் அங்கம் வகிக்கும் ரன்சலு நம்பக திட்டத்திலிருந்து அனுகூலங்களைக் கோருவதற்கு இந்த அட்டை ஒரு அடையாளச் சின்னமாகவும் விளங்கும்.

> “நாட்டில் மிகப்பெரும் தனியான கைத்தொழில் தொழில்தருநரும் வேகமாக வளர்ந்துவரும் தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் சக்தியுமான ஆடை உற்பத்தித் துறைக்கு ரன்சலு நம்பகத்திட்டம் நாடளாவிய உந்து சக்தியைத்தருகிறது.”

சனல்– 17 பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுமர் பிறீனா கருத்துத் தெரிவித்த போது கூறியதாவது:- “நாட்டில் மிகப்பெரும் தனி யான கைத்தொழில் தொழில்தருநரும் வேகமாக வளர்ந்து வரும் தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் சக்தியுமான ஆடை உற்பத்திதுறைக்கு ரன்சலு நம்பகத் திட்டம் நாடளாவிய உந்துசக்தியைத் தருகிறது. சனல்-17, இன் தனித்துவமான நம்பக திட்டத்துக்கு கைத்தொழில் வர்த்தக அமைச்சு முழு ஆதரவை வழங்கி வருகிறது.

தேசிய மொபைல் தொலைத் தொடர்பு சேவைகள் வழங்கு நரான, மொபிடெல், தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை வழங்கிவரும் அதேவேளை லேக்ஹவுஸ் அச்சகத்தாரும் வெளியீட்டாளர்களும் உத்தியோகபூர்வ கார்ட் வழங்குநர்களாவர்.

ஆடை உற்பத்தித் தொழிலாளர்களில் அனேகமானோருக்கு வங்கிச் சேவைகளை வழங்கி வரும் கொமர்ஷல் வங்கி இந்தத் திட்டத்துக்கு மிகவும் வரவேற்கத்தக்க சக்தியாகவும் விளங்குகின்றது–” என்றார்.

(த)

# டி.எச்.எல் ஆசிய பசுபிக் புத்தாக்க நிலையம்



சரக்கியல் உலகின் தொலை நோக்குப்பார்வையை வழங்கும் வகையிலும், விநியோக வலையமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய புத்தாக்கத் தீர்வுகளை விருத்தி செய்யும்வகையிலும் அண்மையில் சிங்கப்பூரில் அதன் ஆசிய பசுபிக் புத்தாக்க நிலையத்தை டி.எச்.எல் அங்குரார்ப்பணம் செய்திருந்தது. பல மில்லியன் ரூபா பெறுமதியான இந்த நிலையம், ஜேர்மனிக்கு வெளியே நிர்மாணிக்கப்பட்டிருக்கும் டி.எச்.எல். முதலாவது புத்தாக்க நிலையமாக உள்ளதுடன், ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் புத்தமைவான சரக்கியல் சேவைகளை வழங்குவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட முதலாவது நிலையமாகவும் திகழ்கிறது. 160 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான டி.எச்.எல் விநியோகச் சங்கிலி மேம்படுத்தப்பட்ட பிராந்திய நிலையத்தின் கட்டட வளாகம், சிங்கப்பூரில் உள்ள டெம்பைன்ஸ் லொகிஸ் பூங்காவில் அமைந்துள்ளது.

டி.எச்.எல். நிறுவனத்தின் பிரதம வர்த்தக அதிகாரியான பில் மெஹல் கருத்துத் தெரிவிக்கையில்: “எமது வளர்ந்துவரும் சந்தைகள் மூலமாக 2020ஆம் ஆண்டளவில் டி.எச்.எல் இன் உலகளாவிய வருவாயில் 30 வீதத்தை ஈட்டிக்கொள்ள நாம் எதிர்பார்த்துள்ளோம். புதிய தொழில்நுட்பங்கள், செயல்முறைகள் மற்றும் உற்பத்திகள் ஊடாக எமது சேவைகளைச் சந் தைகளுக்கேற்ப வேறுபடுத்தி எமது நிலையான துறைசார் தலை மைத்துவத் தேவைகளை வெற்றி கரமாக முன்னெடுத்து வருகி றோம். ஜேர்மனியிலுள்ள எமது முதலாவது நிலையத்தின் வெற்றியைத் தொடர்ந்து, புத்துருவாக்கத்தில் எமது தலைமைத்துவத்தை பேணும் வகையில் சிங்கப்பூர் ஆசிய பசுபிக் நிலைய அங்குரார்ப்பணம் அமைந்துள்ளது” –என்றார்.

(த)

## வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிதண்ணீர்

களில் தண்ணீரில் எண்ணெய் கலந்தமை தொடர்பான வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஜூட்சன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த தவணை இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் உள்ளிட்ட சில அதிகாரிகளை அடுத்த தவணை நீதிமன்றில் முற்படுமாறும் அறிவித்தல் அனுப்பியிருந்தது.

அதன்படி நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மாகாண அமைச்சர் ஐங்கரநேசன் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. ஏனைய அதிகாரிகள் முன்னிலையாகியிருந்தனர். ஐங்கரநேசன் சார்பில் ஒரு உத்தியோகத்தர் நீதிமன்றில் முன்னிலையாகிக் கடிதம் ஒன்றைக் கொடுத்து ஐங்கரநேசனின் சார்பில் தான் வந்துள்ளதைத் தெரிவித்தார்.

அதனை ஏற்க மறுத்த நீதிமன்று, உரியவர் நீதிமன்றுக்குச் சமூகமளிக்காமை தொடர்பில் அந்த உத்தியோகத்தரை எச்சரித்தது. ஐங்கரநேசனுக்குப் பிடியாணை பிறப்பிக்கவுள்ளதாகவும் இதன்போது நீதிமன்று தெரிவித்தது. சுமார் 30 நிமிடங்கள் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டது. அவ்வாறு வழக்கு ஆரம்பமான பின்னர் ஐங்கரநேசன் சார்பில் சட்டத்தரணி எஸ். வரதராசா நீதிமன்றில் முன்னிலையானார்.

வழக்குத் தொடுநர்கள் சார்பில் சட்டத்தரணிகளான சோ.சோபிதன், கே.சுகாஸ், பா.பார்த்தீபன், சோ.தேவராசா ஆகியோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் முன்னிலையாகியிருந்தார்.

வழக்கு விசாரணையின்போது தண்ணீர் விநியோகம் தொடர்பில் வடக்கு மாகாண சபைக்குப் பொறுப்பு இல்லை என்று ஐங்கரநேசன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வரதராசா நீதிமன்றில் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தண்ணீர் வழங்கவேண்டிய கடப்பாடு தமக்கு வடக்கு மாகாண சபைக்கு இல்லை. அது மத்திய அரசின் பொறுப்பு. மனிதாபிமான அடிப்படையில்தான் வடக்கு மாகாண சபை சில மாதங்களாகத் தண்ணீர் விநியோகித்தது என்று ஐங்கரநேசனின் பதிலை அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வரதராசா தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட நீதிமன்று, அது மத்திய அரசின் பொறுப்பு என்றால், எதற்காக நிபுணர்களை நியமித்து ஆய்வுகள் மேற்கொண்டனர்? அதனை ஏன் வெளிப்படுத்தினர்? இந்த வழக்கு நீதிமன்ற நிலுவையில் உள்ள நிலையில் எதற்காக இந்த வழக்குப் பற்றி பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டுவருகின்றார்? இந்தப் பணி மத்திய அரசுக்கு உள்ளது என்றால் எதற்காக அந்த விடயத்தில் அவர் தலையிட்டார் என்று கேட்ட நீதிமன்று, இந்த விடயங்களுக்கு அடுத்த தவணை நீதிமன்றுக்கு வந்து தெளிவுபடுத்தவேண்டும் என்றும் உத்தரவிட்டது.

குறித்த பிரதேச மக்களுக்கு முன்னர் தண்ணீர் வழங்க அனுமதியளித்த மத்திய அரசு பின்னர் அதனை இடைநிறுத்தியுள்ளது. குறித்த பிரதேசத்துக்குத் தண்ணீர் வழங்க நிதி இல்லை என்று மத்திய அரசு யாழ்.மாவட்ட செயலகத்துக்கு அறிவித்துள்ளது. இதனால் நிதி இல்லை என்று அரச அதிபரும் அறிவித்துள்ளார். இந்நிலையில் இடர் முகாமைத்து நிலையத்தினர், தமது அமைச்சின் செயலாளர் நிதி வழங்கப்படாது என்று கூறிச் சிங்களத்தில் அனுப்பியிருந்த கடிதத்தை நிதிமன்றில் சமர்ப்பித்தார். அதில் உள்ள விடயம் என்ன என்று பொலிஸ் உத்தியோகத்தர் மூலமாக மன்றில் வாசித்துக் காட்டப்பட்டது. அதன்பின்னர் அவ்வாறு நிதியை இடைநிறுத்தியமை தொடர்பில் விளக்கம் கேட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிமன்று பணித்தது.

வழக்கில் குறிப்பிடப்படும் ஆய்வுகள் விடயத்தில் 5 இடங்களிலுள்ள கிணறுகளில் ஈயம் உள்ளிட்ட உலோகங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அந்தக் கிணறுகள் எங்கு உள்ளன என்று சுகாதார வைத்திய அதிகாரி ஒருவர் கேட்டதற்கு, அது பற்றிய அறிக்கை நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டதாகத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை முகாமையாளர் தெரிவித்தார்.

இந்த வழக்கு எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டதோடு அன்றைய தினம் மாகாண அமைச்சர் மன்றில் முன்னிலையாகி உரிய தெளிவை மன்றுக்குக் கூறவேண்டும் என்றும், நீர்வளச் சபையின் பொறுப்பதிகாரியை அடுத்த தவணை மன்றில் முன்னிலையாகுமாறும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (த-4)

## தீர்வு குறித்து

டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எடுக்கப்படும் முடிவுகள் ஓரிருவர் மாத்திரமே தனித்து எடுக்கப்படுவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பினால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதன்போது, கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், முக்கியமான தருணங்களில் அவ்வாறு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கக் கூடும் என்றும், இனிமேல் இவ்வாறு நடைபெறாது என்றும் தெரிவித்தார். அத்துடன் கூட்டமைப்பிலுள்ள அனைவரும் ஒற்றுமையாக அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தீர்வு விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 10 பேர் கொண்ட குழு நியமிப்பது என்றும், இந்தக் குழுவை அடுத்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெறும் மார்ச் 6 ஆம் திகதி நியமனம் செய்வது என்றும் நேற்று முடிவு எட்டப்பட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் போட்டியிட்டு தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் க. சிவமோகன் தொடர்பிலும் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. எவ்வாறு ஒரு அங்கத்துவக் கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு இணைபவரை ஏற்றுக்கொள்ள முடியும் என்று ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியினரால் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இதன்போது பதிலளித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, அவரை எமது கட்சியில் இணைந்து கொண்டுள்ளதாக நாம்இன்னமும்அறிவிக்கவில்லைஎன்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தச் சந்திப்பில், தமிழ் மக்கள் பேரவையுடன் தான் பேசமாட்டேன் என இரா.சம்பந்தன் தெரிவித்தார் என்று வெளியான தகவல் தொடர்பில், சந்திப்பில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனிடம் கேட்டபோது, அவ்வாறு ஒரு கருத்தையும் இரா.சம்பந்தன் தெரிவிக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், ரெலோ அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர். எல்.எப்.பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சர்வவேஸ்வரன் (ஈ.பி.ஆர்.எல். எப்.), கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் (ஈ.பி.ஆர். எல்.எப்.) ஆகியோர் பங்கேற்றிருந்தனர். புளொட் அமைப்பு சார்பில் எந்தவொரு அங்கத்தவர்களும் இதில் பங்கேற்றிருக்கவில்லை. (த-5)

## திடீரெனத்

ஜனவரி மாதம் இடம்பெற்ற தேசிய தைப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு பேசிய, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனும், வடக்கு - கிழக்கு மக்களுக்காக 65 ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணிகளை அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே திடீரென, வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு மேலதிகமாக அநுராதபுரம் - பொலநறுவை - புத்தளம் மாவட்டங்களும் 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்த மூன்று மாவட்டங்களும் போரின் பாதிப்புகளை எதிர்கொண்ட மாவட்டங்களின் அடிப்படையிலேயே இதில் உள்வாங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)


### சாந்திகம்
### உளவளத்துணை நிலையம்

**பதவி வெற்றிடம் - சமூக ஒருங்கிணைப்பாளர்கள் (Social Mobilizers))**

கடந்த பல வருடங்களாக உளவளத்துணை மற்றும் சமுதாய மட்ட உளமருத்துவ - உளசமூகத் துறையில் சேவைபுரியும் எமது நிறுவனமானது கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரு பிரதேசங்களிலும் உளசமூக மேம்பாட்டு நடவடிக்கைகளைச் செயற்படுத்தவுள்ளது. இப்பிரதேசங்களில் அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய பொருத்தமான சமூக ஒருங்கிணைப்பாளர்களை நாம் உள்ளீர்க்க விரும்புகின்றோம். எனவே இப்பிரதேசங்களில் ஏற்கனவே பணிபுரிந்த அனுபவமுள்ள உளசமூக மையக் குழு அங்கத்தவர்களும், சமூகச் செயற்பாடுகளில் ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்க முடியும். இத்திட்டமானது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும்

**விண்ணப்ப முடிவுதிகதி: 26.02.2016 வெள்ளிக்கிழமை**

**பொருத்தமானவர்கள் எனக் கருதப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.**

**விண்ணப்பப் படிவங்களை அனுப்பவேண்டிய முகவரி:**
**பணிப்பாளர்,சாந்திகம்,**
**இல.8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**


### முதலாம் வருட நினைவலைகள்

அமரர்

**கதிரவேலு பொன்னம்பலம்**

(முன்னாள் உரிமையாளர்-துர்க்கை அம்பாள் புத்தகசாலை, சாவகச்சேரி)



| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 14.03.1932 | 02.03.2015 |

திதி :பூர்வபக்க துவாதசி(19.02.2016)

எங்கள் அன்பான அப்பாவே
ஆண்டு ஒன்று கடந்தாலும்
என்றுமே மறையாது என்றுமே எங்களை
ஆசிர்வதித்துக் காத்து வருவீர்கள் உங்கள்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
வைரவப் பெருமானையும் காளி அம்பாளையும்
வணங்கித் தொழுது நிற்கின்றோம்.

ஜெயமகால்,
மீசாலை மேற்கு, மீசாலை.
[68699][12.17.18]
குடும்பத்தினர்.


### வீட்டுப் பணிப்பெண் தேவை

இருவர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு வீட்டுப் பணிப் பெண் தேவை.

தொடர்பு:- (69397) (10.17)
077 483 2367, 021 205 9455

### வீடு வாடகைக்குத் தேவை

அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பம் ஒன்றுக்கு கச்சேரி நல்லூர் வீதி, நாவலர் றோட், கோவில் வீதி மற்றும் யாழ். நகரை அண்டிய பிரதேசத்தில் வீடு வாடகைக்குத் தேவை. (69399)
தொடர்பு:- (10.17)
021 222 9363, 077 278 1158

### முச்சக்கரவண்டி விற்பனைக்கு

BAJAJ (4 Stroke)
NP AAY xxxx
தொடர்பு:- (69398) (10.17)
077 69 13 058

### இனிதா சித்த ஆயுள்வேத மருத்துவ நிலையம்

சகல ரோகங்களுக்கும் சித்த ஆயுள்வேத முறைப்படி சிறந்த வைத்தியர்களினால் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. விசேடமாக தோல்நோய்கள், மதுமேக நோயாளர்களுக்கு ஏற்படும் நீண்டகால புண், இரப்பை மற்றும் சிறுகுடல் புண்கள், மூல நோய்கள் என்பவற்றுடன் முறிவு முள்ளந்தண்டு நோய்கள் என்பவற்றுக்கு சிறந்த முறையில் சிகிச்சையினைப் பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவிலக்கம் - 8857, 14589**

**தொடர்பு கொள்வதற்கு:-** (69395) (11.17,18,20)

தொலைபேசி இலக்கம்:- 077 178 4196, 021 490 7623
முகவரி :- சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.
பார்வையிடும் நேரம் :- மதியம் 1.30 - மாலை 6.00

### வேலைவாய்ப்புக்கள்

நீங்கள் பல காலம் தேடிக்கிடைக்காத வேலையினை சில காலங்களில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

WINSTAR JOB BANK
(முன்னணி வேலைவாய்ப்பு ஆலோசனை நிலையம்)

உடன் உங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் தொடர்புகொள்ளுங்கள்

**WINSTAR JOB BANK**

#106, தபால்பெட்டிச் சந்தி,
பலாலி வீதி, திருநெல்வேலி.
T: 021 320 2789
M: 076 5450 539
Fb: winstarjaffna
(69396)(10.17)


### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

**இரத்தினம் சிதம்பரம் (சரஸ்வதி)**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.06.1937 | 20.01.2016 |

கடந்த 2016.01.20 புதன் கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி இரத்தினம் சிதம்பரம் (சரஸ்வதி) அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி மற்றும் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (19.02.2016) வெள்ளிக் கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் மறைவின்போது எமக்கு உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கியவர்களுக்கும் மரணச் சடங்கில் நேரில் கலந்துகொண்டு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி நவிலலையும் தெரிவித்துக் கொள்கின்றாம்.

ஊர்வணிகன் பற்று,
இயக்கச்சி.
(69381)(11,18,20)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து இந்திரன்



கொண்டலடி வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து இந்திரன் நேற்று (18.02.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து மற்றும் பூமணி தம்பதிகளின் அன்பு மகனும் யோகம்மாவின் அன்புக்கணவரும் லலித்ஜீவன், நிருபாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரதீபனின் அன்பு மாமனும் சிவராசா, சறோசா, ஜெயச்சந்திரன், சிறிகாந்தன், ரவீந்திரன், சுதர்சன், சுபத்திரன், சசிகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கர்னேஸ் இன் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2016) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(69404)(15,17,20)

தகவல்: **குடும்பத்தினர்.**

### சிவஞானம் கிருஷ்ணமூர்த்தி(குட்டி)
### (ஆசாரியார் கடைச்சல் பட்டறை)



யாழ்ப்பாணம், கன்னாதிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் கிருஷ்ணமூர்த்தி நேற்று (18.02.2016) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா- இராசலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் செண்பகமலரின் அன்புக் கணவரும் கஜநாத், சிவரேகா ஆகியோரின் அன்பு தந்தையும் கன்னம்மா, லோகநாயகி(கனடா), பாவநாசம் சிவன் (ஆசாரியார் கடைச்சல் பட்டறை). காலஞ்சென்ற பாமா மற்றும் வேலம்மா, கணேசன் (கனடா), ராதா (கனடா), பாலமுரளிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலாம்பிகை, விஜயன், இரகுநாதன், தேவிகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02 .2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

12/7, கன்னாதிட்டி லேன்,
யாழ்ப்பாணம்.

### சின்னையா பொன்னுத்துரை (துரை)



மட்டுவில் வடக்கு சாவகச்சேரியை (சாவகச்சேரி - புத்தூர் வீதி - பொன்னுத்துரை கடை) சேர்ந்த சின்னையா பொன்னுத்துரை 15.02.2016 திங்கட்கிழமை மாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தருமலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், சிவகௌரி (பெல்ஜியம்), சிவாகரன், பாஸ்க்கரன், ஜெயகௌரி, விசாகரன் (தீபன்)ஆகியோரின் பாசமிகு தந்தையும், சச்சிதானந்தன் (பெல்ஜியம்), ஜெயகௌரி (ஆசிரியை-யா/வசாவிளான் மத்திய கல்லூரி), ஜெயறாஜினி (ஆசிரியை- யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்), அகிலன், சர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும், டிலானி, கேசிகா, அபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2016) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் ஊரிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பொ.சிவாகரன்**
**(மகன்) குடும்பத்தினர்**
**சார்பாக.**

பன்றித்தலைச்சி அம்மன் கோயிலடி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி

(60743)
(11,17,18,20)

## மரண அறிவித்தல்கள்

### ரகு ஜித்தார்த்தனன்



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் றொறன்ரோ - கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ரகு தேவிகா தம்பதிகளின் பாசமிகு மகன் ரகு ஜித்தார்த்தனன் கடந்த (17.02.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சின்னக்கண்டு - மகேஸ்வரி தம்பதிகள் மற்றும் கோபால் - கண்மணி தம்பதிகளின் அன்புப் பேரனும் ஜினோர்த்தனனின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.02.2016) திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
கனடா:- 00141 62824973
00141 62684973
இலங்கை:- 021 222 3362
021 222 3005

தகவல்:
**குடும்பத்தினர்.**
(60743)(15,17,20)

### மரியநாயகம் மேரி றோஸ் (பூமணி)




மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் மேரி றோஸ் (பூமணி) நேற்று (18.02.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா-இன்னேசியா பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஜோசேப்பு-மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மரியதாஸின் (JP) அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மரியநாயகத்தின் (பொலிஸ்) அன்பு மனைவியும், மேரி இமெல்டா (புனிதம்), ஜோசெப் ஸ்ராலின் (சோதி - ஓய்வுபெற்ற ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர்) லூட்ஸ் (ராஜினி), லோறன்ஸ் (ஜெந்திரா- ஜெயப்பிரதா நகை மாடம், யாழ்ப்பாணம்) விக்ரர் அலொசியஸ் (பவா - Rtd.Unicef), அருள்நேசன் (ராஜன்-கனடா) ஸ்ரெல்லா கிறேஸ் (ஐடா) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

25/1, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(69403)
(10.17.20)

தகவல்: **ம.லோறன்ஸ்**
**குடும்பத்தினர்.**



### அரியநாயகம் நித்தியானந்தன்
மலர்வு: 30.06.1947 உதிர்வு: 17.02.2016

யாழ்ப்பாணம் அராலியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அரியநாயகம் நித்தியானந்தன் 17.02.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியநாயகம்-மகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், தியாகேஸ்வரியின் அன்புக் கணவரும், கீர்த்திகா (கனடா), சஞ்சுதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்வினின் (கனடா) அன்புப் பேரனும் நிர்மலா, தீவமலர், மகேஸ்வரலிங்கம் ஆகியோரின் சகோதரரும், சுஜித்தாவின் சித்தப்பாவும், சுதாகர், மயூறினி, மனோத், சங்கர், அர்ஜின் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான ஆனந்த நடராசா, ஆனந்தலக்சுமி, தங்கரத்தினம், நடேசலிங் கம், குருபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், லூசியாவின் பெரியப்பாவும், ஹேமதிவ்வியம், கோபிஷன், லோகிசன், ஹேனுஷா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.02.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

தகவல்:
**குடும்பத்தினர்.**
(69401) (10.17.20)

## மகிந்தவிடம்

உட்படுத்தப்பட்டார்.கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது சுயாதீன தொலைக் காட்சிச் சேவையில் கட்டணம் செலுத்தப்படாமல் விளம்பரம் ஒளி பரப்புச் செய்தமை தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்காக முன்னாள் ஜனாதிபதிக்கு நேற்றும் அழைப்பு விடுக்கப்பட்டதாக ஆணைக் குழுவின் செயலாளர் லெஷில் டி சில்வா குறிப்பிட்டுள்ளார். சுயாதீன தொலைக்காட்சியின் முன்னாள் தலைவர் அநுர சிறிவர்த்தனவிடம் இந்த விடயம் தொடர்பில் தற்போது வாக்கு மூலம் பதிவு செய்யப்படுவதாகவும் ஆணைக்குழுவின் செயலாளர் கூறியுள்ளார்.

அதிகாரத்தைப் பயன்படுத்தி அரச நிறுவனங்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளமை தொடர்பான முறைப்பாடு குறித்தே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பெரியளவிலான மோசடிகள் தொடர்பில் விசாரணை செய் யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த விசாரணை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் வாக்கு மூலம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


இதேவேளை விசாரணையை முடித்துத் திரும்பியபோது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராகபக்சவிடம் புதிய கட்சி ஆரம்பிக்கப்படுவது தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர். இதற்குப் பதிலளித்த அவர்:-

நான் தற்பொழுது ஒரு கட்சியில் அங்கத்தவராக இருக்கிறேன். சிறிலங்கா சுதந்திர கட்சியிலிருந்து என்னை விரட்ட முற்பட்டாலும் என்னை இலகுவில் விரட்டிவிட முடியாது.

நாடாளுமன்றத்தில் தற்பொழுது எதிர்க்கட்சியொன்று இல்லை. அதனால் மக்களின் கருத்துக்ககளைத் தெரிவிக்க எதிர்க்கட்சியொன்று தேவையாகவுள்ளது. அதுதான் தற்பொழுது எழுந்துள்ள பிரச்சினை. அதற்காக ஒரு குழு இருக்கவேண்டும். அவ்வாறில்லை எனில் நாட்டில் ஜனநாயகம் காணப்படுவதாகத் தெரிவிப்பது எவ்வாறு? –என்றார். (த-வ-5)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா பாலசிங்கம்
பிறப்பு : 12.06.1930 இறப்பு : 14.02.2016



யாழ். கொக்குவில் நந்தாவிலைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாலசிங்கம் 14.02.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், நாராயணபிள்ளை (மாவிட்டபுரம்) கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பிறேமரஞ்சனி, தில்லைராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ராமர், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நடராஜா, நாகேஸ்வரி(மலேசியா), காலஞ்சென்ற நாகராஜா, நவரட்ணம் (இலங்கை), நற்குணரட்ணம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், குணரட்ணசிங்கம், நளினி ஆகியோரின் அன்பு மாமனும், லக்ஷ்மி, விதுரன், பார்கவி, தருண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.02.2016 லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**நந்தாவில்,கொக்குவில்.**
+447814643273
+44208 9046963.

(C/29170)
(10.17)

தகவல்:
**செல்லத்துரை**
**செல்வராசா (நாதன்)**

### தம்பிராஜா சற்குணாநந்தன்

தாயின் அரவணைப்பில்
28 . 02 . 1962



ஆண்டவன் அரவணைப்பில்
16 . 02 . 2016

உரும்பிராய் கிழக்கு சிவபூதநாதேஸ்வரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கனடாவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா சற்குணாநந்தன் 16.02.2016 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராஜா மற்றும் நாகரெத்தினம் (கனடா) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - ராஜபூபதி தம்பதிகளின் அன்பு மருமகனும், உதயராணியின் அன்புக் கணவரும், நிவேதாவின் அன்புத் தந்தையும், சதீசன் (கனடா), சுதீசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (22.02.2016) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**இ.இராஜகோபால்**
**(சித்தப்பா)**

**கோண்டாவில் கிழக்கு.** (69330) (11,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.வடக்கு

நிறைவேற்றினர்.
இந்தத் தீர்மானம் உடனடியாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.
பலாலி விமான நிலைய அபிவிருத்தியா ? மீள்குடியமர்வா ? என்பது தொடர்பில் ஆராயும் கூட்டம், யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.
ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை.சேனாதிராசா, இ.அங்கஜன் மற்றும் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது. யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தொடக்கவுரை நிகழ்த்தினார்.
இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த இணைத் தலைவர்களான முதலமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா ஆகியோர், மக்கள் முதலில் மீள்குடியமர்த்தப்படவேண்டும். இராணுவத்தினர் வெளியேற்றப்படவேண்டும் என்று குறிப்பிட்டனர்.
இதன் பின்னர் கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், விமான நிலையத்தைப் பலாலியில் அமைக்க வேண்டிய கட்டாயம் இல்லை. இதனைப் பூநகரியில் அமைக்க முடியும். 15 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த யோசனை பேராசிரியர்களினால் முன்வைக்கப்பட்டது என்று தெரிவித்தார்.
வலி.வடக்கு மீள்குடியேற்றச் சங்கங்களின் பிரதிநிதிகள், மயிலிட்டி மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில், நிவாரணம் மற்றும் விமான நிலையம் என்பன எமக்குத் தேவையில்லை. எம்முடைய காணிகள் விடுவிக்கப்படவேண்டும். தற்போது நலன்புரி முகாம்களில் சொல்ல முடியாத துயரத்தில் வாழ்கின்றோம்.
கடலைச் சார்ந்து வாழ்ந்தவர்கள் என்பதால் வேறு தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடிவதில்லை. இலங்கையின் இரண்டாவது பெரிய துறைமுகமான மயிலிட்டித் துறைமுகமும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள 12 கிலோ மீற்றர் நீளமான கடற்பரப்பும் எம்முடைய தொழில் நடவடிக்கைகளுக்காகத் தரப்படுதல் வேண்டும். எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் எம்முடைய காணிகள் விடுவிக்கப்படாது விடில் அனைவரும் ஒன்றிணைந்து எம்முடைய பிரதேசத்திற்குள் உட்புகுவோம். எவரும் எம்மைக் கட்டுப்படுத்த முடியாது - என்றனர். (த-5-ரி5)

## குற்றச்சாட்டை

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மீது பதினொரு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அது தொடர்பில்வடக்குமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் விசாரணை முன்னெடுக்க வேண்டும் என்ற பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்தது.
இதன்போது கருத்துத் தெரிவித்திருந்த ஆளும் கட்சி உறுப்பினர் எம்.தியாகராசா, ஏனைய அமைச்சர்கள் அமைச்சு மட்ட ஆலோசனைக் குழுக் கூட்டங்களை நடத்துகின்றனர். விவசாய அமைச்சர் இதுவரைஎத்தனை அமைச்சு மட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்தை நடத்தியிருப்பார்? முதலமைச்சரால் இதற்குப் பதில் சொல்ல முடியுமா என்றும் கேள்வி எழுப்பியிருந்தார்.
இவ்வாறானதொரு நிலையில் எதிர்வரும் 23 ஆம் திகதி அமைச்சு மட்ட ஆலோசனைக் குழுக் கூட்டம், வடக்கு மாகாண விவசாய அமைச்சு அலுவலகத்தில் இடம் பெறவுள்ளதாக உறுப்பினர்களுக்குக் கடிதம் மூலம் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அறிவித்துள்ளார். (த-5-9)

## வன்புணர்வின்

வவுனியா வைத்தியசாலையில் வைத்து குறித்த சிறுமியினது உடற்கூற்றுப் பரிசோதனையை மேற்கொண்டார். இதன்போதே அந்தச் சிறுமி வன்புணர்வுக்கு உட்படுதப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்ததாக திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிவநாதன் கிஸோர் தெரிவித்துள்ளார்.
சிறுமியின் உடலில் காணப்படும் காயங்கள் மற்றும் ஏனைய அவதானிப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு, குறித்த சிறுமி வன்புணர்வின் பின்னர் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் ஏற்கெனவே சந்தேகித்த நிலையில், அது நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
வவுனியா உக்கிளாங்குளம் 4 ஆவது ஒழுங் கையைச் சேர்ந்த கெங்காதரன் கரிஸ்ணவி (வயது 13) என்ற மாணவியே வன்புணர்வின் பின்னர் தூக்கிலிடப் பட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.
குறித்த சிறுமி தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவரது தாயார் வேலைக்குச் சென்றிருந்த சமயம், அந்த மாணவி வீட்டில் தனியாக இருந்துள்ளார். தாயார் வீட்டுக்குத்திரும்பிச் சென்றபோது, சிறுமி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார். குறித்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
கடந்த மே மாதம் யாழ்.புங்குடுதீவில் வித்தியா என்ற மாணவி வன்புணர்வுக்கு உட்படுத் தப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்றி ருந்தது. அவர் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.
இந்தநிலையில் கிட்டதட்ட அதே பாணியில் வவுனியா மாணவி உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (வ-4,21)

## போர்ப்

வான் பரப்பில் மிகை ஒலிப் போர் விமானங்கள் அடிக்கடி வந்து செல்வதாகத் தெரிவித்துள்ள விமானப் படையினர், இது தொடர்பில் பொது மக்கள் எவரும் அச்சமடையத்தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.
யாழ்.குடாநாட்டு வான் பரப்பில் நேற்றுக் காலை 6.15 மணிக்கு திடீரென மிகைஒலிப் போர் விமா னம் ஒன்று நுழைந்து நான்கு தடவைகளுக்கு மேல் வட்டமடித்தது. காலையில் திடீரென இந் தச் சத்தத்தைக் கேட்ட மக்கள் திகைப்படைந் தனர். இதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமையும் பி.ப. 2.30 மணியளவில் மிகை ஒலிப் போர் விமானம் ஒன்று யாழ்.குடாநாட்டு வான் பரப்பில் பிரவேசித்திருந்தது.
போர் முடிவுற்றுள்ள நிலையில் விமானங்கள் தொடர்ச்சியாக குடா நாட்டு வான் பரப்பில் திடீ ரென ஏன் பறக்கின்றன என்பது தொடர்பில் விமா னப் படையின் ஊடக அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, கடற் படையினரும் விமானப் படையினரும் இணைந்து பருத்தித்துறைக் கடற் பரப்பில் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். இதன் காரணமாகவே குடாநாட்டு வான் பரப்பில் போர் விமானங்கள் பறந் துள்ளன. இது தொடர்பில் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை - என்றனர்.
(த-5-22)


## கண்ணீர் அஞ்சலி



எமது கழக அங்கத்தவர்களான
**பிறேமரஞ்சனி, தில்லைராஜன்**
ஆகியோரின் அன்புத்தந்தையான
நந்தாவில் கொக்குவிலைச் சேர்ந்த
**செல்லையா பாலசிங்கம்**
14.02.2016 லண்டனில் காலமான
செய்தியை அறிந்து துயரடைவதுடன்
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வளர்மதி முன்னேற்றக்கழகம்,
வளர்மதி நிறை வாழ்வகம்
சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.

(c/29171)(15,17)

## மரண அறிவித்தல்



**யோசேப் அன்ரன் ஜெயக்குமார்**
**(ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் - நாரந்தனை )**

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் யோசேப் அன்ரன் ஜெயக்குமார் நேற்று 18.02.2016 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற யோசேப் மற்றும் ஞானப்பூ தம்பதிகளின் மூத்த மகனும், யோ.யோன்சன் ராஜ்குமார் (ஆசிரியர் - திருக்குடும்ப கன்னியர் மடம், பிரதி இயக்குநர் திருமறைக் கலா மன்றம்), திருமதி உ.பிறேமளா ஜெயறோஸ் (நூலகர் யாழ். இந்து மகளிர் கல்லூரி), திருமதி றெ.மரிய அசம்ரா (ஆசிரியர் யாழ்.நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்), திருமதி ச.ஜெயராணி, மஞ்சுளா (அபிவிருத்தி உத்தியோகத்தர் சமூக சேவைகள் திணைக்களம் கைதடி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருமதி யோ.றுஜந்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ்.கல்விக்கோட்டம்), கு.உமாகாந் (யாழ்.போதனா வைத்தியசாலை), பி.றெஜினோல்ட் சாந்தகுமார்(இலங்கை போக்குவரத்துச் சபை யாழ்ப்பாணம்), ஆ.சதீஸ்குமார் (கால் நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும், உ.டிலக்சிகா, உ.யோய்டிலக்சன், உ.டிலக் சனா, உ.எறின் டீனுஜா, றெ.றொகானா, றெ.நிதர்சனா, ச.ஷெறொனிக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும், யோ.அபிஷேக், யோ.அனந்திகா, யோ.அனோமிகா ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.
அன்னாரின் பூதவுடல் நாளை 20.02.2016 சனிக்கிழமை இல.793 நாவலர் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியிலிருந்து பி.ப.2.30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத் தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியின் பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இல. 793
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்**

**தகவல்
யோ.யோண்சன் ராஜ்குமார்
(சகோதரன்)**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
30 - 08 - 1931



**மறைவு**
18 - 02 - 2016

**திருமதி கமலாம்பிகை துரையப்பா**

வேலணைகிழக்கைப் பிறப்பிடமாகவும் 8ம் வாய்க்கால் உருத்திரபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும் 7ம் ஒழுங்கை வேப்பங்குளம் வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் இல 160/3, திருவையாறு கிளிநொச்சியில் வசித்து வந்தவருமாகிய திருமதி கமலாம்பிகை துரையப்பா 18.02.2016 வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.
அன்னார் வேலணைகிழக்கு சுந்தரம் - பூரணம் தம்பதியினரின் சிரேஸ்ட புத்திரியும் ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியினரின் மருமகளும் கனகமணி, பத்மாவதி (நெசவுஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றசந்திரவதனா, காலஞ்சென்ற அருளானந்தசிவம் மற்றும் கருணானந்தமூர்த்தி (திருவையாறு), தர்மானந்தசிவம் (ஓய்வுநிலைஆசிரியஆலோசகர், தொழில் வழிகாட்டல் அதிகாரி யாழ் வலயம்), சச்சிதானந்தசிவம் (பிரான்ஸ்), சத்தியபாமா - ஆச்சி (வேப்பங்குளம், வவுனியா), ஜெனானந்தசிவம் (ஆசிரியர், வவு/தம்பனைச்சோலை கேதீஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மனோகரன் (8ம் வாய்க்கால் உருத்திரபுரம்), சரஸ்வதி (திருவையாறு),மாலினி ( ஆசிரியை, யா/பெரியபுலம் ம.வி), சுமித்திரா (பிரான்ஸ்), தட்சாயினி (மாவட்ட கலாசார உத்தியோகத்தர்,மாவட்டச் செயலகம், வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ரமேஸ்குமார் (லண்டன்), ரதி (பிரான்ஸ்), விஜிதா (கனடா), கவிதா (மன்னார்), காலஞ்சென்ற பிறேமா, ஜனுப்பிரியா (மாவட்டச் செயலகம்,கிளிநொச்சி), டர்சிகா (லண்டன்), பிரதீப் (பிரான்ஸ்), சிந்துஜன், லக்சிகா (வவுனியா), ஜதார்த்தன் (களனிப் பல்கலைக்கழகம்), நவீனன், நித்திலன் (கொக்குவில்), லூர்த்திகா, லூர்த்திகன், லூர்த்தனன் (பிரான்ஸ்), கஜானன், சோஜிதன் (வவுனியா) ஆகியோரின் பேர்த்தியும், கிஸானா, அக்சனா, ஆதித்தியன், லக்ஸ்சி, அர்ஜித், கிருத்திகா, சத்விகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல.160/3 திருவையாறு, கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இன்று (19.02.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக இரணைமடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலைஉற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

**தொடர்புகளுக்கு- 0772730773, 0774910881**
**தகவல்: குடும்பத்தினர்.**
(64258)(15,17,20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் ரி—20 இன்று

இங்கிலாந்து-தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் முதலாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையே நடைபெற்ற டெஸ்ட் தொடரை இங்கிலாந்தும், ஒரு நாள் தொடரைத் தென்னா பிரிக்காவும் கைப்பற்றியிருந்தன.
இதனால் ரி-20 தொடரை கைப்பற்றுவதற்கு இரு அணிகளும் கடும் போட்டி போடும். தொடரில் இரண்டு ஆட்டங்கள் முதலாவது ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி தொடர் பாதகமாக முடிய வாய்ப்பில்லை. (ம)

# உசைன் போல்ட்டை வீழ்த்துவேன் என்கிறார் அமெரிக்காவின் கேத்லின்

## பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக்கில்




பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் இந்த வருடம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் உசைன் போல்ட்டை வீழ்த்துவேன் என்று தெரிவித்துள்ளார் அமெரிக்காவின் கேத்லின்.
உலகின் அதிவேக மனிதர் என்று அழைக்கப்படுபவர் ஜமைக்காவின் ஓட்டப்பந்தய வீரரான உசேன் போல்ட். 100 மீற்றர் ஓட்டத்தில் ஒலிம்பிக் மற்றும் உலக தடகளத்தில் அசைக்க முடியாத சக்தியாக விளங்கி வருகிறார். கடந்த ஆண்டு சீனாவில் நடந்த உலக தடகள சம்பியன்சிப் தொடரின் போது 100 மீற்றர் ஓட்டத்தில் உசேன் போல்ட்டுக்கு, அமெரிக்க முன்னணி வீரர் ஜஸ்டின் கேத்லின் கடும் நெருக்கடி கொடுத்தார். ஆயினும் போல்ட்டின் ஆதிக்கத்தை தடுக்க முடியவில்லை. போல்ட் 9.79 வினாடியிலும், கேத்லின் 9.80 வினாடியிலும் இலக்கை கடந்தனர்.
இந்த நிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பிரேஸிலில் நடக்கும் ஒலிம்பிக் தொடரில் உசேன் போல்ட்டை பழிதீர்ப்பேன் என்று ஜஸ்டின் கேத்லின் சபதம் எடுத்துள்ளார். ஒலிம் பிக் தொடர் தொடர்பாக கேத்லின் தெரிவிக்கையில்;
ஒலிம்பிக்கில் நான் வெற்றி பெறப் போகிறேன்- நிச்சயம் தங்கப்பதக்கத்துடன் நாடு திரும்புவேன். ஒலிம்பிக்கில் முக்கிய பந்தயமான 100 மீற்றர் ஓட்டத்தில் மிகப் பெரிய எதிரியை தோற்கடிப்பது எனது கடமை. கடந்த ஆண்டு உலக தடகளத்தில் சொற்ப வித்தியாசத்தில் உசேன் போல்ட்டிடம் தோற்றேன். அவருக்கு நான்தான் அச்சுறுத்தலாக இருந்தேன். தற்போது அதை விட இன்னும் சிறப்பாகச் செயற்படுவதற்கு கடினமாக உழைத்து வருகிறேன்- என்றார். (ம)

# அடுத்த சங்கா என்கிறீர்களா!

இலங்கை அணியின் நட்சத்திர வீரரான திரிமன்னே இணையத்தளம் மூலம் தனது பழைய நினைவுகளைப் பற்றி பேசியுள்ளார். இணையத்தளம் ஒன்றுக்குப் பேட்டியளித்த அவர் தனது குடும்பம், ஆரம்ப காலத்தில் சந்தித்த சவால்கள் எனப் பல கேள்விகளுக்குப் பதிலளித்துள்ளார்.
தன்னுடைய மறக்க முடியாத இன்னிங்ஸ் தொடர்பாக பேசிய திரிமன்னே, பல ஆட்டங்களில் சிறப்பாக செயற்பட்டதாகவும், ஆனால் சிட்னியில் நடந்த டெஸ்டில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 98 ஓட்டங்கள் எடுத்ததை மறக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.
திரிமன்னே தெரிவிக்கையில்;
அந்த டெஸ்ட் தொடரில் நான் இல்லை. இருப்பினும் சங்கக்



காரா காயமடைந்த நிலையில், அவசரமாக வரவழைக்கப்பட்டேன். அதிகமாக பயிற்சியும் இல்லாமல் சங்காவின் இடத்தில் பெரிய பொறுப்புக்களுடன் கள மிறங்கிய நான் முதல் இன்னிங்ஸில் 98 ஓட்டங்களைக் குவித்தேன். அதேபோல் ஆசியக் கிண்ணத் தொடரின் முதல் ஆட்டத் தில் சதம் விளாசியதையும், இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி கிண்ணம் வென்றதையும் மறக்க முடியாது - என்றார். (ம)

# எனது நாயகன் ரிச்சட்ஸ் மனம் திறந்த மக்கலம்

எந்தக் காலத்திலும் தனக்கு பிடித்தமான துடுப்பாட்ட வீரர் என்றால் அது மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் தலைவரான ரிச்சட்ஸ் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் நியூசிலாந்தின் தற்போதைய தலைவரான மக்கலம்.
ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நாளை ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்டுடன் சர்வதேச கிரிக்கெட்டுக்கு முழுக்கு போட இருக்கும் நியூசிலாந்து அணியின் அதிரடி மன்னனும், தலைவருமான மக்கலம் குறித்த டெஸ்ட்டுக்கான பயிற்சி ஆட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்திக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
மேலும் தெரிவிக்கையில்;
எல்லாக் காலத்திலும் எனக்கு பிடித்தமான கிரிக் கெட் வீரர், அது தீவுகளின் முன்னாள் தலைவரான விவியன் ரிச்சட்ஸ் மட்டுமே. விளையாடிய காலம் முழுவதும் உலக கிரிக்கெட் அரங்கில் ஆதிக்கம் செலுத்தியவர் ரிச்சர்ட்ஸ். அவரது வசீகரம், துடுப்பெடுத்தாடிய விதம், அணியை வழிநடத்திய விதம் எல்லாமே அருமை. அவரை சந்திக்கும் வாய்ப்பு வெகுசீக்கிரமே கிடைத்தது.
சில நேரம் உங்களது நாயகனைச் சந்திக்கும் போது பதற்றமாக இருக்கும். ஆனால் எனக்கு அப்படி இல்லை. அவருடன் பேசி, பழகியது இனிமையான தருணமாக அமைந்தது - என்றார். (ம)

# விலகினார் வில்லியம்ஸ்

கட்டார் ரென்னிஸ் தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடரிலிருந்து தான் விலகுவதாக அறிவித்துள்ளார் செரீனா வில்லியம்ஸ்.
கட்டார் ரென்னிஸ் தொடர் நாளை மறுதினம் ஆரம்பித்து எதிர்வரும் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் தான் பங்கேற்பதை உறுதி செய்திருந்த முதல்நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் கடைசி நேரத்தில் தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உடல்தகுதியை இழந்துள்ளமையாலேயே தொடரில் இருந்து விலக வேண்டி வந்ததாக அவர் வெளிப்படுத்தியுள்ளார். (ம)



# தற்காலிகமாக பதவி விலகியுள்ளார் கென்ய தடகள அதிகாரி மவாங்கி



ஊக்கமருந்துக் குற்றச்சாட்டுக்களில் சிக்கிய வீரர்களைக் காப்பாற்றுவதற்கு இலஞ்சம் கேட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள, கென்ய தடகள சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஐசாக் மவாங்கி, அது தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவதற்காக, தனது பதவியிலிருந்து 21 நாள்கள் ஒதுங்குவதாக அறிவித்துள்ளார்.
ஊக்கமருந்துப் பாவனையில் சிக்கிய இரண்டு வீரர்களான ஜோய் சகாரி, பிரான்ஸிஸ்கோ கோகி மனுவங்கா இருவரும் தங்களது தண்டனைகளைக் குறைப்பதற்கு தங்களிடமிருந்து ஐசாக், தலா 24ஆயிரம் அமெரிக்க டொலர்களை இலஞ்சமாகக் கேட்டார் எனக் குற்றஞ்சாட்டியிருந்தனர்.
குறித்த குற்றச்சாட்டுக்களை மறுத்த ஐசாக், அவை வெறும் கட்டுக்கதைகள் எனத் தெரிவித்தார். இந்த நிலையிலேயே, தனது பதவியிலிருந்து ஒதுங்கும் விடயத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.
மவாங்கி தெரிவிக்கையில்;
எனது பெயரைக் காப்பாற்றிக் கொள்ள நான், எதிர்பார்ப்புடன் உள்ளேன்.
என் மீதான குற்றச்சாட்டுகள் பொய்யென நிரூபிக்கப்பட்டால், மீளவும் வந்து இணைந்து கொள்வேன் - எனத் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 19
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோல்டன்பிறதேர்ஸ் அணியை எதிர்த்து வட தாரகை அணி மோதவுள்ளது. (ம-23)

# வடமராட்சி வலயப் பூப்பந்தாட்டத் தொடர்களில் ஹாட்லி, நெல்லியடி மத்தி கிண்ணம் வென்றன


ஹாட்லிக் கல்லூரி


நெல்லியடி மத்திய கல்லூரி

கரணவாய், பெப். 19
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரியும் இவ்வருட வலயச் சம்பியனாகின.

நெல்லியடி மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் குறித்த ஆட்டங்கள் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், நெல்லியடி மத்திய கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின. 3 சுற்றுக்கள் கொண்ட இந்த ஆட்டத்தில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இந்த வருட வலயச் சம்பியனாகியது ஹாட்லிக் கல்லூரி அணி.

இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை புற்றளை மகா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற 15 வயதுப்பிரிவுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின.

இதில் 2:1 என்ற செற் கணக்கில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்று வலயச் சம்பியனாகியது. இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை புற்றளை மகா வித்தியாலயம் பெற்றது. (ம-108)

## மன்னார் லீக் அபாரம்

யாழ்ப்பாணம், பெப். 19
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கான யூனியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தாழ்வுப்பாடு ஆயர் ஜோசப் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

மன்னார் லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை லீக் அணி மோதிய இந்த ஆட்டத்தில் மன்னார் லீக்அணி4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)


சென்.ஹென்றிஸ்


சாகிராக் கல்லூரி

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான கொத்மலை சொக்ஸ் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியும் கொழும்பு சாகிராக் கல்லூரி அணியும் இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளன. ஆட்டம் கொழும்பு குதிரைச்சவாரித் திடலில் மாலை 4.30 மணியளவில் நடைபெறும். (ம-23)

## மருதநிலாவுக்கு இலகு வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 19
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் மருதநிலா அணி வெற்றிபெற்றுள்ளது.

வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான இந்தத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங் ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

அதில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து அம்மன் அணி மோதிக் கொண்டது. இதில் மருதநிலா அணி 3:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)


## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 19
இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் பாடசாலைகளின் 15வயதுக்கு உட்பட்ட பெண்கள் அணியினருக்கு இடையில் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்ற தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி பெண்கள் கால்பந்தாட்ட அணி, இன்று வெள்ளிக்கிழமை கல்லூரிச் சமூகத்தினரால் கௌரவிக்கப்படவுள்ளது. காலை 8 மணிக்கு கல்லூரி அதிபர் மணிசேகரன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும். கௌரவிப்பு நிகழ்வைத் தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்ட ஸ்கோர் போட் திறந்து வைக்கப்படவுள்ளது. (ம-23-86)

## கனிஷ்ட மெய்வன்மை தொடரின் விண்ணப்ப முடிவுத் திகதி நாளை

யாழ்ப்பாணம், பெப். 19
யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவினருக்கான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம், 28ஆம் திகதிகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

தொடருக்கான விண்ணப்ப முடிவு திகதி நாளை என்பதால் இது வரையில் விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெறாத பாடசாலைகள் யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் செயலாளர் திருமாறனிடம் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (ம-23)


இந்துக்களின் சமர் என்றழைக்கப்படும் யாழ்.இந்துக்கல்லூரிக்கும், கொழும்பு இந்துக்கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் நேற்று பயிற்சியில் ஈடுபட்ட யாழ். இந்துவின் வீரர்கள். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024ஆம் ஆண்டின் ஒலிம்பிக் தொடரை நடத்துவதில் லொஸ் ஏஞ்சல்ஸ் தீவிரம்

LOS ANGELES
CANDIDATE CITY
OLYMPIC GAMES 2024

2024ஆம் ஆண்டு இடம்பெற வுள்ள ஒலிம்பிக் தொடரை நடத்த விரும்பும் நகர்களில் ஒன்றான லொஸ் ஏஞ்சல்ஸ், ஒலிம்பிக் தொடருக்கான தனது இலட்சினையை வெளியிட்டுள் ளது.

2024ஆம் ஆண்டின் ஒலிம் பிக் தொடரை நடத்துவதற்கு நான்கு நகரங்கள் போட்டியிடு கின்றன. அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ், கங்கேரியின் புடா பெஸ்ட், பிரான்ஸின் பரிஸ், இத்தாலியின் உரோம் ஆகிய நான்கு நகர்களே அவ்வாறு போட்டியில் உள் ளன. இந்த நகரங்களில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் தொடரை நடத்துவதில் சற்றுக்கூடுதல் முனைப்புக் காட்டி வருகிறது. ஏற்கெ னவே மூன்று தடவைகள் ஒலிம்பிக் தொடரை நடத்தி யுள்ள லொஸ் ஏஞ்சல்ஸ், 2024ஆம் ஆண்டும் நடத்தினால் அதிக தட வைகள் ஒலிம்பிக் தொட ரை முன்னெடுத்த நகர் என்ற பெருமையைப் பெறும். இதுவே லொஸ் ஏஞ்சல்ஸின் தீவிர முயற் சிக்குக்காரணமாக அமைந் துள்ளது. தனது முயற்சி யின் பிரதான அடையாள மாக ஒலிம்பிக் தொடரில் தனது இலச்சினை என்ன வென்று அந்த நகர் தற் போதே வெளிப்படுத்தியுள்ளது. ஏனைய நகர்களும் தமது இலச்சினைகளை விரைவில் வெளிப்படுத்தும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அடுத்த வரு டம் செப்டெம்பர் மாதம் 13ஆம் திகதி, 2024ஆம் ஆண்டின் ஒலிம்பிக் தொடரை நடத்தும் நகரைத்தெரிவுசெய் வதற்கான வாக்கெடுப்பு இடம்பெறவுள் ளது. (ம)

# ஆசியாக் கிண்ணம், ரி-20 உலகக்கிண்ணம் இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது




எதிர்வரும் 24ஆம் திகதி பங்களாதேஷில் ஆரம்பமாகவுள்ள ஆசியாக்கிண்ணத் தொடருக் கானதும், அடுத்த மாதம் இந்தியாவில் நடைபெற வுள்ள ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கானது மான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட் டுள்ளது.

சமீப காலமாகத்தடுமாறி வரும் ஆரம்ப வீரரான டில்சான் இந்த இரு தொடர்களுக்குமான அணி களில் இடம் பிடித்துள்ளார். இந்தியாவுக்கு எதி ரான முதலாவது ரி-20 ஆட்டத்தில் இலங்கைக்கு வெற்றிதேடித்தந்த வேகப்பந்து வீச்சாளரான ராஜித, அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். மலிங்க, மத்தியூஸ் இருவரும் அணிக்குத்திரும்பி யுள்ளனர். மலிங்க தலைவராகவும், மத்தியூஸ் துணைத்தலைவராகவும் செயற்படவுள்ளனர். அணியின் விவரம் - மலிங்க (தலைவர்), மத்தி யூஸ், டில்சான், சந்திமல், கப்புக்கெதர, மிலிந்த சிறிவர்த்தன, டசுன் சானக்க, செகான் ஜெயசூரிய, டிக்வெல, திசர பெரேரா, துஸ்மந்த சமீர, நுவான் குலசேகர, சசித்திர சேனநாயக்க, ஜெப்ரி வண் டர்சே, கேரத். (ம)

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்

வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்
பிரிவு - I
சனி 2.00 - 5.00 மணி வரை
பிரிவு - II
திங்கள், செவ்வாய் பி.ப 5.00 - 6.30 வரை

கிராம சேவகர் தெரிவுக்கு
பிரிவு - I
ஞாயிறு 2.00 - 5.00 மணி வரை
பிரிவு - II
திங்கள், புதன் பி.ப 5.00 - 6.30 வரை

சட்டமாணி தெரிவுக்கு
ஞாயிறு 1.00 - 5.00 மணி வரை

SLAS
SLEAS
பிரிவு - I
ஞாயிறு 9.00 - 4.00 மணி வரை
பிரிவு - II
செவ்வாய் தொடக்கம் வெள்ளி வரை பி.ப 5.00 - 6.30 வரை

SLEAS
மட்டுப்படுத்தப்பட்டது
ஞாயிறு 10.00 - 4.00 மணி வரை

T.P: 076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

## இல்லமெய்வன்மைப் போட்டிகள்

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியா லயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட் டிகள் இன்று பி.ப. 2 மணிக்கு வித்தியாலயத்தி ன் மைதானத்தில் நடைபெறவுள்ளன. வித்தி யாலயத்தின் அதிபர் சு.கெங்காதரனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ் வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை அதி பர் அருந்தவச்செல்வி வேலுப்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார். (ம)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
aat
(Sri Lanka)
Foundation, Intermediate, Final (AA1, AA2, AA3)
Qualification:- G.C.E O/L 6 Passes
Medium - Tamil & English
Note:- 2015 ஆம் ஆண்டு G.C.E O/L பரீட்சை எடுத்த மாணவர்களும் இணைந்து கொள்ளலாம். 25.02.2016 பதிவுகளை முன்னர் மேற்கொள்ளவும்.
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
0212223382 / 0212229149

## ஆசியாக் கிண்ண தகுதிச் சுற்று இன்றுமுதல் ஆரம்பமாகின்றது

arise
asia
cup 2016

ஆசியாக்கிண்ணத் தொட ருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகும் நிலை யில், இன்று நடைபெறும் ஆட்டங்களில் பிற்பகல் 2.30 மணிக்கு ஆப்கா னிஸ்தானை எதிர்த்து ஐக்கிய அரபு இராச்சி யமும், இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஹொங்கொங்கை எதிர்த்து ஓமானும் மோத வுள்ளன.

ஆசியாக்கிண்ணத் தொட ரின் பிரதான ஆட்டங்கள் எதிர்வரும் 24ஆம் திகதி இந்தியா-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையி லான ஆட்டங்களுடன் ஆரம் பமாகின்றன. தொடருக்கு இந் தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ்ஆகிய பிரதான அணிகளைத்தவிர ஏனைய ஒரு அணி தகுதிச்சுற்றில் வெற்றிபெற்றுத்தகுதி பெறும். இந்த வருடத்துக்கான தகுதிச் சுற்றில் மோதும் அணிகளாக ஆப்கானிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம், ஹொங் கொங், ஓமான் ஆகியன உள் ளன. இந்த அணிகளுக்கான ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகி 22ஆம் திகதி வரை நடைபெ றவுள்ளன. தகுதிச்சுற்றில் மோதும் ஏனைய அணிகளைக் காட்டிலும் ஆப்கானிஸ்தான் பலமான அணியாகக் கருதப் படுவதால் அந்த அணிக்கான வாய்ப்புக்கள் சற்று அதிகமாக வுள்ளன. (ம)

## இலங்கை தேசிய அணிக்கான வேகப்பந்து வீச்சாளர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 19

இலங்கை தேசிய அணி க்கு வேகப்பந்து வீச்சாள ர்களைத் தெரிவு செய்வ தற்கான முகாம் ஒன்று சென்.ஜோன்ஸ் கல்லூரி யில் நாளை இடம்பெற வுள்ளது.

யாழ்ப்பாணம், கிளி நொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்க ளைச் சேர்ந்த வீரர்க ளுக்கான தெரிவுக்கா காலை 8.30 மணி தொடக்கம் இந்த முகாம் அமையவுள்ளது. இந்தத் தெரிவில் 17 வயது தொடக்கம் 23 வயது வரையான வீரர்கள் பங்குபற்றமுடியும் என வும் தெரிவிக்கப்பட்டுள் ளது. இலங்கைக் கிரிக் கெட்டின் தேசிய பயிற்று னர்கள் மற்றும் தேர்வா ளர்கள் முகாமில் கலந்து கொள்ளுகின்றனர். (ம-23)

அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
மஹா சத சண்டியாகம் - 2016

அம்பிகை அடியார்களே!
நிகழும் மங்கலகரமான மன்மத வருஷம் மாசித்திங்கள் சுக்கிலபக்ஷ மாசி மஹா மகத்தை முன்னிட்டு தைத்திங்கள் 29 ஆம் நாள் முதல் மாசித் திங்கள் 10 ஆம் நாள் வரை (12.02.2016- 22.02.2016) அருள்மிகு வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்பிகைக்கு 100 முறை சண்டி பாராணமும் 10 முறை சண்டி ஹோமமும் செய்வதற்குத் திருவருள் கைகூடியுள்ளது. ஆகவே அனைத்து அடியார்களும் 11 தினங்களும் காலை, மாலை நடைபெறுகின்ற பூஜை, மகாயாகம், இலட்சார்ச்சனைகளிற்கு வருகைதந்து மஹாகாளி, மஹாலக்ஷ்மி, மஹாசரஸ்வதி மற்றும் மஹாமுத்துமாரி திருவருளுக்கு ஆளாகும் வகையிலும் இலங்கையில் எப்பகுதியிலும் நடைபெறாத மஹாசதசண்டி ஹோமம் நம் ஆலயத்தில் மூன்றாம் முறையாக செய்வதற்கு இந்தியாவிலிருந்து சிறந்த சிவச்சாரியார்களும் இலங்கையில் பிரபல்யம் பெற்ற சிவாச்சாரியார்களும் இணைந்து நடத்துவதற்கு அம்பிகையின் திருவருள் பாலித்துள்ளது.
(சி.29165) (13.18.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.